
கல்கி
இதழில்
நாடாண்ட நங்கையர்
KALKI
8-9-1963
30 காசு

ஹார்லிக்ஸ் செய்யும் நன்மைக்கு ஒரு உதாரணம் :



ராஜு எங்களுக்கு ஒரே பிள்ளை—சில சமயங்களில் விஷமம் செய்தாலும் ஒ
போதும் அத்து மீறினது கிடையாது. ஆனால் சமீபகாலமாக அவன் உணவி
கூட சிரத்தை இன்றி சோர்வுற்று வீட்டிலேயே நடமாடிக்கொண்டிருந்தான்
ஒரு நாள் விருந்தினர்கள் எதிரில் அவன் மிக மோசமாக நடந்துகொண்டான்
என் கணவர் கோபத்தில் அவனை அடிக்கப் போனார். எங்கள் அத்தை
அவரைத் தடுத்து "அடிப்பது இருக்கட்டும், முதலில் நான் ராஜுவை
பரிசோதித்துப் பார்க்கிறேன்" என்றாள். அத்தை ஒரு அனுபவமுள்ள டாக்டர்



பரிசோதித்துவிட்டு அத்தை சொன்னாள்: "ராஜு வுக்கு கவலைப்படும்படி ஏதுமில்லை. வளரும் குழந்தைகளுக்கு ஏராளமான சக்தி தேவைப் படுகிறது. செலவழியும் சக்தி ஈடு செய்யப்படா விடில் சிறுவர்கள் சிடுசிடுப்பார்கள். ராஜுவுக்கு தினமும் ஹார்லிக்ஸ் கொடுத்து வந்தால் பழையபடி சமத்தாகி விடுவான்."



ராஜுவுக்கு தினந்தோறும் ஹார்லிக்ஸ் கொடுத்து வந்தோம். சில வாரங்களுக் குள்ளாகவே தெம்பும் விளையாட்டுமாய்க் காணப்பட்டான். அத்தைக்கும் ஹார்லிக்ஸுக்கும் கோடிப் புண்ணியம். தண்டப்பிரயோகம் இல்லாமலேயே குழந்தை திருந்திவிட்டான்.



ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

JWT-HL-[illegible]

கல்கி



படவிளக்கம் 79-ம் பக்கம் பார்க்க...

சோபகிருது ஆவணி 23௳. செப்டம்பர் 8௳.

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

புகைபிடிக்கும் இங்கிதம்

தீப் பொறியின் திக்குவிஜயம்!

சிகரெட்டைப் பற்றவைக்கையில் —அதுவும் வெளியிலோ அல்லது காற்றடிக்கையிலோ—எவர் மீதும் குறிவைப்பதுபோலத் தீக்குச்சியைக் கிழிப்பது சரியல்ல. தவறிப் போய் தீப்பொறி தெறிக்குமேயானால் பாவம். அருகிலிருக்கும் பெண்மணியின் ஆடைக்கு வந்தது ஆபத்து.



உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனமா



இழுக்க இழுக்க இன்பம் — இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.,
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 611 TAM

Graces' Advts.



மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 6

ராஜினாமாக்களும் நியமனங்களும்

"வருகிறது! வருகிறது!" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். உண்மையிலேயே வந்துவிட்டது. பல மந்திரிகளைத் தக்க காரணமின்றி வெளியே அனுப்பி ஜனநாயக (சம்பிரதாய)த்தையே கொன்றுவிட்டது காமராஜ் திட்டம் என்னும் கட்சிச் சுயநலப் புலி.

மந்திரிகளை அப்புறப்படுத்தியது அரசாங்கக் காரணங்களால் அல்ல என்று பிரதமர் நேருவே வியக்தமாகச் சொல்லிவிட்டார்.

காமராஜ் திட்டம், மந்திரிகள் ராஜினாமா என்றெல்லாம் காங்கிரஸ் வட்டாரத்தில் பேசப்பட்டபோது, இது வெறும் செப்படி வித்தை என்றே மக்கள் கருதினார்கள். பொது மக்களுக்கு ஒரு புது உணர்ச்சியை ஊட்டி, காங்கிரஸ் இழந்துவிட்ட செல்வாக்கைப் பெறுவதற்குக் கையாளப்படும் ஜாலவித்தை என்றுதான் கருதினார்கள்.

பிரிட்டிஷ் ஜனநாயக முறையை நன்கு உணர்ந்த பிரதமர் கட்சி நலனுக்காகச் செல்வாக்குப் பெற்ற மந்திரிகளைத் தியாகம் செய்யமாட்டார், கட்சியைவிடத் தேசம் பெரிதென்று கருதி நடந்து கொள்வார் என்று ஆசைப்பட்டோம். ஆனால் அவரும் தேசத்தைவிடக் கட்சியே பெரிது என்று எண்ணத் தொடங்கிவிட்டார் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் மந்திரி சபையில் பதவி ஏற்றால் அவர்மீது லஞ்சக் குற்றமோ, நிர்வாகக் கையாலாகாத்தனமோ, முரண்பாடுகளோ சுமத்தப்பட்டால் தான் பிரதமர் அவரை ராஜினாமா செய்விக்க முடியும். அத்தகைய குற்றங்கள் மொரார்ஜி தேசாய்மீதோ, லால்பகதூர் சாஸ்திரிமீதோ, எஸ். கே. பாட்டீல்மீதோ, கோபால் ரெட்டியார்மீதோ சுமத்தவில்லை. அதற்கு மாறாக ஒவ்வொருவருமே காங்கிரஸ் வகுத்த கொள்கையின்படி காங்கிரஸ் காட்டிய வழியிலேயே சென்றிருப்பதாக உறுதி கூறியிருக்கிறார்கள். அமெரிக்க வி. ஓ. ஏ. ரேடியோ சர்ச்சை எழுந்தபோது கோபால் ரெட்டியார், பிரதமரின் ஒப்புதலுடனேயே ஒப்பந்தம் கையெழுத்தானதாகச் சொன்னார். பிரதமரின் ஒப்புதலுடனே தான் தங்கக் கட்டுப்பாடு திட்டம், கட்டாய சேமிப்புத் திட்டம் முதலியவை கொண்டு வந்ததாக மொரார்ஜி சொல்லுகிறார்.

இப்படி பிரதமரின் ஒப்புதலுடன் அவர் கொள்கையை அமுல் நடத்த வேண்டும் என்று காரியம் செய்ததினால் விளையும் தீவினைகளைத் தம் சக மந்திரிகளை அனுபவிக்க விட்டு விட்டு ஏதேதோ காரணமல்லாத காரணம் சொல்லிப் பிரதமர் தாம் மட்டும் பதவியிலிருப்பது எந்த ஜனநாயக நாட்டிலும் காணாத அதிசயமாக இருக்கிறது.

பல மந்திரிகள் ராஜினாமா செய்தாலும், பிரதமரும் அவர் கொள்கைகளும் அப்படியே இருப்பதால் மந்திரி சபை மாற்றங்களால் மக்கள் திருப்தியடைய மாட்டார்கள். மக்களுக்குச் சுபிட்சம் ஏற்படவேண்டுமானால் அக்கொள்கைகளை யகற்றி முற்றும் மாறுபட்ட கொள்கையை ஆட்சி கடைப்பிடிக்க வேண்டும்.

என்ன சேதி?

உற்பத்தி பெருகவில்லை!

ஸ்ரீமான் எச். வி. ஆர். அய்யங்கார் அவர்கள் தேசத்தில் தொழில் உற்பத்தி சென்ற இரண்டு ஆண்டுகளில் மிகவும் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கிறார்.


பொதுவாக யுத்த சன்னத்தமாக இருக்கும் நாடுகளில் தொழில்கள் சுறுசுறுப்பாக இயங்கிப் பொருள்கள் ஏராளமாக உற்பத்தியாகும். நாமும் ஓர் எதிரியை வட எல்லையில் காண்கிறோம். ஏராளமாக நோட்டும் அச்சடிக்கிறார்கள். தேசத்தில் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும் தொழில்களில் மந்தகதி ஏற்பட்டிருக்கிறது என்றால் அது எதைக் காட்டுகிறது? சர்க்கார் அவசர நிலைமைப் பிரகடனம் செய்தார்களே தவிர அதற்கேற்ப நடந்து கொள்ளவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. அவசர நிலைமைப் பிரகடனத்தின் நோக்கம் எதுவோ அதற்கு மாறாகச் சர்க்கார் நடந்து கொண்டு வந்திருப்பதால்தான் நாட்டில் தொழில்கள் பெருகி உற்பத்தி பெருகவில்லை.

தேசத்தின் ராணுவ நிலை சீர்கேடாக இருக்கிறது என்று அறிந்ததும், ஜனநாயக நாடுகளுடன் தக்க உறவும் நட்பும் செய்து கொண்டு நமது ராணுவத்தைப் பலப்படுத்தி யிருந்தால் மக்களிடையே பெரும் உற்சாகம் பொங்கியிருக்கும்.

அதுதான் செய்யவில்லை என்றால் மக்களின் அன்றாட வாழ்வுக்கே உலை வைக்கும் வகையில் வரி முறைகளும், தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டமும், கட்டாய சேமிப்புத் திட்டமும் அன்னபிறவும் கொண்டு வந்தார்கள். இதன் காரணமாக மக்களிடையே,-பணக்காரர்களிடையே, நடுத்தர வகுப்பாரிடையே, தொழிலாளரிடையே, விவசாயப் பெருங்குடிமக்களிடையே-எங்கும் சோர்வுதான் காணப்படுகிறது. ராஜாஜி தீர்க்க தரிசனத்துடன் இப்படி நேரும் என்று எச்சரிக்கை செய்ததுதான் இப்போது

புலி வேட்டை!





நடைபெறுகிறது. போதாததற்குப் பதவியிலிருப்பவர்கள் சமீபகால உப தேர்தல்களில் தங்களுக்கு ஏற்பட்ட தோல்வியின் காரணத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் கட்சியைப் பலப் படுத்துவதில் மோகம் கொண்டிருக் கிறார்கள். தேசத்தைத் மறந்து, கட்சி யைப் பற்றியே கவலைப்படும் சர்க்காரின் கீழுள்ள மக்கள் எங்ஙனம் தொழில் பெருக்கத்தில் கவனம்செலுத்துவார்கள்?

ஸ்ரீ அஜித் பிரசாத் ஜெயின் போன்ற காங்கிரஸில் உள்ள முக்கிய தலைவர்கள் ''அவசர நிலைமையா? அது எங்கே இருக்கிறது?'' என்று மறந்து போய்க் கேட்கிற நிலையில் இருக்கிறார்கள் என்றால் சர்க்காரின் நடவடிக்கை எப்படி இருக் கிறது என்று புரிந்து கொள்ளலாம்!

விலை. ஏறுகிறது!

சர்க்கார் சென்ற பத்தாண்டுகளா கக் கடைப்பிடித்து வரும் மறைமுக வரிக் கொள்கையும் மற்ற வரித் திட்டமும் தான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்றால் அதிகார பீடத்திலிருப்பவர் களுக்கு ஆத்திரம் வருகிறது. தனிப் பட்ட வியாபாரிகளின் பேராசையே விலைவாசி ஏற்றத்துக்குக் காரணம் என்று குற்றம் சாட்டுகிறார்கள். பேரா சையோ பெரும் லாப நோக்கமோ இன்றிச் சர்க்கார் நடத்தும் ரயில்வே காண்டீன்களில் சாப்பாட்டின் விலையை ஏன் உயர்த்தினார்கள்? இப்பொழுது சர்க் கார் நடத்தும் மாதவரம் பால் பண்ணை யிலிருந்து விநியோகிக்கும் பாலின் விலையை லிட்டர் 84 பைசாவிலிருந்து 94 பைசாவாக ஏன் உயர்த்துகிறார்கள்? சர்க்கார் இப்படி உயர்த்தினால் தனிப் பட்ட பால்காரர்களுக்குக் கொண்டாட் டம்தான். அவர்கள் இன்னும் உயர்த் துவதற்கு நல்ல 'சாக்கு'க் கிடைத்து விடுமல்லவா?

சர்க்காரின் வரிக் கொள்கைகள், சர்க்கார் நடத்தும் திட்டங்களில் விலை யும் பொருள்களின் விலை ஏற்றத்துக் குக் காரணமாக இருக்கும்போது வியாபாரிகளின் மேல் குற்றம் சுமத்தி னால் பொதுமக்கள் எப்படி நம்பு வார்கள்? மந்திரிகளாக இருப்பவர்கள் தாங்கள் ஏழை மக்களின் நலனுக்காகப் பணக்காரர்களுக்கு வரி விதிப்பதாகப் பேசுகிறார்கள். தங்கள் ஆட்சியில் லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை யளித்திருப்பதாகப் பேசுகிறார்கள். பரம் பரையாக வேலை செய்துவந்த பல குடிசைத் தொழில்களை அழித்து எத்தனை லட்சக்கணக்கான மக்களை வேலை இழக் கச் செய்திருக்கிறார்கள் என்பதற்கு இதோ ஓர் உதாரணம் பாருங்கள்:

உத்தரப்பிரதேசத்தில் சர்க்கரை உற் பத்தி செய்யும் முதலாளிகளுக்காக வெல்லம், நாட்டு சர்க்கரை, இவற்றின் உற்பத்திப் பெருக்கத்தைச் சர்க்கார் தடுக்கப் பார்க்கிறார்கள். இது ஏழை மக்களின் நன்மையைக் கவனிக்காமல் முதலாளிகளுக்கு உதவும் முறையாகும்.

ஆகவே, பாமர மக்களை ஏமாற்றும் வாதங்களை விடுத்துப் பிரத்யட்ச நிலை குறித்து எதிர்க் கட்சிகளும் பொருளா தார அறிஞர்களும் சொல்வதை அங்கீ கரித்துப் பரிகாரம் காண முயல்வதே அறிவுடைய சர்க்காருக்கு அழகு.

போகிற  போக்கில்...

சிட்டுக்குருவி

மந்திரிகளின் ராஜிநாமாச் செய்தி மிகப் பரபரப்பாகத் தொடங்கி இறுதியில் புஸ்வாணமாகப் போய்விட்டது. மந்திரிகளை வழியனுப்பி வைத்த நேரு அவர்களும், வெளியேறி வரும் மந்திரிகளும் பேசிவரும் பகிரங்கமான பேச்சுக்களையும், அந்தரங்கமான பேச்சுக்களையும் பார்த்தால் வெளியேறும் படலம் ஒரு ''குறுகிய கால நாடகம்'' என்றே தோன்றுகிறது. விக்கிரமாதித்தனும் பட்டியும் நாடாறு மாதம் காடாறு மாதமென வாழ்ந்தார்கள் அல்லவா? அதே கதைதான் இங்கு நடைபெறும் போலிருக்கிறது. காடாண்ட விக்கிரமாதித்தன் பல சாகசங்களைச் செய்தானெனக் கதைகள் இருக்கின்றன. அதைப் போல் காங்கிரஸை ஆளப் போகும் இவர்கள் என்ன சாகசங்களைச் செய்யப்போகிறார்களோ, தெரியவில்லை.

க் க் க்

எல்லா மந்திரிகளுக்கும் திரும்ப வரும் வாய்ப்புண்டா என்றால் ஒருசிலருக்கு இருக்காதென்றே தோன்றுகிறது. இவ்வாறு இருக்கும் மந்திரிகள் என்ன பாவம் செய்தார்கள் என்று கேட்கலாம். தாங்கள் செய்த பாவமெல்லாம் ஓரிரு சந்தர்ப்பங்களில் அமெரிக்க உதவியைச் சிலாகித்துப் பேசிய பாவம்தான். அதே போல் கிருஷ்ண மேனனை வெளியேற்ற வேண்டுமெனக் கூறியவர்கள். இவற்றைத் தவிர மற்றப்படி சோஷலிஸ பக்தர்கள்தான். சூக்கத்து நூற்றெட்டுத்தரம் சோஷலிஸ ஜெபமிசைத்தவர்கள் எனினும் 'தீவிர' சோஷலிஸ்டுகளாக இவர்கள் இருக்கவில்லை என்பது ஒரு குறைபாடு. இவர்கள் போவதைப் பற்றி இவர்களைத் தவிர — இவர்களது நண்பர்களைத் தவிர பொது மக்கள் யாரும் வருத்தப்படுவதாகத் தெரியவில்லை. எனினும் சோஷலிஸ வெறி எப்படி இருக்கிறது என்பதற்கு இது ஓரளவு உதாரணமாக அமைகிறது. போகிற போக்கைப் பார்த்தால் திரு என். வி. காட்கில் சொல்வது மாதிரியாகச் சர்வாதிகார ஆட்சி விரைவில் ஏற்பட இவை வழி வகுக்கும் எனத் தெரிகிறது.

க் க் க்

பதினாறு காரட் பரமாத்மா திரு தேசாய் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது பார்லிமெண்டில் பேசிய பேச்சையும் திரு பாட்டீல் பேசிய பேச்சையும் பார்த்திருக்கலாம். இவர்களின் பேச்சுக்களில் அடிக்கடி நேருவைச் சாட்சிக்கிழுத்தே பேசினர். தாங்கள் செய்த ஒவ்வொரு காரியத்தையும் நேருஜி அறிவார் எனவும், ஆதரித்தார் என்றும் சொன்னார்கள். அப்படியிருக்க இவர்கள் மட்டும் ஏன் போவது என்று சிலர் கேட்கிறார்கள். கூட்டுப் பொறுப்பு என்ற முறையில் ஆட்சி நடப்பதால் அவர்களுக்கு மட்டும் தனிக் கைலாச யாத்திரை ஏன் என்பது அவர்களது வினா. வினாவைப் பொறுத்தவரையில் ரொம்பச் சரி. ஆனால் ஏட்டில் இருப்பது காரியத்தில் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அதுவும் சோஷலிஸ பாணியிலே, ஏடு வேறு, நடைமுறை வேறு என்பதை உலகத்துக்குக் காட்டியவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள். ஆகவே கண்டோடு கைலாசம் என்பதே இங்கு எதிர்பார்க்க முடியாது.

க் க் க்

பார்லிமெண்டில் முதல் தடவையாகப் பேசிய திரு லோஹியா, தேசத்திலுள்ள மக்களில் 60 சத விகிதத்தினர் 3 அணாவை வைத்துக் கொண்டுதான் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள் என்று குற்றம் சாட்டினார். இதை நேரு மறுத்தார். இந்த மறுப்பைத் திரு லோஹியா ஏற்காது போகவே, திரு நந்தா ஒரு விளக்கமான அறிக்கையோடு வந்திருக்கிறார். அந்த அறிக்கையில் திரு நந்தா லோஹியா சொன்ன 3 அணா கணக்குத் தவறு என்றும், $7\frac{1}{2}$ அணா அவர்கள் செலவு பண்ணுகிறார்கள் எனவும் வாதாடியிருக்கிறார். இதையும் திரு லோஹியா ஏற்கவில்லை. ஆகவே ஒரு விவாதம் நடைபெற இருக்கிறது. விவாதம் எப்படியாவது போகட்டும். திரு நந்தா சொன்ன கணக்கையே எடுத்துக் கொள்வோம். $7\frac{1}{2}$ அணாவை வைத்துக்கொண்டு அதுவும் பண வீக்கம் மலிந்துள்ள இந்த நாளில் என்ன செய்வது? அரை வயிற்றுக் கஞ்சியாவது குடிக்க முடியுமா என்பதைத் திரு நந்தா சொல்லியிருக்க வேண்டும். ரூபாயின் மதிப்பு இன்று 4 அணாவாக இருக்கிறது. ஆகவே ஏழரை அணா என்பதற்கு அர்த்தம் ஏறத்தாழ $1\frac{7}{8}$ அணா என்றாகிறது. இந்த $1\frac{7}{8}$ அணாவை வைத்துக்கொண்டு நிலக்கடலை வாங்கி ஒரு வேளை சாப்பிடலாம். பாக்கி வேளைக்குக் காற்றைக் குடிக்கலாம். இதைத்தான் நந்தா அவர்கள் திட்டத்தின் சாதனை என்கிறார்.

க் க் க்

'காமராஜ் திட்டம் காங்கிரஸ் சரித்திரத்தில் ஒரு புது அத்தியாயம்' என்று திரு சஞ்சீவி ரெட்டி சொல்கிறார். புது அத்தியாயமெனத் திரு ரெட்டி சொல்வதை நாமும் ஆதரிக்கிறோம். ஆனால் இதுதான் கடைசி அத்தியாயம் என்பதை அவர் கூறவில்லை. அப்படி அவர் சொல்லியிருந்தாரேயானால் உண்மையான மதிப்பீடு என நாம் பாராட்டலாம்.

க் க் க்

எலித் தொல்லையின் காரணமாக 250 கோடி ரூபாய் மதிப்புள்ள 30 லட்சம் டன் உணவுத் தானியங்கள் நமது நாட்டில் நாசமாகியிருப்பதாகச் சென்னை கூட்டுறவு மந்திரி மன்றாடியார் நாகப்பட்டினத்தில் பேசியிருக்கிறார். கூட்டுறவு மந்திரியின் புள்ளி விவரக் கணக்கு எப்படிக் கிடைத்ததோ, நமக்குத் தெரியாது. மந்திரி சொல்வதால் அது உண்மையாகவே இருக்குமென்று நம்புகிறோம்; ஆனால் ஒரு சிறு விளக்கம் தேவை. அவர் சொன்ன அந்த எலிகளுக்கு இரண்டு கால்களா, நான்கு கால்களா என்பதை வெளியிட்டால் இன்னும் சுவாரசியமாக இருக்கும்.

வாழ்வளித்த பெரியோர்கள்



செப்டம்பர் மாதம் பிறந்தால் மூலைக்கு மூலை பாரதியாரின் திருநாளைக் கொண்டாடுகிறோம். தமது கவிதையால் நமக்கு ஊக்கமும் உற்சாகமுமூட்டி நம்மை விடுதலைப் பாதையில் போய் வெற்றி காணச் செய்த பான்மையை நினைந்து நினைந்து நெகிழ்கிறோம். பாரதி தேச விடுதலைபற்றி மட்டுமா பாடினார்? பாரதப் பண்பாட்டில் சிறியனவற்றை யெல்லாம் புதிய உணர்ச்சி வேகத்தோடு பாடி நமக்கு வாழும் முறையை வகுத்துக் காட்டினார். பாட்டால் மட்டுமின்றி, வசனத்தாலும் அவர் செய்த தொண்டு மகத்தானது. இவை யாவற்றையும் விட,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்!"

என்று கூறி, தமிழ் மொழியின் மேல் தமிழ் மக்களுக்கோர் ஆராப் பற்றை வளர்த்தார்.

பாரதி கூறிய இலக்கணத்துக்கு இலக்கியத்தைக் காட்டி உண்மையை உணரச் செய்தவர் ரசிகமணி டி. கே. சி. மேனாட்டு மோகத்திலும், ஆங்கில மோகத்திலும் மூழ்கிக் கிடந்த தமிழர்களுக்கு, ஷேக்ஸ்பியரின் கற்பனையையும் விஞ்சி நிற்கும் கம்பனின் கவித் திறனை எடுத்துக்காட்டினார். பேகன், கன்பூஷியஸ், ராஷிபோகால்ட் போன்ற அறிவுலக மேதைகளையும் மிஞ்சியவர் குறளாசிரியர் என்பதைப் பலப் பலவாறாக எடுத்துக் காட்டினார். இதன் பயனாக ஆங்கில நூல்களையே படித்துக்கொண்டிருந்தவர்கள் தமிழில் புது ஆர்வம் கொள்ளலானார்கள். கம்பரும், வள்ளுவரும் தமிழ்ப் பண்டிதர்களுக்குத்தான் உரியவர்கள் என்பதல்ல; தமிழில் பாண்டித்யம் பெற்றிராவிட்டாலும், தமிழனாகப் பிறந்திருந்தால் மட்டும் போதும், அவர்களுக்கெல்லாம் உரியவர்கள்தான்; அவர்களும் கம்பரையும் வள்ளுவரையும் புரிந்துகொள்ளக் கூடும் என்று நிதர்சனமாகக் காட்டியவர் டி. கே. சி.

பழம் இலக்கியங்கள் மட்டுமின்றி, நாள்தோறும் வெளியாகும் நூல்கள், கதைகள், கட்டுரைகள் இவற்றில் இலக்கியம் எனப் போற்றத் தக்கவைகளைப் போற்றி, நவீன இலக்கியத்தை வளர்த்தவர் டி. கே. சி.

பாரதிக்குப்பின் கவிதைபுனைபவர் கவிமணி; வசன நடையைப் பேணி வளர்ப்பவர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்பார் டி. கே. சி.

கல்கி அவர்களின் பேனாவுக்குத் தனி சக்தி. எவ்விஷயத்தைத் தொட்டாலும் பொன்னாக ஜொலிக்கும் அவ்விஷயம்.


இலக்கிய நதியில் பலப் பல புதிய துறைகளைக் கண்டவர் கல்கி. பல இலக்கிய சோதனைகளை நிகழ்த்தி வெற்றி கண்டவர். தமிழ் மக்களின் உள்ளங்களைப் பரவசப் படுத்தியவர்.

பேராசிரியர் தமது அபாரமான ஆற்றலை எழுத்துத் துறையில் மட்டும் செலவிடவில்லை. யாராகிலும் பாராட்டத் தக்க முறையில் ஏதாகிலும் செய்திருந்தால் அவர்களைப் பாராட்டிப் பேசுவார், எழுதுவார், விழாவே கொண்டாடுவார். அவர் வாழ்ந்த ஒவ்வொரு நாளுமே தமிழ் மக்களுக்குப் பயன் தரக் கூடிய வகையில் வாழ்ந்தார். 'எளிய வாழ்க்கை - உயர்ந்த சிந்தனை' என்ற குறிக்கோளுக்கு இலக்கியமாக வாழ்ந்தார்.

இத்தகைய மூன்று பெரியோர்களைப்பெற்ற தமிழ் மக்கள் பாக்கியசாலிகள்.

பாரதியார் இந்தச் செப்டம்பர் மாதத்தில் மறைந்தார். மற்ற இருவரும் இம்மாதத்தில் பிறந்தார்கள். இப்படி மூவரோடும் தொடர்பு கொண்ட செப்டம்பர் மாதம் தமிழ் மக்களின் வாழ்க்கையில் திருவிழாக் கோலமாக விளங்க வேண்டிய மாதமல்லவா?





22

திருப்பாற்கடலிலே அலைகள் வீசியெழுந்து கொண்டிருக்கின்றன. படங்களை விரித்துக் குடை பிடிக்கிறான் அனந்தன். அந்தப் பாம்புப் படுக்கையிலே எம்பெருமான் யோக நித்திரை செய்கிறான்! இது தமிழ் மதத்தில் ஹரியைப் பற்றிய வழிபாட்டு இலக்கணம். இதை மிக அழகாக எதுகை மோனை செய்யுளலங்காரங்களுடன் பாடுகிறார் பேயாழ்வார்.

பணிந்துயர்ந்த பௌவப்
 படுதிரைகள் மோதப்
பணிந்த பணமணிக
 ளாலே—அணிந்து அங்கு
அனந்தன் அணைக்கிடக்கும்
 அம்மான்

[பௌவம் - கடல். பணிந்துயர்ந்த - மடிந்தும் எழுந்தும் வீசுகிற. பௌவப் படுதிரைகள் - கடலின் பேரலைகள். மோத - வந்து தாக்க. பணம் - பாம்பின் படம். பணிந்த பணம் - விரிந்து வளைந்த படத்தில். மணிகளாலே அணிந்து - சப்பிர மஞ்சத்தின் மேற்கட்டுப்போல் மாணிக்கங்களால் அலங்கரிக்கப்பட்டு. அங்கு அனந்தன் அணைக்கிடக்கும் - அங்கே அனந்தனாகிய அரவணையிலே துயிலும். அணை - படுக்கை. அம்மான் - கடவுள்.]

அனந்தன் அணைக்கிடக்கும்
 அம்மான், அடியேன்
மனந்தன் அணைக்கிடக்கும்
 வந்து!

[மனந்தன் அணை - மனமாகிய படுக்கையில். வந்து - தானாகவே அரவணையாகிய அந்தப் படுக்கையை விட்டு வந்து.]

அப்படி அனந்த சயனத்திலே மணிகள் பதித்த அலங்காரங்களுக்கு மத்தியிலே படுத்துறங்கும் கடவுள், அந்தப் படுக்கையை விட்டு வந்து, அடியேனுடைய மனமாகிய படுக்கையிலே படுத்தான் என்கிறார் ஆழ்வார்! வெகு தொலைவில் தன் பெருமையனவுக்கு ஏற்றதான சிறந்த அனந்த சயனத்தை விட்டு, இந்தப் பக்தனுடைய மனத்தில் வந்து படுத்துக் கொண்டான் என்று பரவசத்தோடு பாடுகிறார். என் பக்தியைப் பெரிதாகக் கருதி வந்தான் என்பதை 'அடியேன்' என்ற சொல் காட்டுகிறது. படுக்க இடம் இல்லாதவன் ஓர் இடம் தேடுவதுபோல் வந்த அருமைப் பாங்கு, 'வந்து' என்கிற ஈற்றுச் சொல்லில் தொனிக்கிறது! 'கிடந்தான்' என்று சொல்லாமல் 'கிடக்கும்' என்றதனால், ஆழ்வார் பெருமானை இடைவிடாமல் உள்ளத்தில் நிலையாக அமையப் பெற்றார் என்பதைக் காண்கிறோம்.


பணிந்துயர்ந்த பௌவப்
 படுதிரைகள் மோதப்
பணிந்த பணமணிக
 ளாலே—அணிந்தங்கு
அனந்தன் அணைக்கிடக்கும்
 அம்மான் அடியேன்
மனந்தன் அணைக்கிடக்கும்
 வந்து!

பாற்கடலின் அலைகளும், அனந்தனுடைய விரிந்த படமும் ஒரு புறம் இருக்க, மனித உள்ளம் அவற்றிற்கு நேர்மாறாக ஆசை அலைகளும் விஷம் நிறைந்த எண்ணங்களுமாக இருக்கிறது. அதில் பகவான் கோவில் கொண்டு அருளியதும், அவைகள் எல்லாம் அமர்ந்துபோய் உள்ளமானது இறைவனுக்குரிய சயனம் ஆகிறது.

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

மேஜர் ராமதுரை தம்முடைய பேரன் சிறுவனாக இருந்தபோது, அவனுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுக்க வெள்ளைக்காரத் தோரணையில் ஓர் ஆங்கிலோ இந்தியக் கிழவியம்மாளை நியமித்திருந்தார். பெண் இனத்தையே அவர் வெறுப்பவர் என்றாலும், தமது பேரனைப் பெண்களின் பார்வையே



படாதபடி வளர்க்க வேண்டுமென ஆசைப்பட்டார் என்றாலும், ''தாயில்லாத பையனைப் பெண் வாடையே படாதபடி வளர்த்தால் பையன் ரிஷ்யசிருங்கர் ஆகிவிடுவான். பிற்காலத்தில் பெண்கள் அவனை இஷ்டப்படியெல்லாம் வெகு சுலபமாக வளைத்து விடுவார்கள்'' என்று யாரோ ஒரு நண்பர் அந்தக் காலத்தில் மேஜரிடம் பயமுறுத்தியிருந்தார். மேஜருக்கு ரிஷ்யசிருங்கர் கதை ஓரளவு தெரியும். பெண் என்றாலே இன்னதென்று தெரியாதபடி தபோவனத்தில் வளர்க்கப்பட்ட ரிஷ்யசிருங்கரைப் பெண்கள் வெகு சுலபமாக உல்லாச நகரத்துக்குச் சுருட்டிக் கொண்டு போய் விட்டார்களாம். அதனால் தம் பேரன் மீது பெண் என்ற பெயரில் சிறிது தாய்மைக் காற்று வீசட்டும் என்று மேஜர் அவனுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுக்க டீச்சரம்மாவாக அந்தக் கிழவி அம்மாளை அமர்த்தி



யிருந்தார். அந்த அம்மாவோ தன்னுடைய கண்டிப்புக் கெடுபிடிகளின் மூலம் கல்வியின் மீதே பிச்சுமணிக்கு வெறுப்பு ஏற்படும்படி செய்து விட்டுப் போய் விட்டாள்!

பெண் மோகத்தில் தம் பேரன் சிக்கி விடாதிருக்க இவ்வளவெல்லாம் முன் யோசனையுடன் தாம் காரியங்களைச் செய்திருந்தபோதிலும் இன்று ஒருபெண் தமது பேரனைக் காணத் தமது வீட்டுக்கே வந்து விட்டிருப்பதைக் கண்டதும் மேஜருக்குக் கோபம் பொங்கியது. அவரை வேலைக்காரனென்று நினைத்து வசந்தி கண்டபடி பேசியதும்; பிச்சுமணியின் பரபரப்பைக் கண்டு, அவன் நடத்தையைத் தப்பர்த்தம் செய்து கொண்டு அவள் அவனிடம் இரைந்ததும் ஒட்டுக் கேட்டபடி வந்த மேஜரின் கோபத்தை முன்னிலும் பன்மடங் காய்ப் பெருக்கியது.

அதே நேரத்தில் பிச்சுமணி பரிதவித்தவனாக, ''இல்லே வசந்தி......என்னைத் தப்பாக நினைக்காதே....'' என்று வாய் குழறினான்.

''பின்னே எப்படி நினைக்கச் சொல்கிறே....?'' என்று குழறிய வசந்தி, ''நீ யோக்கியனாக இருந்தால் என்னை அறைக்குள் தள்ளி ஏன் கதவைச் சாத்தப் பார்த்தாய்?'' என்றாள்.

''இல்லே, வசந்தி, வந்து...வந்து...''

''என்ன வந்து... வந்து?''

''தாத்தா பார்த்தால் ஆபத்து!''

''ஏன், தாத்தா பார்த்தால் எனக்கென்ன பயம்?''

''உனக்கில்லே! எனக்குப் பயம்!'' என்றான் பிச்சுமணி.

அவனுடைய நடுக்கத்தைக் கவனித்த வசந்தி ஆத்திரம் தணிந்து பழைய சாந்த நிலையை அடைந்து, ''நீ ஏன் தாத்தாவை நினைத்துப் பயப்படுகிறாய், பிச்சு?'' என்று கேட்டாள்.

''என் தாத்தாவுக்குப் பெண்களைக் கண்டாலே ஆகாது!''

''ஏன்? பெண்களைப் பார்த்தால் அவருக்குப் 'பிளட் பிரஷர்' வந்து விடுமாமோ?'' என்று வசந்தி கிண்டலாகக் கேட்டாள்.

''அதென்னமோ, அவர் பெண்களை வெறுப்பவர்!''

''ஓ 'விமன் ஹேட்டரா'? (பெண் வெறுப்பாளரா?) அதிசயமாக இருக்கிறதே! அதெல்லாம் ஒரு 'பிரஸ்ட்ரேஷனால்' (ஆசாபங்கத்தால்) அல்லவா ஏற்படும்?'' என்று ஒரு யோசனையுடன் சொன்ன வசந்தி சட்டென்று புன்சிரிப்பை உதடுகளில் வளைய விட்டவளாய், ''ஆனால் அவருக்கு என்னைப் பிடிக்கும்படி செய்து விடுவேன்! நீ பயப்படாதே, பிச்சு!'' என்றாள் வெகு சாதாரணமாக.

''இல்லே, வசந்தி! அதெல்லாம் உன்னால் முடியாது! தாத்தாவின் கண்ணில் நீ படவே கூடாது!'' என்றான் பிச்சுமணி பிசிறும் குரலில்.

வசந்தி குறுகுறு வென்ற கருவிழிகளைச் சுழற்றி, அவனைக் கூர்ந்து நோக்கினாள். பெண்மையின் சாயல் படிந்த பிச்சுமணியின் அழகான முகமும், சிவந்த நிறமும் வசந்தியின் உள்ளத்தில் அலாதியான ஒரு கற்பனையை உண்டாக்கின.

''பிச்சு! உன் முகத்துக்கு 'க்ரீம்' பாலிஷ் போட்டு, கண்களுக்கு மை தீட்டி, நெற்றியில் ஜிகினாப் பொட்டு வைத்து, உதடுகளில் லிப்ஸ்டிக் தடவிப் பாவாடை தாவணியும் உடுத்தி விட்டால் நீ ரொம்ப ஜோராக இருப்பே! மீசையை மட்டும் எடுத்துவிட வேண்டும்!'' என்று வெகு ரசனையோடு கூறிய வசந்தி, ''உன்னை அந்தக் கோலத்தோடு கொண்டு போய் உன் தாத்தாவின் முன் நிறுத்தி , 'உங்கள் பேரன் பேத்தியாக மாறி விட்டான்' என்று சொன்னால் தாத்தா அப்போது என்ன செய்வாராம்?'' என்றாள்.

பிச்சுமணி அசடு வழிந்தான்.

வசந்தியோ தன் அபூர்வமான கற்பனையைத் தத்ரூபமாகத் தன் உள்ளத்தில் சித்திரித்துப் பார்த்து விட்டு இடி இடி யென்று சிரித்தாள்.

''ஸ்! சிரிக்காதே, வசந்தி! சிரிக்காதே....'' என்று கூறிப் பிச்சுமணி பரிதவித்தான்.

''ஏன்? சிரிப்புக்கும் இங்கே தடையுத்தரவா?'' என்று பரிகாசமாகக் கேட்ட வசந்தி, ''என்னைப் பார் பிச்சு! சிரிப்புத்தான் நல்ல டானிக்! ஆயுளுக்கும் அபிவிருத்தி'' என்று ஒரு தத்துவ சித்தாந்தத்தைப் பொழிந்து, ''நாம் துன்பம் வரும் போது கூடச் சிரிக்கப் பழக வேண்டும்! நாம் சிரிக்கும் போது நம் முகத்தில் பதின்மூன்று தசை நார்கள் இயங்குகின்றன. ஆனால் முகத்தைக் கோபத்தால் சுழிக்கும்போதோ நாற்பத்தேழு தசை நார்கள் இயங்கி அதிகமான சக்தியை விரயமாக்கி விடுகின்றன. கடுகடு வென்று இருப்பவர்களின் முகம் சீக்கிரம் கிழடு தட்டிப் போகும்!'' என்று விஞ்ஞான ரீதியாக ஒரு விளக்கமும் கொடுத்து விட்டு, ''நம் மகாத்மா காந்திகூட 'நெஞ்சிலே கொந்தளிப்பு இருந்தாலும் வெளியே புன்னகை செய்ய என் மனத்தைப் பழக்கி விருக்கிறேன்' எனச் சொல்லியிருக்கிறார்!''




உள உளஹ்ற... உளஉளஹ்

ஒரு டீஸ்பூன் அளவு உட்வார்ட்ஸ் 'கிரைப் வாட்டர்', உங்கள் குழந்தை அலறுவதை நிறுத்திவிட்டு ஆனந்தக் கனவு காண ஆரம்பித்து விடுகிறது. குழந்தையின் சிறு கோளாறுகள்— வயிற்றில் வாயுக் கோளாறு, பல்வலி போன்றவைகளிலிருந்து சுகம்பெற உட்வர்ட்ஸினால் மட்டும்தான் முடியும். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக, தாய்மார்கள் உட்வர்ட்ஸ் உபயோகித்திருக்கிறார்கள். நல்ல ஆரோக்கியமான குழந்தைகளை வளர்த்திருக்கிறார்கள்.


உட்வர்ட்ஸ் 'கிரைப் வாட்டர்'

100 வருஷங்களுக்கு மேலாக உலகெங்கிலும் உபயோகிக்கப்படுகிறது.



அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள்: ஹெர்பர்ட்ஸன்ஸ் லிட். பம்பாய், கல்கத்தா & லக்னோ ● டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கோ. மதராஸ் ● எம். ஜி. ஷஹானி & கோ. (டில்லி) பிரைவேட் லிட்., டில்லி.

Alvers AT 341-TM.



என்று மேற்கோளாக ஒரு பொன்மொழியையும் குறிப்பிட்டு விட்டு, ''ஆகவே சிரிக்கத் தெரியாதவர்களைக் கூட நாம் 'கிச்சு கிச்சு' மூட்டியாவது சிரிக்கவைப் போம்!'' என்று ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி வைத்தாள்.

'' அறைக்குள் வந்து பேசேன், வசந்தி!'' என்று பிச்சுமணி கெஞ்சினான்.

வசந்தி அந்த அறை வாசலுக்கு வெளியே நின்றபடியே அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

அந்த அறையின் தள வரிசை சுவர்கள் எங்கும் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டுப் பளபள வென்று மின்னின. ஒரு மூலையில் தந்த வேலைப்பாடுகளுடன் விலை உயர்ந்த கட்டில் ஒன்று போடப் பட்டு, அதன் மீது கண்ணைப் பறிக்கும் வர்ண ஜாலங்களுடன் வெல்வெட்டு மெத்தை விரித்திருந்தது. சுற்றிலும் கண்ணாடி பீரோக்கள், எழுதும் மேஜை, டிரஸ்ஸிங் டேபின் முதலானவை யெல்லாம் நிறைந்து அது ஓர் இளவரசரின் பள்ளியறை போல் காட்சியளித்தது.

''இந்த ரூம் ஒரே ஜோராயிருக்கே, பிச்சு! இந்த ரூம் உனக்கே உனக்கா?'' என்று வசந்தி வியப்புடன் குழந்தை போல் கேட்டாள்.

''ஆமாம்! என் தாத்தா எனக்குக் கொடுத்திருக்கிறார். இந்த ரூமை 'ஏர் கண்டிஷன்' கூடப் பண்ணப் போகி றார்!'' என்றான் பிச்சுமணி அளவற்ற பெருமையுடன்.

''பிச்சு! நான் இந்தக் காம்பவுண்டுக்குள் நுழைந்த போது இது ஒரு மர்ம மாளிகையாக இருக்கும் என்று நினைத்தேன்! ஆனால் கீழேயுள்ள கொலுக் கூடமே ராஜ தர்பார் மாதிரி இருக்கு! சோபா நாற்காலிகள் எல்லாம் ராஜாக்களின் காலத்தைச் சேர்ந்தவைகள்தாம் என்றாலும் இன்னும் பளபளவென மின்னுகின்றனவே!''

''நான் குழந்தையாக இருந்தபோது படுத்திருந்த தொட்டிலுக்குக் கூடத் தாத்தா பாலிஷ் போட்டுப் பளபள வென வைத்திருக்கிறார்!''

''ம்! வீட்டைச் சுற்றியுள்ள தோட்டமே எவ்வளவு பெரிசு? என் அப்பா பார்த்தால் அதில் வயல் போட்டு நெல் வியாபாரம் செய்யலாம் என்று திட்டம் போடுவார்!''

''வயலா? அதிலே நான் குண்டு மல்லிகைத் தோட்டம் போடப் போகிறேன், தெரியுமா?''

''அடேயப்பா! அந்தத் தோட்டத்தில் பூக்கிற அத்தனை மல்லிகையையும் யார் தலையில் வைச்சுக்கிறது?'' என்று ஒரு சிரிப்புடன் சொன்ன வசந்தி, ''இந்த வீட்டில் நிறைய பெண்கள் இருக்கிறார்களா?'' என்று கேட்டாள்.

''இல்லை! இங்கே பெண்களே யாரும் கிடையாது!''

''அப்போ தோட்டத்தில் பூக்கிற மல்லிகைப் பூவை யெல்லாம் இந்த வீட்டுக்கு வரப் போகிற மருமகள்தான் தலையில் வைத்துக் கொள்ள வேணுமா ?... அம்மாடியோவ்! அவள் தலை என்ன ஆகிறது....?'' என்று வசந்தி தமாஷ் செய்தாள்.

ஆனால் பிச்சு மணிக்குச் சிரிப்பு வரவில்லை !

''பிச்சு! இந்த வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?''

''நானும் தாத்தாவும் வேலைக்காரர்களும் மட்டும்தான்!''

''உன் அப்பா அம்மா?''

''இரண்டு பேரும் இல்லை!'' என்ற பிச்சுமணி தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''அப்போது இந்த வீட்டுக்கு வருகிற மருமகளுக்கு மாமியார் மாமனார் உபத்திரவம் இராது!'' என்றாள் வசந்தி குறும்புச் சிரிப்புடன்.

அத்தியாயம் ஒன்பது

கடைசி ராணியம்மா

பிச்சுமணி வசந்தியை ஒரு தடவை முறைத்துப் பார்த்தான்.

வசந்தி தன் வியப்பு விழிகளைப் பிச்சுமணியின் மாளிகையினுள் அங்குமிங்கும் திருப்பி மாடி வராந்தாவின் நடைபாதை நெடுகிலும் ஓடவிட்டாள்.

சற்றுத் தொலைவில் வராந்தாவின் முடிவில் ஒரு தனிப் பிரிவுபோல் கட்டிடத்தின் பகுதி ஒன்று ஒட்டிக்கொண்டு அதன் பெரிய முகப்பு வாசல் தென்பட்டது. ஆனால் அதன் வாசற் கதவு இழுத்துச் சாத்தப்பட்டுக் கோட்டைப் பூட்டு போல் ஒரு பெரிய பூட்டு தொங்கிக்கொண்டிருந்தது.

அதைக் கவனித்ததும் வசந்தி பரபரப்புடன், ''பிச்சு, பிச்சு! அதென்ன மர்ம நாவல்களிலே வருகிற ரகசியக் கிடங்கா? அல்லது மோகினி கதைகளிலே வருகிற சுரங்க வாசலா?'' என்று கேட்டாள்.

''அது ராணி மஹால்!'' என்றான் பிச்சுமணி.



"நம்ம தோட்டத்திலே கத்திரிக் காய் செடிதாங்க நல்லா வளர்ந்து காய்ச்சிருக்கு. மத்த செடிகளெல்லாம் பிரயோசனமில்லிங்க."

"அப்படியென்றால்....?"

"தனி அந்தப்புரம்!"

"ஓ! சோழர் காலத்திய 'பெண்டுகள் வேளம்' போல் உங்கள் தாத்தா காலத்திய பெண்கள் வார்டா?" என்று குறும்பாகச் சிரித்த வசந்தி, "ஆனால் பெண்களே வெறுக்கும் இந்த இடத்தில் அந்தப்புரம் மட்டும் எப்படி ஒட்டிக் கொண்டிருக்கிறது?" என்று கேட்டாள்.

"அது ராணியம்மா இருந்த வாசஸ்தலம்!"

"அது யார் ராணியம்மா?"

"என் பாட்டிதான்! என் பாட்டி ராஜ பரம்பரையில் உதித்தவர்கள். என் தாத்தாவுக்கும் தாத்தாவின் தாத்தாவுக்கும் ராஜா என்ற பட்டம் உண்டு. அதனால் தலைமுறை தலைமுறையாக எங்கள் குடும்பங்களில் சம்பந்தம் செய்துகொண்டு ஆட்சி செலுத்துகிற பெண்களுக்கு ராணியம்மா என்ற பட்டம் வாரிசுக் கிரமமாக வந்து சேரும்!"

"அப்போ நீ ராஜாவாகிற காலத்தில் உனக்கு வரப் போகிற 'ஒய்ப்'பும் ராணியம்மா ஆகிவிடுவாளோ?"

"ஆமாம். அப்படித்தான் எல்லோரும் அவளைக் கூப்பிட வேண்டும்!"

வசந்தி குடுகுடுவென்று ஓடி அந்த அந்தப்புரத்தின் முகப்பு வாசல் முன்னால் நின்று வியப்புடன் பார்த்தாள். மர வேலைப்பாடுகள் நிறைந்த பெரிய கதவுக்கு மேலே சுவரின் மத்தியில் ஓர் ஆள் அளவு உயரத்துக்கு ஒரு படம் மாட்டப்பட்டிருந்தது. தங்க நிறத் தண்டவாளங்கள் போல் சட்டங்களும் கண்ணாடியும் போடப்பட்டிருந்த அந்தப் படத்தில் ஒரு பெண்மணியின் உயிரோவியம் சைத்திரிகளின் கைவண்ணத்தாலும் வர்ண ஜாலங்களாலும், தத்ரூபமாக வரையப்பட்டு, உயிரோடு ஒரு பெண்மணி உட்கார்ந்திருப்பதைப் போலவே பிரமையூட்டியது.

"அந்தப் படத்தில் உள்ள பெண்மணிதான் உன் பாட்டியா?" என்று வசந்தி கேட்டாள்.

"ஆமாம்! அதுதான் கடைசி ராணியம்மா!" என்றான் பிச்சுமணி.

அந்தப் படத்தில் உள்ள ராணியம்மாவின் உருவத்தை வசந்தி பிரமிப்புடன் ஏற இறங்க உற்றுப் பார்த்தாள். பட்டாடைகளும் பல விதமான ஆபரணங்களும் ராணியம்மாவின் உருவத்தில் பெரும் பகுதியை மூடி மறைத்துக் கொண்டிருந்தன. சின்னஞ்சிறு நெற்றியில் சந்திரப் பிறை என்னும் பெரிய வைரச்சுட்டி. காதுகளில் கொட்டைப் பாக்கு அளவுள்ள வைரத் தோடுகள். தோட்டுக்குச் சங்கிலி என்ற பெயரில் காதை அடைக்கும் விதமான ஒரு வைரத் தடை. மூக்கில் மூன்று காரட் எடையுள்ள ஒற்றைக் கல் வைர மூக்குத்தி. கழுத்தில் பழங் காலத்துத் தாலி என்ற பெயரில் சுமார் நூற்றிருபது பவுன் எடையுள்ள தங்கத் தாலி. அதற்கு மேலே தங்கக் காசுமாலை. அவை போதாதென்று இரண்டுக்கும் நடுவே மரகதக் கண்டசரம். கைகள் இரண்டிலும் முழங் கையை எட்டுமளவுக்கு நவரத்தின வளையல்களின் அடுக்குகள். கைவிரல்களில் புறா முட்டைகள் போல் மோதிரங்கள். இடுப்பில் முத்துச் சரம் கோத்த தங்க ஒட்டியாணம். கணுக் கால்களில் கண்ணகி காலத்திய பொற் சிலம்புகள். மெல்லிய கால் விரல்களில் வெண்கல மெட்டிகள்! ராணியம்மா வஸ்தாது போன்ற பலமான உடம்பு வாய்ந்தவள்தான் என்றாலும் அத்தனை நகைகளையும் தூக்கிக்கொண்டு நிற்கமுடியாமல் சிம்மாசனத்தில் அமுங்கி யிருந்தாள்.

"அம்மாடியோவ்! எத்தனை நகைகள்!" என்று வியப்போடும், மருட்சியோடும் ஒரு கணம் விழித்த வசந்தி! "பிச்சு, இந்த அந்தப்புரத்துக்குள் போய்ப் பார்க்கலாமா?" என்று ஆவலோடு கேட்டாள்.

"ஊஹூம், அது முடியாது. பாட்டி காலமான உடனேயே இதைத் தாத்தா இழுத்துப் பூட்டி வைத்து விட்டார். மறுபடியும் இதை யாரும் திறந்து பார்க்கவே கூடாது என்று கட்டளையும் இட்டிருக்கிறார்."

"அடேயப்பா! இந்த பில்டிங்கில் எல்லாம் ஒரே ஆச்சரியமாக இருக்கு!" என்ற வசந்தி ஏதோ நினைவு

வந்தவளாய், அவனைப் புதுக் கோணத்தில் பார்த்தபடி, "ஆமாம், பிச்சு! உன் இஷ்டப்படியெல்லாம் சுதந்திரமாக ஜம்மென்று காரில் ஊர் சுற்றுகிறாயே, உன் செலவுகளுக்குத் தாத்தா தாராளமாகக் காசு கொடுப்பாரோ?" என்று கேட்டாள்.

"நான் பணம் என்று கேட்க மாட்டேன். சாவிக் கொத்தைக் கொடுங்கள் என்பேன். தாத்தா இரும்புப் பெட்டகத்தின் சாவியை எடுத்துக் கொடுப்பார்........"

"அந்தப் பெட்டகத்தில் சினிமாவில் வருகிற மாதிரி அடுக்கடுக்காக ரூபாய் நோட்டுகள் இருக்குமோ?"

"ஆமாம்! அதில் எனக்கு வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு போவேன்."

"அதுக்கு என்ன செலவழித்தாய் என்றெல்லாம் உன் தாத்தா 'கிராஸ்' கேள்விகள் போட மாட்டாரோ?..."

"அதைப் பற்றியே அவர் விசாரிக்க மாட்டார். நான் அனாவசியமாகவோ ஊதாரித்தனமாகவோ செலவழிக்க மாட்டேன் என்பது தாத்தாவுக்குத் தெரியும். ஆனால் நான் எவ்வளவு பணம் எடுத்துக் கொண்டு போகிறேன் என்பதற்கு மட்டும் கணக்கு எழுதுவதற்காகப் பைசா சுத்தமாக நான் குறித்து வைக்க வேண்டும்."

"ஆ! என் அப்பாவிடம் என் செலவுக்கு நான் ஒரு ரூபாய் வாங்க வேண்டுமென்றால் கூட அவருடைய 'மூட்' பார்த்து, அம்மாவைத் தாஜாப்படுத்திச் சிபாரிசு செய்யச் சொல்லி அரை மணி நேரம் வாதாடிய பிறகுதான் அவர் முனகிக் கொண்டே முக்கால் ரூபாய் எடுத்துக் கொடுப்பார். அதுக்கும் என்ன செலவு என்று முந்நூறு கேள்விகள் கேட்டுத் துளைத்து விடுவார்!"

"ஏன், உன் அப்பா கருமியா?"

"ம்! உத்தியோகமில்லாமல் வீட்டோடு உட்கார்ந்திருக்கிறார். 'ஷேர்' வருமானமும் குறைந்து போச்சு. சிக்கனத்தைப் பற்றி ஓர் ஆராய்ச்சிப் புத்தகத்தையும் வேறே படித்துவிட்டார். கருமியாக வேண்டியதுதானே!" என்று வசந்தி பெருமூச்சு விட்டாள்.

பிச்சுமணிக்கோ — தாத்தாவை எந்தக் கணமும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தானாகையால்—ஒவ்வொரு விநாடியும் முள் மேல் நிற்பது போல் இருந்தது!

"என்ன, பிச்சு! நான் எவ்வளவு நேரம் உன்னோடு பேசிக் கொண்டிருக்கிறேன். நீ ஒரு கப் காப்பி கூடக் கொடுக்கவில்லையே!" என்று வசந்தி சிணுங்கினாள்.

"இப்போ நான் உனக்குக் காப்பி கொடுக்கும் நிலையில் இல்லை."

"ஏன், பால்காரன் இன்னும் வரவில்லையா?"

"பால்காரனா? எங்கள் வீட்டுக்குப் பின்னால் உள்ள புது மாட்டுக் கொட்டகையில் மூன்று பசு மாடுகள் இருக்கின்றன!"

"மூன்று மாடுகளா? அத்தனை பாலையும் நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"கெட்டிப் பாலாகவும், கட்டித் தயிராகவும் சாப்பிடுவோம்! வேலைக்காரர்கள் நினைத்தபோதெல்லாம் காப்பியும், டீயும் போட்டுக் குடிப்பார்கள். அப்படியும் மிஞ்சுகிற பாலைப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு இலவசமாகக் கொடுக்கும்படி தாத்தா சொல்லிவிடுவார். ஆனால் 'பாய்ஸ்-ஸ்கூல்' பிள்ளைகளுக்குத்தான்!"

வசந்தி 'ஊர்'ரென்று அவனைப் பார்த்துவிட்டுத் தன் சிந்தனையை வேறு புறம் திருப்பி, பிச்சுமணியின் குடும்பத்துக்கு எவ்வளவு பணம் பெருகியிருக்குமென்று புள்ளி விவரங்கள் சேகரிக்க நினைத்தாள்.

"பிச்சு! உங்களுக்குப் பரம்பரை பரம்பரையாகப் பணம் பெருகிக் குவிந்திருக்குமே? அப்படியானால் உன் தாத்தாவுக்கு எவ்வளவு பணம் காசு தேறும்? லட்சக் கணக்கில் இருக்குமா?" என்று வசந்தி கேட்டாள்.

"ஆமாம்! ஆனால் தாத்தாவைக் கேட்டால்தான் பைசா சுத்தமாகக் கணக்குத் தெரியும்!"

"பிச்சு எனக்கு உன் தாத்தாவைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது!" என்று வசந்தி ஆவலோடு சொன்னாள்.

"ஐயையோ! வேறு வினையே வேண்டாம். வந்த சுவடு தெரியாமல் நீ பின் வழியாகவே போய்விடு!"

"ஊஹூம், முடியாது! உன் தாத்தாவை நான் பார்த்து விட்டுத்தான் போவேன்!" என்று வசந்தி அடம் பிடித்தாள்.

"வேண்டாம் வசந்தி! 'ப்ளீஸ்' வசந்தி! உன்னைக் கையெடுத்து வேண்டுமானாலும் கும்பிடுகிறேன், வசந்தி!" என்று பிச்சுமணி தவித்தான்.

இவ்வளவையும் ஒரு தட்டி மறைவிலிருந்து கவனித்த தாத்தாவுக்கு அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை!

"மடையன்! மடையன்! ஒரு பெண்ணைப் பார்த்துக் கும்பிடுகிறேன் என்கிறான்" என்று அவர் வீறிட்டு அலறினார் — முறுக்கு மீசையின் முனைகள் இரண்டும் துடிதுடிக்க. அவர் எதிர்ப்பட்டதும் பிச்சுமணி வெடவெடவென நடுங்கினான்.

(தொடரும்)

கலைவளர்க்கும் கோயில்கள்

வாழ்க்கையில் கண்டோர் ரசிக்கத்தக்க வகையில் முன்னொருநாள் கண்டு சீமானுஜ ஒரு வழக்கறிஞரின் உருவப்படத்தைப் பெரிய அளவில் ஓர் ஓவியர் வெற்றிகரமாகத் தீட்டியிருந்தார். ஓவிய நாயகரான அந்த வழக்கறிஞர் 'ஜம்' என்று ஜரிகைத் தலைப்பாகை, சந்தனப் பொட்டு சகிதம் இரண்டு பைகளிலும் தம் கைகளை விட்டுக் கொண்டு கம்பீரமாக ஓவியத்தில் காட்சியளித்தார்.

சித்திரக் கலைஞருக்குப் பெருமை தாங்கவில்லை. "ஆஹா!" "அற்புதம்!", "பிரமாதம்!" என்று புகழ் மாலையைச் சூடிக்கொண்டே இருந்தவர் அந்தப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்த பிரஸ்தாப வழக்கறிஞரின் நெடுநாளையக் கட்சிக்காரர் ஒருவரைப் பார்த்துக் கைதட்டிக் கூப்பிட்டு நிறுத்தி, "உங்கள் வக்கீல் ஐயாவுடைய படத்தைப் பார்த்தீரா? அவரே நேரில் வந்து நிற்பதுபோல் இருக்கிறதா இல்லையா?" என்று கேட்டு விட்டு மற்றொரு புகழ்மாலையைச் சூடிக்கொள்ளத் தயார் ஆனார்.

கட்சிக்காரர் சித்திரத்தைக் [illegible] கவனமாகப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கினார். "நாராயணா! இது எங்கள் வக்கீல் ஐயா இல்லை" என்றார். ஓவியர் திடுக்கிட்டார்.

"உண்மையைத்தான் சொல்லுகிறேன்! எங்கள் வக்கீல் ஐயாவின் கைகள் கட்சிக்காரர்களின் சட்டைப் பைகளுக்குள்தான் இருக்குமே தவிர அவருடைய பைகளுக்குள் ஒரு நாளும் இருந்ததில்லை. அந்தக் குணத்தைப் பிரதிபலிக்காத சித்திரத்தில் உயிர் இல்லை. அதனால்தான் இந்தச் சித்திரம் எங்கள் வக்கீலின் படம் இல்லை என்று சொன்னேன்" என்று அந்த அனுபவ விமரிசகர் விவரித்துவிட்டுக் கிளம்பினாராம்!

வழக்கறிஞர்கள் பணத்திலேயே குறியாக இருப்பவர்கள் என்பதை இந்த நகைச்சுவைத் துணுக்கு சற்று மிகைப்படுத்திக் கூறினாலும் அவர்கள் பணம் சேர்ப்பதில் வெற்றி பெற அஸ்திவாரமாக அமைவது, அவர்கள் தங்கள் சட்ட ஞானத்தில் உழைத்துப் பெறும் வெற்றிதான். அந்தச் சட்ட ஞானத்தை, நீதியை நிலை நாட்ட நன்கு பயன்படுத்தும் வகையில் தன் மாணவர்களுக்கு அளிக்கும் சென்னை சட்டக் கல்லூரி கடந்த எழுபது வருடங்களில் தமிழ் நாட்டுக்கும், மற்றும் பல ராஜ்யங்களுக்கும், மிகச்



சென்னை, உயர் நீதி மன்றத்தின் தோற்றம்

சிறந்த வழக்கறிஞர்களையும், நீதிபதிகளையும், தேசத் தலைவர்களையும் சமூக சீர்திருத்தவாதிகளையும் தயாரித்து அனுப்பிப் பெருமை பெற்றிருக்கிறது. அந்தப் பணியை இன்று காலத்துக் கேற்ப பெரிய அளவிலேயே தொடர்ந்து செய்து கொண்டும் வருகிறது.

இந்தச் சட்டக் கல்லூரி இன்று பெருமையுடன் தனித்து நின்று பணியாற்ற வசதி செய்து கொடுத்தவர் சென்ற நூற்றாண்டின் இறுதியிலே சென்னை மாகாண கல்வி இலாகா டைரக்டராகப் பணியாற்றிய எச். பி. இரிக் ஆவர். 1884ம் ஆண்டு வரை சட்ட சம்பந்தமான பாடங்களைச் சென்னை, ராஜதானிக் கல்லூரியிலேயே போதித்து வந்தார்கள். ஒரே ஒரு சட்டப் பேராசிரியர் தான் வகுப்பு முழுவதையும் கவனித்து வந்தார்.

அப்போதுதான் இரிக் துரை அரசாங்கத்திடம் நான்கு யோசனைகளைச் சமர்ப்பித்தார். அவற்றில் மூன்று யோசனைகள், உயர்நீதி மன்ற நீதிபதிகளாலும், அரசாங்கத்தாலும் வெவ்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டு நல்ல வேளையாக முதல் யோசனை மாத்திரம் தப்பிப் பிழைத்தது.

அதன் விளைவாகத்தான் சென்னை நேதாஜிசாலைப் பகுதியில் ஹென்றி இர்வின் என்ற கட்டடக் கலை நிபுணரால் திட்டமிட்டு எழுப்பப்பட்ட கட்டடத்தில் 1889ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்பதாம் தேதி முதல் சட்டக் கல்லூரி செயல்படத் தொடங்கியது. இந்தக் கல்லூரியின் முதல் பிரின்ஸிபாலாக வந்து சேர்ந்தவர் ரெஜினால்ட் ஏ. நெல்சன் என்னும் பார் – அட் – லா.

ராஜதானிக் கல்லூரியில் சட்டம் போதிக்கப்பட்டு வந்த காலத்திலும், அங்கு சட்டம் படித்துப் பெருமைப்

டத்தக்க முறையில் பரீட்சை எழுதிப் பட்டம் பெற்றுச் சட்டத் துறைக்குப் பெருமை தேடிக் கொடுத்த பெரியார்கள் பலர் உண்டு. அவர்களில் ஒரே ஆண்டில் அதாவது 1870ம் ஆண்டில் பி. எல். பரீட்சையில் வெற்றி பெற்ற சர். டி. முத்துசாமிஐயரையும் திவான்பகதூர் வி. பாஷ்யம் ஐயங்காரையும் குறிப்பிடலாம்.

இராமக் கர்ணத்துக்கு உதவியாளராக மாதம் ஒருரூபாய் சம்பளம்வாங்கி வாழ்க்கையை ஆரம்பித்த சர் டி. முத்துஸ்வாமி ஐயர், உயர்நீதி மன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக மாதம் ஐயாயிரம் ரூபாய் சம்பளம் பெறும் வாய்ப்பைப் பெற்றார். அவரைத் தஞ்சாவூரிலிருந்து, அவருடைய திறமையை உணர்ந்து, சென்னைக்கு அழைத்து வந்தவர் ஜே. பி. நார்ட்டன். அவருடைய வக்கீல் படிப்பு அவருடைய நிர்வாகத்துறைக்கு உதவியது. அவர் வழக்கறிஞராகப் பணியாற்றவில்லை.

ஆனால் திவான்பகதூர் வி. பாஷ்யம் அய்யங்கார் சட்டப் படிப்பை முடித்துக் கொண்டு வழக்கறிஞராகப் பணியாற்ற முன் வந்தார். வேலை பழக, அப்போது சென்னை உயர்நீதி மன்றத்தில் பாரிஸ்டராகத் தொழில் புரிந்த ஜான் மில்லரை அணுகினார். ஜான் மில்லர், தம் ஊதியமாகப் பாஷ்யம் அய்யங்காரிடம் ஆயிரம் ரூபாய் கேட்டார். பாஷ்யம் அய்யங்காரிடம் உடனடியாக அத்தனை பணம் இல்லை. முதலில் ஐந்நூறு ரூபாய் கொடுப்பதாகவும், 'அப்ரென்டைஸ் ஷிப்' முடிந்தவுடன் ஐந்நூறு ரூபாய் கொடுப்பதாகவும் சொன்னார்.

அந்த ஆங்கிலேய பாரிஸ்டருக்குக் காயிலேயே குதி. "நீர் நடுவிலே செத்து வைத்தால் எனக்கு ஐந்நூறு ரூபாய் நஷ்டமாகுமே?" என்றாராம் நாக்கூசாமல். இந்த ஆசாமியை நெருங்கியதே தவறு என்று தீர்மானித்த ஐயங்கார், பி. கல்லிவன் என்ற மற்றொரு பாரிஸ்டரிடம் தொழில் பயிற்சி



ஸ்ரீ எஸ் ரங்கராஜன்

பெற்று, முதல் இந்திய அட்வகேட் ஜெனரலாகும் வாய்ப்பையும் பெற்றார். சீக்கிரமே உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிபதியாகவும் ஆனார்.

இப்போது சென்னை சட்டக் கல்லூரிக்குத் தலைவராக இருப்பவர் திரு எஸ். ரங்கராஜன் ஆவார். 1952ம் ஆண்டுக்குப் பிறகு 'பிரின்ஸிபல்' பதவியை நிரப்பாமல் அப்படியே விட்டு விட்டுச் 'சட்டப் படிப்பின் டைரக்டர்' என்ற பதவியைத் தோற்றுவித்திருக்கிறார்கள். இந்தப் பதவியில் ஏற்கனவே பணியாற்றிய திருவாளர்கள், வி. குன்னிராமன், எம். அனந்தநாராயணன், அனகிரிசாமி, ஏ. எஸ். பி. அய்யர் முதலியவர்களைத் தொடர்ந்து இப்போது திரு ரங்கராஜன் நிர்வாகம் செலுத்துகிறார். சென்னை ராஜ்யத்தின் பல மாவட்டங்களிலும் 'செஷன்ஸ்' நீதிபதியாக இருந்து அநுபவமும் ஆற்றலும் பெற்றவர். குறைவாகப் பேசினாலும் சுவையாகவும் உற்சாகத்துடனும் பேசுகிறார்.

"சாதாரணமாக இந்தக் காலத்தில் வக்கீல் துறைக்கு வருபவர்களுக்கு வாய்ப்புகள் குறைவு. நீதி ஸ்தலங்களில் போய் வாதாடி, திறமைசாலி என்று பெயர் எடுக்கும் வாய்ப்பு மிகக் குறைந்த சத விகிதத்தினருக்குத்தான் கிடைக்கிறது. மற்றவர்கள் தங்கள் படிப்புக்குச் சம்பந்தமில்லாத வேலைகளை, நாடிப் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. தொழில்

வக்கீல்கள் வருகிறார்கள்



துறைகளும் வியாபார வசதிகளும் பெருகியுள்ள இந்த நாட்களில் ஒரு வழக்கறிஞரின் ஆலோசனையும் உதவியும் அந்தத் துறையினருக்கு வெகுவாக உதவி செய்யும். இவற்றையெல்லாம் யோசித்துத்தான், சென்னை சர்வகலாசாலை இந்த ஆண்டிலிருந்து தொழில் சம்பந்தமான சட்டங்களைப் பிரத்தியேகமாகப் படித்து டிப்ளோமா வாங்க வசதி செய்து கொடுத்திருக்கிறது'' என்று பெருமிதத்துடன் கூறினார் திரு ரங்கராஜன்.

கம்பெனிச் சட்டங்கள், பாங்கிங், இன்ஷ்யூரன்ஸ் என்ற பகுதியிலும், வரி சம்பந்தமான சட்டங்கள் என்ற பகுதியிலும், தொழிலாளர் சட்டங்கள் நிர்வாகம் என்ற மூன்றாவது பகுதியிலும், தலா. என்பது மாணவர்கள் சேர்ந்து படிக்கலாம். இதில் சேருவதற்கு அவர்கள் ஏற்கனவே பி. எல். பரீட்சையில் பாஸ் பண்ணியிருக்க வேண்டும். மாலை ஐந்தரையிலிருந்து ஏழரை மணி வரை வகுப்புகள் நடக்கின்றன. இரண்டு வருடப் படிப்பு முடிந்ததும் அவர்களுக்கு டிப்ளோமா வழங்கப்படும்.

எந்தப் புது அமைப்பிலும் முன்னணியாக நிற்கும் தமிழ்நாடுதான் இந்தப் பிரத்தியேகச் சட்டப் படிப்பு டிப்ளோமாவில் முன்னணியில் நிற்கிறது. இந்த வழியைத் தங்கள் ராஜ்யங்களிலும், கடைப்பிடிக்கப் பல ராஜ்யங்கள் விவரம் கேட்டு எழுதியிருக்கிறார்களாம்.

வழக்கமான எப். எல்., பி. எல். வகுப்புகளில் சுமார் ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். இந்த அளவு எப்போதுமே இருந்து வருகிறது. இவர்களில் எழுநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள், வெளி ஊர்களிலிருந்தும் அக்கம் பக்கத்திலிருக்கும் ராஜ்யங்களிலிருந்தும் வந்து படிப்பவர்கள். ஏற்கனவே பல கல்லூரிகளில் தொடர்ந்து நான்கைந்து வருடங்கள் படித்துப் பட்டம் பெற்ற பின்தான் அவர்கள் இந்தக் கல்லூரிக்குள் நுழைய வேண்டியிருப்பதால், அவர்கள் விளையாட்டுத் துறையிலோ, விவாதத் துறையிலோ நன்கு தேர்ச்சி பெற்றவர்களாகவே திகழ்கிறார்கள்.

பிற்காலத்தில் நிஜ வாழ்க்கையில் நீதிபதிகள் முன் நின்று வாதிக்காகவோ, பிரதிவாதிக்காகவோ வாதாடி வெற்றி காண, அவர்கள் படிக்கும்போதே தங்களுள் 'விளையாட்டு' கோர்ட்டுகள் நடத்தி, புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் பார்வையாளராக வீற்றிருக்க, அமர்க்களமாக வாதப் பிரதிவாதம் நடத்திப் பார்ப்பார்களாம். இந்த நிகழ்ச்சி சுவாரசியமாக இருக்கும் என்று ஒரு மாணவர் குறிப்பிட்டார்.

சட்டக் கல்லூரி ஹாஸ்டல் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்தது என்று சில ஹாஸ்டல் மாணவர்களைச் சந்தித்தபோது தெரியவந்தது.

''இது மாமனார் காலேஜ்! எங்களுக்கென்ன சார் கவலை?'' என்று குறிப்பிட்டார் ஒரு ஒரு முப்பது வயதுக்காரர். 'அநேகமாகச் சட்டக் கல்லூரியில் சேர வரும் மாணவர்கள் விவாகமானவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் தங்கள் மாமனார் அளிக்கும் பண உதவியினால்தான் படிக்கிறார்கள். தந்தைகள் வேண்டுமானாலும் பிசுநாரித்தனம் பண்ணுவார்கள். ஆனால் மாமனார்கள் அப்படிச் செய்வதில்லை' என்ற விளக்கமும் கூடவே கிடைத்தது.

''நோ! நோ! இது தாத்தா காலேஜ் சார்'' என்றார் மற்றொரு மாணவர். அவர் தம் பாட்டனாரின் பண உதவியால் படிக்கவில்லை. அவர் தாத்தாவாகப் போனாலும் பரவாயில்லை; பி. எல். பட்டம் வாங்கித்தான் தீர வேண்டும் என்று வீட்டில் சொல்லிவிட்டார்களாம். பரம்பரையான வக்கீல் குடும்பம்; பசையுள்ள குடும்பமும்கூட!

இன்றைய இளம் வழக்கறிஞர்களைப் பற்றி இந்தத் துறையில் நீண்ட காலம் அநுபவம் பெற்ற முதிர்ந்த வழக்கறிஞர் குறிப்பிட்ட வார்த்தைகள் சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தன.

''இந்தக் காலத்துப் பிள்ளைகள் எல்லாம் கோர்ட்டுக்கு வந்து ஒரே கட்டைக் குரலில் பாடம் ஒப்புவிப்பதுபோல் பேசுகிறார்கள்; அல்லது சட்ட புஸ்தகங்களைப் புரட்டி வாசிக்க ஆரம்பிக்கிறார்கள். நீதிபதிகளின் கவனம் அவர்கள் பேச்சில் லயிக்கவில்லை என்றால் அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அந்தக் காலத்தில், நாங்கள் குரலுக்கும் முக்கியத்துவம் கொடுப்போம். சட்டப் பாயின்டுகளில் வலு இல்லாத போதுங்கூட, குரலில் கொடுக்கும் ஏற்ற இறக்கத்திலும் அழுத்தத்திலும் நாங்கள் நீதிபதிகளின் கவனத்தைக் கவர்ந்து விடுவோம். பல பிரபல வழக்கறிஞர்கள் பேசும்போது, திறமை வாய்ந்த சங்கீத வித்துவான்களின் மனோதர்மம் நிறைந்த கச்சேரியைக் கேட்பதுபோல் இருக்கும். அந்தச் சம்பிரதாயமே இப்போது இல்லை'' என்றார்.

''உயர் நீதி மன்றங்களில் கறுப்பு கௌன் ஏன் அணிந்து கொள்ள வேண்டும்?'' என்ற விவரமும் மாணவர்களுக்கு இன்னும் தெரியவில்லை. தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒன்றிரண்டு நபர்கள்கூட ''ஏதோ வழக்கம்! அவ்வளவுதான்'' என்று மழுப்பி விட்டார்கள்.

'லண்டன் நகரத்தின் சட்ட உலகம்' என்று பிரான்ஸிஸ் கௌப்பர் என்பவர் எழுதிய புத்தகத்திலிருந்து ஒரு விஷயம் புலப்படுகிறது. ஏழை வக்கீல், பணக்கார வக்கீல் என்ற பாகுபாடு அவரவர்களுடைய சொந்த ஆடைகளிலிருந்து தெரிவது நல்லதல்ல என்பதற்காகத்தான் எல்லோரும் ஒரே மாதிரி கறுப்பு கௌன் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற நியதி ஏற்பட்டதாம்! அந்த வழக்கம் இங்கும் அமுலுக்கு வந்திருக்கலாம் அல்லவா?

ஆனால் அந்த வழக்கத்தில்கூடச் சில மாறுதல்கள் தோன்றியிருக்கின்றனவாம். முன்பெல்லாம் அந்தக் கறுப்பு கௌனின் முதுகுப் பக்கத்தில் ஒரு பை மாதிரி வைத்திருப்பார்களாம். அதைப் போட்டுக் கொண்டு வழக்கறிஞர்கள் நன்றாகப் பேசப்பேசப் பின்னாலிருக்கும் கட்சிக்காரர்கள் பணத்தை அதில் போட்டுக் கொண்டே இருப்பார்களாம்! இப்போது அந்தப் பை வைப்பதை நிறுத்தி விட்டார்கள்.

மருத்துவக் கல்லூரிகளுக்கு ஆஸ்பத்திரிகளும், பொறி இயல் கல்லூரிகளுக்குத் தொழில் பட்டறைகளும் இருப்பது போலச் சட்டக் கல்லூரிக்கான பரிசோதனைச் சாலை பக்கத்திலிருக்கும் உயர்நீதி மன்றம்தான். மாணவர்கள் அடிக்கடி அங்கு போய் அமர்ந்து வழக்கு விசாரணைகளைக் கவனித்துப் பயன் பெறுகிறார்கள்.

''சட்டம் இரு பக்கத்திலும் கூர்மையான கத்தி போல! ஆகையால் அதை ஜாக்கிரதையாக உபயோகப்படுத்த வேண்டும்'' என்றார் ஓர் அறிஞர்.


மிகச் சிறந்த பேரமாய்
அமைபவை பினிக்ஸ் ஆடைகள்
பினிக்ஸ் மில்ஸ்
ஒரு ருயா ஸ்தாபனம்
RPY-9 TAM

நாடாண்ட நங்கையர்


ஆளப் பிறந்த அழகி

அவளுக்கு நீளமான மூக்கு. அந்த மூக்கு அவ்வளவு நீளமானதாயில்லாமலிருந்தால், உலக சரித்திரத்தின் போக்கு வேறு விதமாகத் திரும்பியிருக்கும்' என்று ஓர் அறிஞன் கூறுகிறான். எந்தக் கருத்தில் இப்படிச் சொன்னானோ நமக்குத் தெரியாது. எந்தக் கருத்தில் வேண்டுமானாலும் சொல்லியிருக்கட்டும், அவள் என்னவோ அழகு மிக்கவள். அந்த அழகு, பார்ப்பவர் கண்ணைப் பறிக்கக் கூடிய அழகு என்று சொல்ல முடியாவிட்டாலும், பார்ப்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விடக் கூடிய அழகு என்று நிச்சயமாகச் சொல்லலாம். இல்லாவிட்டால் பிற்காலத்தில், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், அரச குடும்பங்களைச் சேர்ந்த அநேக ஸ்திரீகள், அழகில், அவளுடைய வாரிசுகள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு பெருமையும் திருப்தியும் அடைந்திருப்பார்களா?

அழகுக்கு ஈடான அறிவுடையவள் அவள். அந்த அறிவுக்குத் தகுந்த பன்மொழிப்புலமை. சுமார் பத்து விதமான மொழிகளில் சரளமாகப் பேசக் கூடியவள். பேசினால், வீணையின் நாதம் போலிருக்கும் இனிமையான குரல். சரளமான சுபாவம், எடுப்பான தோற்றம். இப்படி எல்லாம் அவளிடம் ஒன்று கூடியிருந்தன. அவள் அரசியாயிருந்து ஆள வேண்டும் என்பதற்காகவே, பெண்ணாயிருந்து காதல் வாழ்க்கையை மேற்கொண்டாள்! அவளுடைய வீரத்துக்குத்தான் என்ன குறைச்சல்? ஒரு கடற்போரில், எகிப்தியக் கப்பற் படைக்குத் தலைமை வகித்திருக்கிறாள்; ஒரு தரைப்போரில் ஊக்கமிழந்து நின்ற எகிப்தியப் போர்வீரர்களுக்கு ஊக்கமூட்டி வழிகாட்டியிருக்கிறாள். இப்படிப்பட்டவள் யார்? கிளியோபாட்ரா! சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எகிப்தை ஆண்டவள்!

மகா அலெக்ஸாந்தர் கி. மு. 323ம் ஆண்டில் இறந்துபோன பிறகு, அவனுடைய ஏகாதிபத்தியத்துக்குட்படுத்தப் பெற்றிருந்த எகிப்து, அவனுடைய படைத் தலைவர்களில் ஒருவனான டாலமி என்பவனுடைய ஆளுகைக்குட்பட்டது. இவனை முதலாவது டாலமி என்பர். இவனுக்குப் பிறகு இவனுடைய சந்ததியினர், வரிசைக்கிரமமாகச் சுமார் முந்நூறு ஆண்டுகள் வரை ஆண்டு வந்தனர். இவர்களில் பதினோராவது டாலமியின் மகள் தான் கிளியோபாட்ரா. இவளுக்கு முன்பு இதே பெயருடன் இந்தச் சந்ததியில் வேறு சிலர் இருந்ததனால், இவளை ஏழாவது கிளியோபாட்ரா என்று சரித்திராசிரியர்கள் கூறுவர்.

இவள் கி. மு. 69ம் வருஷம் பிறந்தாள். இவள் பிறந்த காலத்தில், எகிப்தின் செல்வச் செழுமையும், பொருள் வளமும் ரோமாபுரியின் ஏகாதிபத்தியப் பசியைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தன. எகிப்தின் மத்திய



பகுதி தவிர, மற்றப் பகுதிகள் ரோமாபுரியின் ஆதிக்கத்துக்குட்பட்டு விட்டிருந்தன. எஞ்சிய பகுதியும் விழுங்கப்பட்டு விடுமோ என்று எகிப்தியர்கள் அஞ்சிக் கொண்டிருந்தார்கள். போதாக்குறைக்கு டாலமி அரச குடும்பத்தினருக்குள்ளேயே போட்டியும், பொறாமையும் நிறைந்திருந்தன. இந்த மாதிரியான சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த கிளியோபாட்ரா, தன் தந்தை செய்து வைத்துப் போயிருந்த ஏற்பாட்டின்படி கி. மு. 51ம் ஆண்டு தனக்கு அடுத்த சகோதரன் பன்னிரண்டாவது டாலமியுடன் சேர்ந்து ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள். அப்பொழுது இவளுக்குப் பதினெட்டு வயது; அவனுக்குப் பத்து வயது. சிறிதுகாலத்துக்குள் எகிப்திய வழக்கப்படி, இருவரும் கணவனும் மனைவியுமானார்கள்.

தன்னைக் காட்டிலும் எட்டு வயதுச் சிறியவனான தன் கணவனிடத்தில் கிளியோபாட்ராவினால் எந்த விதமான சுகத்தையும் அடைய முடியவில்லை. இதனால் அவனை ஓரளவுக்கு அலட்சியமாகவே நடத்தி வந்தாள். இவளுடைய கை, நாளுக்கு நாள் மேலோங்கிக் கொண்டு வந்தது. தன்னுடைய சகோதரனை அரச பீடத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டு, தானே சுயமாக ஆள, இவள் ரகசிய முயற்சிகள் செய்து வந்தாள். அப்படிச் செய்து வந்தாளோ, இல்லையோ, இவளுடைய நடவடிக்கைகள், இவளைப் பற்றிச் சந்தேகிக்கும்படி செய்தன. இப்படிச் சுமார் மூன்று வருஷ காலம் கழிந்தது. இளைஞனாகிய டாலமிக்கு இந்த நிலையை இனியும் சகித்



துக்கொண்டிருக்க முடியவில்லை. அரசவையைச் சேர்ந்த பலருடைய தூண்டுதலினாலும் ஆதரவினாலும் இவளை நாட்டை விட்டுவிரட்டி விடத் திட்டமிட்டான். திட்டம் வெற்றி பெற்றது. இவளும் நாட்டை விட்டு வெளியேறி, எகிப்து நாட்டின் எல்லையும் சிரியா நாட்டின் எல்லையும் சந்திக்கின்ற இடத்தில் உள்ள ஓர் ஊருக்கு வந்து சேர்ந்தாள். அங்கிருந்து கொண்டு, தன் சகோதரன் மீது படையெடுத்துச் சென்று, இழந்து விட்ட அரசுரிமையைத் திரும்பப் பெற ஆயத்தங்கள் செய்து கொண்டு வந்தாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ரோமாபுரியின் அரசியலில் முக்கிய பங்கு பெற்றிருந்த ஜூலியஸ் சீஸர் என்பவன் ஒரு படையுடன் எகிப்தை நோக்கி வந்து அலெக்ஸாந்திரியாவென்னும் துறைமுகப் பட்டணத்தில் முகாம் போட்டான். இவன் ஒரு சிறந்த வீரன்; பெண்கள் விரும்பக் கூடிய வண்ணம் சம்பாஷிப்பதில் வல்லவன். இவனைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருந்தாள் கிளியோபாட்ரா. தனக்குரித்தான அரச பதவியை மீண்டும் அடைய இவனுடைய உதவியை நாடுவது என்று தீர்மானித்தாள். ஆனால் தன் சகோதரனுக்கும் இவனுக்கும் தொடர்பு ஏற்படும் போல் தெரிந்தது. அதற்கு முந்தி, தான் இவனுடன் தொடர்பு கொண்டு விட வேண்டுமென்று நிச்சயித்தாள். இதற்காகத் துணிச்சலான ஒரு யுக்தியைக் கையாண்டாள்.

ஒரு நாள், எல்லைப்புறத்தில் தான் தங்கியிருந்த ஊரிலிருந்து ஒரே ஒரு வேலைக்காரனுடன் புறப்பட்டு ஒரு படகிலேறி வந்து இரவு நேரத்தில் யாருக்கும் தெரியாமல் அலெக்ஸாந்திரியா துறைமுகத்தை அடைந்தாள். அங்கிருந்து, சீஸர் தங்கியிருந்த மாளிகையின் முன் வாயிலுக்குப் போய்ச் சேர்ந்தாள். வேலைக்காரனிடம் எல்லாம் முன்னதாகவே சொல்லி வைத்திருந்தாள். அதன்படி அவன், இவள் மீது ஒரு கம்பளிப் போர்வையைச் சுற்றி ஒரு மூட்டை போலாக்கினான். இந்த மூட்டையை எடுத்துக் கொண்டு, காவற்காரர்கள் சிறிது அசந்து மறந்திருக்கையில் மாளிகைக்குள் புகுந்தான். புகுந்து சீஸர் தங்கியிருந்த அறையையடைந்து அங்கு அவன் முன்னிலையில் இந்த மூட்டையை இறக்கி வைத்து விட்டு வெளியேறி விட்டான். அவன் சென்றதும், கிளியோபாட்ரா, மூட்டையிலிருந்து விடுபட்டு அரைகுறையான ஆடையுடன் சீஸரின் முன்பு நின்றாள். திடீரென்று இப்படி ஒரு பெண் வந்து நிற்பதைக் கண்டு அவன் பிரமித்துப் போனான். அழகுத் தெய்வமே இப்படித் தன் முன் வந்து நிற்பதாக அவனுக்குத் தோன்றியது. அவன் அவளை உற்றுப் பார்த்தான். இந்தப் பார்வை, அவனுடைய கருணை உணர்வைத் தூண்டியது. அதுமட்டுமன்று; அவனுடைய உள்ளத்தில் காதலென்னும் மதுவைக் கொண்டு வந்து நிரப்பியது. எல்லாம் ஒரு கண நேரந்தான். இந்த நேரத்திலிருந்து அழகியான கிளியோபாட்ராவும் வீரனான சீஸரும், காதலன் காதலிகளானார்கள். சீஸருடைய ஆதரவு, தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் கிளியோபாட்ராவுக்கு உண்டாயிற்று.

இதற்குப் பிறகு, சீஸர், இவளுடைய அரசுரிமையைத் திருப்பி இவளுக்கு வாங்கிக் கொடுக்கத் தீர்மானித்து, இவளை விரட்டி விட்ட இவள் சகோதரன் பன்னிரண்டாவது டாலமி மீது போர் தொடுத்து வெற்றி கண்டான். இந்தப் போரில் டாலமி தப்பிச் செல்ல முயலுகையில் நைல் நதியில் மூழ்கி இறந்து போனான்.

இவனுக்குப் பிறகு, இவளுடைய அடுத்த சகோதரனை பதின்மூன்றாவது டாலமியை அரச பீடத்தில் அமர்த்தி, கிளியோபாட்ரா அவனுடன் சேர்ந்து அரசாட்சி நடத்துவதென்று ஏற்பாடு செய்தான் சீஸர். கிளியோபாட்ராவும், எகிப்திய வழக்கப்படி, தன் கடைசிச் சகோதரனை இந்தப் பதின்மூன்றாவது டாலமியை மறுமுறை மணந்து கொண்டாள். பெயரளவுக்குத்தான் அவள் அவனுடைய மனைவி!

சீஸர், கிளியோபாட்ராவை விட்டுப் பிரிய மனமில்லாமல் எகிப்திலேயே அப்படியும் இப்படியுமாகச் சுமார் ஆறு மாதத்துக்கு மேல் காலங் கடத்தினான். இதற்குள், ரோமாபுரியில் அமைதி குலைந்திருப்பதாகக் கேள்வியுற்று, அங்கு செல்ல வேண்டிய அவசியத்துக்குட்பட்டான். கிளியோபாட்ராவும், அவனை விட்டுப் பிரிந்திருக்க மனமில்லாதவளாய், ஆட்சிப் பொறுப்பை, தன் புதிய கணவனான பதின்மூன்றாவது டாலமி வசம் ஒப்படைத்து விட்டு அவனுடன் ரோமாபுரிக்குச் சென்றாள். அங்கு பகிரங்கமாகவே அவனுடைய ஆசை நாயகியாகச் சுமார் இரண்டு வருஷ காலம் தங்கிச் சுகபோக வாழ்க்கை நடத்தி வந்தாள்.

சீஸர் எகிப்திலிருந்து திரும்பிச் சென்ற பிறகு அதிகாரச் செருக்கு மிக்கவனான். தவிர, இவன் கிளியோபாட்ராவுடன் உல்லாச வாழ்க்கை நடத்துவது ரோமாபுரிவாசிகளுக்குச் சிறிது கூடப் பிடிக்கவில்லை. இவன் மீது அதிருப்தி அதிகரித்தது. கடைசியில் கி. மு. 44ம் வருஷம் சீஸர் கொலையுண்டான்.

கிளியோபாட்ரா, இனி ரோமாபுரியில் தங்கியிருத்தல் ஆபத்தென்று உணர்ந்து, சீஸரிடம் தனக்குப் பிறந்திருந்த சுமார் மூன்று வயது மகனுடன் எகிப்துக்குத் திரும்பினாள்.

வந்ததும், தன் மகனுக்கு அரச பதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக, தன் கணவனான பதின்மூன்றாவது டாலமியை விஷம் வைத்துக் கொன்று விட்டாள். உடனே தன் மகனை அரச பீடத்தில் அமர்த்தி, அவனும் தானும் சேர்ந்து ஆட்சி நடத்துவதாகக் காட்டிக் கொண்டாள். உண்மையில் ஆண்டது இவள்தான். இந்த மூன்று வயது மகன்தான் பின்னர் பதினான்காவது டாலமியென்று அழைக்கப்பட்டான்.

இந்த நிலையில் ரோம சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தை மூவர் பங்கு போட்டுக் கொண்டனர். இவர்களில் மார்க் ஆன்டனி என்பவனுக்கு, எகிப்து முதலிய கிழக்குப் பகுதி நாடுகளின் ஆதிக்கம் கிடைத்தது. இந்த ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ள வேண்டி அவன், ஒரு படையுடன் சின்ன ஆசியா பக்கம் வந்தான். வழியெல்லாம் அவனுக்கு ராஜோபசாரங்கள் நடந்தன. கிளியோபாட்ராவும், சின்ன ஆசியாவி


யாவரும்
போற்றும்
குடும்பத்தலைவி
எல்லோரும் அவளை நேசிக்கின்றனர். காரணம் அவள் அவ்வளவு கவர்ச்சியாக இருக்கிறாள். கண்ணைப் பறிக்கும் வெண்மை நிற ஆடையில்-ராபின் ப்ளூவில் கடைசியாக அலசி வெண்மை பளிச்சென்றாக்கப்பட்ட ஆடையில் - பெருமிதத்துடன் உலாவுகிறாள்.
ராபின்
ப்ளூ
Robin Ultramarine
வெள்ளைத் துணிகளை பிரகாசிக்கச் செய்கிறது



மணி பள்ளிக்கூட நாடகத்தில் பெண் வேடம் போட்டான். அப்படியே தத்ரூபமாக இருந்தது. பரிசும் கிடைத்தது. ஆனால் அவனை இப்போது 'பெண்'மணி! 'பெண்'மணி! என்று கூப்பிடுகிறார்களே, எல்லாரும்.

லுள்ள டார்ஸஸ் என்ற ஊரில் இவளை ஆடம்பரமாக வரவேற்று உபசரித்தான். ஆன்ட்டோனி, இவள் செய்த உபசாரத்தில் மட்டுமல்ல, இவளுடைய அழகிலும் எடுப்பான தோற்றத்திலும் மயங்கி விட்டான். அவ்வளவுதான்; இருவரும் காதல் வாழ்க்கையை மேற்கொண்டு விட்டார்கள். அப்பொழுது ஆன்ட்டோனிக்கு நாற்பத்தேழு வயது;— கிளியோபாட்ராவுக்கு இருபத்தெட்டு வயது. கிளியோபாட்ரா — ஆன்ட்டோனி உறவை ரோமாபுரிவாசிகள் விரும்ப வில்லை. ஆன்ட்டோனியின் மீது அதிருப்தி வளர்ந்தது. இதன் விளைவாக, ஆக்டேவியன் என்பவன் இவன் மீது படையெடுத்து வந்தான். இருவருக்கும் கி. மு. 31ம் வருஷம் ஆக்டியம் என்ற இடத்தில் போர் நடைபெற்றது. இந்தப் போரில் கிளியோபாட்ரா, ஆன்ட்டோனிக்கு மிகவும் உதவியாயிருந்தாள். ஆயினும் என்ன? ஆக்டேவியன் வெற்றி பெற்றான். உடனே, தன்னிச்சையாகப் பணிந்து விடுமாறு கிளியோபாட்ராவுக்குச் சொல்லி யனுப்பினான். இவளுடைய அழகில் அவன் மயங்க வில்லை. ஆனால் இவள் பணிய மறுத்து விட்டாள். பணிந்தால் தன்னை ரோமாபுரிக்கு அழைத்துப் போய் அங்கு பகிரங்கமாக அவமானப்படுத்தக்கூடும் என்று அஞ்சினாள். எனவே, அரேபியாவின் வழியாக இந்தியாவுக்குத் தப்பியோட முயன்றாள்; முடியவில்லை. கடைசியில், தனக்கென்று கட்டி வைத்துக் கொண்டிருந்த கல்லறைக்குச் சில சேடியருடன் சென்று அங்கு அடைக்கலம் புகுந்தாள்.

ஆன்ட்டோனியோ, போர் நடுவில், கிளியோபாட்ரா தன்னைக் கைவிட்டு விட்டு எங்கோ ஓடிப் போய் விட்டாள் என்று கருதினான். அப்படியில்லாவிட்டால், தற்கொலை செய்து கொண்டிருக்கக் கூடுமென்று நினைத்தான். இனி உயிர் வாழ்தல் கூடாதென்று தற்கொலை செய்து கொள்ள முயன்றான். இந்த முயற்சி பலிக்கவில்லை. கிளியோபாட்ராவுக்கு இது தெரிந்தது. அவனை அழைத்து வரச் செய்து வேண்டிய உபசரணைகள் செய்தாள். இவள் காட்டிய அன்பு, அவன் மனத்தை உருக்கியது. அநாவசியமாக இவளைச் சந்தேகித்ததற்காக வருந்தினான். இவள் அணைப்பில் உயிர் துறந்தான்.

ஆன்ட்டோனி மரித்த பிறகு, கிளியோபாட்ராவின் நிலை பரிதபிக்கத் தக்கதாகி விட்டது. வாடி வதங்கிய சருகு போலாகி விட்டாள். ஆக்டேவியனோ, இவள் கல்லறையில் அடைக்கலம் புகுந்திருக்கிறாள் என்று தெரிந்ததும், அதைச் சுற்றிக் காவல் போட்டு விட்டான். காவலர்களிலே ஒருவன், இவளுடைய பரிதாப நிலைக்கு இரங்கி, ஒரு நாள் இவளிடம் வந்து 'உன்னை இன்னும் மூன்று நாட்களில் ரோமாபுரிக்கு அனுப்ப ஆக்டேவியன் திட்டமிட்டிருக்கிறான்' என்று எச்சரிக்கை கொடுத்து விட்டுப் போனான். இதைக் கேட்டதும் தன் உயிரைப் போக்கிக் கொள்ளத் தீர்மானித்தாள் கிளியோபாட்ரா.

இவள் செய்து வைத்திருந்த முன்னேற்பாட்டின்படி, கி. மு. 30ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் இருபத்தொன்பதாந் தேதி ஒரு குடியானவன், அத்திப் பழங்கள் நிறைந்த ஒரு கூடையை மூடி போட்டுக் கொண்டு வந்து இவள் முன்பு வைத்து விட்டுப் போனான். இந்தக் கூடை வந்து சேர்ந்ததும், கிளியோபாட்ரா, கடைசித் தடவையாக நீராடி உணவு உட்கொண்டாள். பிறகு அங்கிருந்த சேடியர்களை அப்புறம் போகச் சொன்னாள். தனியாக இருக்கையில், அத்திப் பழக் கூடையைத் திறந்தாள். அதிலிருந்து புஸ்ஸென்று ஒரு பாம்பு வெளிப்பட்டு இவளைக் கடித்து விட்டு, கூடைக்குள் திரும்பிப் போய் விட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் விஷமேறி இறந்து விட்டாள். இவளோடு எகிப்தின் சுதந்திர வாழ்வு முற்றுப் பெற்றுவிட்டது; அது ரோம சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாகி விட்டது.

கிளியோபாட்ரா நிகரமாக ஆண்டதெல்லாம் இருபது வருஷங்களுக்கு மேல் இல்லை. இந்தக் காலத்தில் அவள் எத்தனையோ விதமான சச்சரவுகளில் ஈடுபட்டாள்; எத்தனையோ விதமான சுற்றுச் சார்புகளின் மத்தியில் சொற்ப சொற்ப காலமேனும் வாழ்ந்து வரவேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கு ஏற்பட்டது. ஆனால் ஒரு கணம்கூட அவள் நெஞ்சுறுதி குலையவில்லை; தான் ஓர் அரசி, அரசப் பிறந்தவள் என்பதை மறக்க வில்லை. உண்மையில் அவள் தன்னை, 'அரசர்களுக்கு அரசி' என்றே அழைத்துக் கொண்டாள். அப்படியே தன் காலத்தில் வெளியான பிரகடனங்கள், சாஸனங்கள், நாணயங்கள் முதலியவற்றில் பொறித்து வெளியிடச் செய்தாள். இவற்றுள் பல, இன்றளவும் அவளை நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன.

மற்றும், உலகத்துப் பல்வேறு மொழிகளில் தோன்றிய பல துறை இலக்கியங்களிலும் கிளியோபாட்ரா இடம் பெற்றிருக்கிறாள். ஆங்கில மொழியில் மட்டும், கொந்தளிப்பு நிறைந்த அவள் வாழ்க்கையைப் பல கோணங்களில் வைத்துக் காட்டுகின்ற முறையில் 1540 முதல் 1905ம் வருஷம் வரை நூற்றிருபத்தேழு நாடகங்கள் வெளிவந்திருக்கின்றன. அதிமேதைகளான ஷேக்ஸ்பியரும், பெர்னார்டு ஷாவும், தங்கள் படைப்புக்களில் அவளுக்கு இடம் கொடுக்க மறந்துவிடவில்லை அல்லவா?













1, 3. சிந்தனையாளர் மன்றத்தின் ஆதரவில் காமராஜ ரின் அறுபத்தோராவது பிறந்த தினம் கொண்டாடப் பட்டது. 2. பூமி சாஸ்திர விஞ்ஞானி ஸ்ரீ எம். எஸ். கிருஷ்ணன் அவர்களின் அறுபத்தி ஐந்தாவது பிறந்த தின வைபவத்தில் பாரத ஜனாதிபதி விழா மலரை அவருக்கு அளிக்கிறார். 4 கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் தயாரித்துள்ள 'தமிழ் இலக்கியம்' நான் காம் தொகுதியை ஸ்ரீ கேசவ சுந்தரபாக வெளியிட் டார். 5. சென்னை ஏ. ஆர். வி. பள்ளியின் புதுக்கட்டி டத்தைச் சென்னை கவர்னர் திறந்து வைத்தார். 6. ஏஷியாடிக் ஆக்ஸிஜன் தொழிற்சாலைக்குத் திரு காமரா ஜர் அஸ்திவாரக் கல் நாட்டினார். 7, 8, 9. பத்மா சேஷாத்திரி டயர்லியைப் பள்ளியாக நுங்கம்பாக்கம் பால பவன் உருவாக 30,000 ரூபாய் நன்கொடை வழங்கி யுள்ளார் ஆர். எம். சேஷாத்திரி அவர்கள். நாமகரண வைபவத்தில் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.







பொதியை முனிவர் டி.கே.சி.


தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

அன்று பொதிகை மலையிலே அகத்திய முனிவர் வந்து தங்கியிருந்தார். அவரோ தென் சொற் கடந்தவர்; வட சொற்கலைக்கு எல்லை தேர்ந்தவர். என்றுமுள தென்தமிழை இயம்பி இசை கொண்டவர். அவரது பர்ணசாலையிருந்த இடத்திலே ஒரு சத்திய யுகமே நடந்தது. ஆம்! அங்கு வரும் யானையும் அதன் மேல் பகைமை பூண்ட சிங்கமும் கூடிக் குலாவி விளையாடிக் கொண்டிருந்தன. புலியும் மானும் ஒரு துறையிலே தண்ணீர் குடித்தன. கரடியும் எருமையும் சேர்ந்து உறவாடிக் களித்தன. இன்னும் பாம்பும் மயிலும் சேர்ந்து ஒன்றாய் விருந்தருந்தின. ஒன்றுக்கொன்று வைரிகளாகப் பிற இடங்களிலே வாழ்ந்த ஜந்துக்கள் எல்லாம் அகத்தியர் முன்னிலையிலே இப்படிக் கூடிக் குலாவி மகிழ்ந்தன. இப்படி யெல்லாம் நான் சொல்ல வில்லை. குமரகுருபர சுவாமிகளே சொல்கிறார் மதுரை மீனாட்சி அம்மை குறத்திலே. பொதிகை மலைக் குறத்தி தன் நாட்டு வளம் கூறும் முறையிலேதான் இப்படி சத்திய யுகம் ஒன்று நடந்தது அன்று என்று பாடுகிறேன்.

சிங்கமும் வெங்களிறு முடன்
  விளையாடும் ஒரு பால்
சினப் புலியும் மடப்பிணையும்
  திளைத்திடும் அங்கொருபால்
வெங்கரடி மரையினொடும்
  விளையாடும் ஒருபால்
விடஅரவும் மடமயிலும்
  விருந்தயரும் ஒருபால்
அங்கணமர் நிலங்களிக்கும்
  வெண் கவிகை நிழற்கீழ்
அம்பொன் முடிசூடும் எங்கள்
  அபிடேக வல்லி
செங்கமலப் பதம் பரவும்
  கும்ப முனி பயிலும்
தென் பொதிய மலைகாண்
  மற்று எங்கள்மலை அம்மே!

என்பது பாடல். இப்படி ஒரு சத்திய யுகம் நடந்ததைக் குமர குருபரர் நேரில் காணவில்லை. தம் கற்பனைக் கண்களால் கண்டதையே சொல்கிறார், நல்லதொரு பாட்டில். ஆதலால், இப்படி ஒரு சத்திய யுகம் நடந்ததோ என்னவோ என்றுதான் சங்கை எழும். ஆனால் சமீப காலத்திலே நம் கண் முன்னே அப்படி ஒரு சத்திய யுகம் நடந்தது அந்தப் பொதிகை மலைச் சாரலிலே; குற்றாலத்திலே தான். ஆம், ரஸிகமணி டி. கே. சி. என்னும் பொதிகை முனிவர் முன்னால் நடந்தது ஒரு சத்திய யுகம். இதை நானும் தமிழ் அன்பர் பலரும் நேரிலேயே கண்டோம்.

டி. கே. சி. குற்றாலத்தில் பர்ணசாலை கட்டியிருக்க வில்லை. யோக தண்டமும், கமண்டலமும் தாங்கி நடக்க வில்லை. சடை முடி தரித்திருக்க வில்லை. புலித்தோலை ஆடையாக உடுக்க வில்லை. என்றாலும் பொதிகை முனிவராக வாழ்ந்தார். அவரிடம் பல திறப்பட்டவர்களும் வந்தார்கள். ஆம், ராஜரிஷியான ராஜாஜி வந்தார். அவர் காரியங்கள் அத்தனையையும் வெறுக்கும் ஈரோட்டுப் பெரியார் வந்தார். ஆங்கில சர்க்காரின் அடிவருடிகள் வந்தார்கள். அந்தச் சர்க்காரைக் கவிழ்க்க விரும்பிய அரசியல்வாதிகள் வந்தார்கள். எக்குச் சட்டம் என்னும் ஐ. சி. எஸ். வர்க்கத்தினர் வந்தனர். அவர்களைக் கண்டு அஞ்சிக் குலைநடுங்கும் அன்றிவார உத்தியோகஸ்தர்கள் வந்தனர். ஏன், நிரம்பச் சொல்லப் போனால் சி. ஐ. டி. என்னும் ரகசியப் போலீசார் வந்தனர், அவர்கள் கண்ணுக்கு அகப்படாமல் தலைமறைவாய்த் திரியும் குற்றவாளிகள் வந்தனர்; வைதிகப் பிராமணர்கள் வந்தனர், அவர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கூறும் கட்சியினர் வந்தனர். முஸ்லிம் அன்பர்கள் வந்தனர், ஹரிஜன சகோதரர் வந்தனர், சைவர்கள் வந்தனர், வைணவர்கள் வந்தனர், சமணர்கள் வந்தனர், பௌத்தர்கள் வந்தனர். ஆண்கள் வந்தனர், பச்சிளம் குழந்தைகள் வந்தனர். எல்லோரும் டி. கே. சி. உடனிருந்து அவர் சொல்லும் பாடல்களைக் கேட்



டனர்; அவற்றைக் கேட்பதில் மெய்ம்மறந்த னர்; அவர் சொன்ன கவிகளை மாந்தினர்; தந்த உணவை உண்டனர். ஓரே கோலாகல மான வாழ்வையே அநுபவித்தனர். இப்படி ஒரு யுகத்தை நடத்தியவர் அவர் என்னும் போது, அவரைப் பொதிகை முனிவர் என்றே அப்பொதிகை முனிவர் சந்ததியில் ஒரு சத்திய யுகம் நடந்தது என்றே கூறினும் அதை மறுக்க முடியுமா என்ன ?

ரஸிகமணி டி.கே.சி. அமரர் ஆகி ஒன்பது வருஷங்கள் ஆகி விட்டன. அவரது நினைவு விழாவை அவரது ஜனன தினமாகிய ஸ்ரீஜெயந்தியன்று (11-9-63) திருக் குற்றாலத் திலே கொண்டாடுகின்றனர். ஐம்பது வருஷங் களுக்கு முன்னே ஆங்கிலம் கற்ற தமிழர், தமிழில் என்ன இருக்கிறது என்று கேட் டார்கள். கூட்டங்களில் தமிழில் பேசுவது கௌரவக் குறைவு என்று நினைத்தார்கள். ஆங்கிலத்தில் உள்ள அறிவியல் நூல்களைப் போல் தமிழில் இல்லை என்று சொன்னார்கள். இப்படி எல்லாம் அவர்கள் சொல்லியதைத் தான் கவிஞர் பாரதியார்,

புத்தம் புதிய கலைகள் பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள்கூறும்
மெத்த வளருது மேற்கே அம்
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை


சொல்லவும் கூடுவதில்லை அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்

என்று ஒரு பேதை உரைத்தான் என்று வெகு ஆங்காரத்தோடு பாடி யிருக்கிறார். அந்த நிலைமை மாறி ஆங்கிலம் கற்ற தமிழர்களை யெல்லாம் தமிழிலே மோகம் கொள்ளச்செய்த வர் டி. கே. சி. அறிவியல் சாத்திரங்கள் மாத் திரம் அல்ல; அழகுக் கலைகளைப் பற்றி யெல் லாம் தமிழில் சொல்லுதல் கூடும் என்று நிரு பித்தவர் டி. கே. சி. எல்லாம் தமிழில் முடியும் என்று கட்டியங் கூறி இளைஞர்கள் பலரை முன் நடத்தியவர் டி. கே. சி. இந்தப் பணி ஒன்றுக்கே அவரை வாழ்த்தலாம், வணங்கலாம், வந்தித்துப் போற்றலாம்.

டி. கே. சி. மிக்க துணிச்சல் உடையவர். கிட்டத்தட்ட முப்பது வருஷங்களுக்கு மேலாக ஆற அமர இருந்து கம்பனது காவியமான ராமாயணத்தைப் படித்தார். அதில் கம்பன் பாடாத பாடல்கள் பல இடைச் செருகல்க ளாக இருக்கின்றன என்று கண்டார். மேலும் பல பாடல்கள் பிழைபட அச்சடிக்கப்பட் டிருக்கிறது என்றும் கண்டார். மிக்க துணிச்ச லாக, ஆம், எத்தனையோ பண்டிதர்களுடைய எதிர்ப்புக்களுக்கிடையே, இடைச் செருகல் களை யெல்லாம் நீக்கினர். கம்பன் அவன் பாடிய கவிகளுக்குக் கொடுத்த உருவம் எப் படி இருக்க வேண்டும் என்று கண்டுபிடித்து அதன்படியே திருத்தி அமைத்தார். அப் படியே 'கம்பர் தரும் ராமாயணம்' என்று ஒரு புதிய பதிப்பையே வெளியிட்டார். கம்ப ராமாயணம் என்றாலே பயந்து ஓடிய அன்பர் பலரும் கம்பன் பாடல்களில் மோகம்கொண்டு கம்பன் காவியத்தைப் படிக்க ஆரம்பித்தனர். கம்ப ராமாயணப் பிரசங்கங்கள் ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி நடத்த ஆரம்பித்தனர். கம்பனுக்குத் திருநாள், கவிஞனுக்குப் பல் லாண்டு, அவன் பிறந்த தேரழுந்தூரிலும், அவன் அமரனான நாட்டரசன் கோட்டையி லும் இன்னும் சென்னையிலும் கோவையிலும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. அத் தகையதொரு அரிய பணியைச் செய்தவர் ரஸிகமணி டி. கே. சி.

இன்னும் ஒன்று. அன்று தமிழ் நாட்டு இசை அரங்குகளில் தமிழில் பாடுவது அதி சயம். இதைக்கண்ட ஒரு சிலர் நெஞ்சம் குமுறினார்கள். இதயத்தை வளர்க்கும் பாவம் கலந்த இசையே தமிழர்களுக்கு வேண்டும் என்று பத்திரிகைகளில் எழுதி னார்கள். மேடைகளில் பேசினார்கள். இப்படிப் பேசினவர்களில் முதன்மையானவர் தான் டி. கே. சி. அவருடைய பேச்சைக் கேட்ட பின்தான் செட்டி நாட்டு அரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசை இயக்கத்தையே ஆரம்பித்தார். அது நாளும் வளர்ந்து தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கும்படி செய்திருக்கிறது. தமி ழிசை வளர்ச்சிக்குத் தலையாய தொண்டு புரிந்தவர் டி. கே. சி. பண்ணும் பரதமும் கலை அரங்குகளில் பங்கு பெறச் செய்தவரும் அவரே. தமிழ் நாட்டின் கலை வளர்ச்சிக்கு அவர் தந்த ஆதரவே இன்று இங்கு பல கலைகள் வளர்வதற்குக் காரணமாக இருந்து வந்திருக்கிறது.


எல்லாவற்றுக்கும் மேலாக அவர் செய்த சேவை அன்பர் பலரைத் தமிழ்க் கவிதையை அநுபவிக்கும்படியும், அநுபவித்து ஆனந்த பரவச நிலையையே அடையும்படியும் செய் ததுதான். ஏதோ ஒரு நாட்டில் பெரிய



கிழவர்: சொல்லப் போனால் என் தாய் தகப்பனாரைக் கேட்காமலே தான் நான் இவளைக் கல்யாணம் செய்து கொண்டேன்!

வந்தவர்: வாழ்ந்து போச்சு! இவ்வளவு வயதானவரே இப்படிச் செய்தால் அப்புறம் சிறுவர்கள் பண்ணக் கேட்பானேன்!

கூட்டத்தைக் கலைக்கப் போலீசார் வேண்டியதில்லையாம்; கண்ணீர்ப் புகை வேண்டியதில்லையாம். 'சரி, இப்போது ஒரு கவி சொல்லப் போகிறேன்' என்று சொன்னால் கூட்டம் கலைந்துவிடுமாம்! அதே நிலையில் இருந்த தமிழகத்தை, அங்கு வாழ்ந்த தமிழர்களையெல்லாம் நல்ல கவிதைகளை அனுபவிக்கவும், அக்கவிதைகளைக் கேட்டு அதில் லயித்து, ஆனந்தமடையவும் செய்தவர் டி.கே.சி. அவர் விளக்குவது போல் தமிழ்ப் பாட்டையோ, ஆங்கிலக் கவிதையையோ வேறு யாரும் விளக்கி நாம் கேட்டதில்லை. அவர் பாட்டுக்குப்பதவுரையோ, பொழிப்புரையோ, கருத்துரையோ கூற மாட்டார். பாட்டைப் பாடுவதற்கு முன் ஒரு விரிவான முன்னுரை சொல்வார். பாட்டின் பொருளையும் கூறுவார். அதன்பின் அவருக்கே உரிய பாணியில் பாட்டைப் பாடுவார். அடி அடியாக நிறுத்தி நிறுத்திப் பாடுவார். மடக்கி மடக்கிப் பாடுவார். அவர் பாட்டைப் பாடி முடித்ததும் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த அன்பர் எல்லோருக்குமே பாட்டு மனப்பாடம் ஆகிவிடும். அவருடைய சொற்பொழிவுகளில் ஆவேசம் இருக்காது; அடுக்குச் சொல் இருக்காது; ஆரவாரம் இருக்காது. ஆனால் அமைதி இருக்கும். அதைவிட அழகு இருக்கும். ஆழமாகக் கேட்போர் உள்ளத்தில் பதியவும் செய்யும். கம்பனைப் பற்றி, தமிழ்க் கவிதையைப் பற்றிப் பேசும்போது அவருடைய அடர்ந்த நெற்றிப் புருவம் பேசும்; செழித்து வளர்ந்துள்ள மீசை பேசும். எல்லாவற்றுக்கும் மேலாக அவருடைய இதயமே நம் இதயத்தோடு பேசும் என்று சொன்னால் அவர் பேச்சைக் கேட்ட ஒருவரும் மறுக்க முடியாது. ஒரே ஒரு கவிதையை வைத்துக் கொண்டு பத்தல்ல, பதினைந்தல்ல, அரை மணி நேரம்கூடப் பேசுவார் டி. கே. சி. கடைசியில், ''இப்போது பாடலை மீண்டும் ஒரு முறை பார்க்கலாம்'' என்று கூறிக் கவிதையை மறுபடியும் சொல்வார்.



டி. கே. சி. தம் அன்பர்களுடன்

ரசிகமணியின் தமிழ்ப் பற்று கம்பன் மோகம் இவைகளைத் தமிழ் அன்பர்கள் சிலர் தான் அனுபவித்திருப்பார்கள். ஆனால் அவர் வீட்டு விருந்தோம்பலை அனுபவித்தவர்கள் எண்ணற்றவர்கள். விருந்தோம்பலுக்குச் சிறந்த இலக்கியமாக வாழ்ந்தவர் அவர். குற்றாலத்தில் அவரது வீடு, அடையாத வாயில் அகமாகவே விளங்கியது. அவர் வரும் விருந்தினர்களுக்கு விருந்தருத்துகிறாரா, கவிதையை உணர்த்துகிறாரா என்றால் அது எல்லாம் அவ்வளவு எளிதாகச் சொல்லக் கூடியதில்லைதான். உணவையும் கவிதையையும் சேர்த்தே ஊட்டி விடுவார். அவருடைய விருந்தோம்பலைப் பல தடவை அனுபவித்த கவிமணி அவர்கள் அவர் அமரர் ஆனபோது.

அன்னை போல் என்னை
அருவியில் நீராட்டி
இன்னமுது பக்கத்து
இருந்தூட்டி என்னோடு
தங்கு தங்கு என்று சொன்ன
தங்கக் குணத்தானை
எங்கு நான் காண்பேன் இனி

என்று பாடி ஏங்கித் தவித்ததைத் தமிழ் நாடு நன்கறியும். இன்னும் அவரது வீட்டுத் தோசை ஓர் இலக்கிய அந்தஸ்தையே பெற்ற தொன்று. அத்தோசையை உருவாக்குவதில் பெரும் பங்கு டி. கே. சி.யின் துணைவியார் அன்னையைச் சார்ந்ததே.

அன்னை சுட்ட தோசையை
ஆசையோடு தின்றவர்
எண்ணிலாதார் அல்லரோ அதில்
யானும் ஒருவன் அல்லனோ

என்று இளங்கவிஞர் ஒருவர் பாடினால், ஆம், ஆம், நானும் அக்கூட்டத்தில் சேர்ந்தவர்களில் ஒருவனே என்று இன்னும் கும்மாளம் போடுபவர் பலர் உண்டுதான்.

அந்த அமரர் ரசிகமணிதான், பொதிகை முனிவர் அகத்தியரைப் போல் நம் கண் முன் வாழ்ந்தவர். என்றும் வாழ்பவர். ஆம்,

கன்னித் தமிழே போல்
கம்பன் கவியே போல்
மன்னும் பொதிகை
மலையே போல்—பன்னுநம்
நாடு மகிழச்
சிதம்பரநாத நண்பா
நீடு நீ வாழ்க நிலைத்து

என்று கவிமணியுடன் சேர்ந்து வாழ்த்தி வணங்கி அவர் நினைவு நாளைத் தமிழகம் கொண்டாடட்டும். அது போதும் அவர் செய்த அமர சேவைக்கு.

இழைக்கு இழை உறுதி
இழைக்கு இழை வலிமை



·SANFORIZED·

REGD TD MK

விவரங்களுக்கு : 'ஸான்போரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரீன் டிரைவ், பம்பாய்-2.

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்: அவர் மனைவி ஒரு லேடி டாக்டர்: இரண்டு பிள்ளைகளும் வக்கீல்கள்: இளையவன் ஒரு கிராமத்துப் பெண்ணைக் காதலிக்கிறான்: அவனை மணக்கக் காத்திருக்கும் முறைப்பெண் மனம் உடைந்து இறந்து போகிறாள். இந்தத் துக்கம் தாங்காமல் அவன் தவிக்கும்போது அவனது காதலியின் தந்தையைக் கொலை செய்த குற்றம் சந்தர்ப்பக் கோளாறுகளினால் அவனுடைய தாயின் மீது சுமத்தப்படுகிறது. மூத்தவன் சர்க்கார் தரப்பில் வாதாட, இளையவன் எதிர்த்து வாதாடி, தாயை விடுவிக்கிறான்.

நீதிக்குப் பின் பாசம்

காந்தன்



எம். ஜி. ஆருக்குப் பழக்கமாகி விட்ட பாகம்தான். முறைப் பெண் மாடியிலிருந்து கீழே விழுந்து குற்றுயிராய்க் கிடந்த போது அவரது உருக்கமான நடிப்பு நன்றாயிருக்கிறது.

இடுப்பை அசைத்து, அன்ன நடை நடந்து காதலனிடம் சைக்கிள் விடப் பயின்றதோடு காதலிக்கவும் செய்து கொஞ்சம் கண்ணீர் விட்டு, சரோஜாதேவி கதாநாயகியின் பாகத்தை ஒப்பேற்றியிருக்கிறார். அவரது கவர்ச்சியைப் பயன்படுத்தின அளவுக்கு அவருடைய நடிப்பைப் பயன்படுத்தவில்லை.

எஸ். வி. ரங்காராவ் போலீஸ் இலாகாவுக்கு ஏற்ற தம் தோற்றத்தோடு இயல்பாக நடித்து நல்ல பெயர் வாங்கி விடுகிறார்.



கண்ணாம்பாளுக்கு ஆகி வந்த தாயார் பாகம்; கணவனுக்கு அடங்கிய குடும்ப விளக்கு — நடிப்புக்குக் கேட்பானேன்? எம். ஜி. ஆருடன் சண்டை போடுவதற்காகவே வில்லன் நம்பியார் வருகிறார். அவருக்குத் துணையாகச் சாண்டோ சின்னப்பாதேவரும் வருகிறார். எம். ஆர். ராதா கிராமத்து ஆசாமியாக வந்து கொலையுண்டு நீதிமன்றக் காட்சிகளுக்குப் பெரிதும் உதவுகிறார்.

நீதிமன்றத்து நடைமுறைகள், சம்பிரதாயங்களை ஓரளவாவது அநுசரித்துக் காட்சிகளை அமைக்க வேண்டாமோ!

தாயார் மீது கொலைக் குற்றம் சுமத்தப் பட்டுவிட்டதென்றால், சட்டப் புத்தகங்களைப் புரட்டுவதனால் என்ன பயன்? சுறுசுறுப்பாக வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகளைத் தேடுவதும், உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்க முயல்வதும் அல்லவா முதல் வேலை! குற்றம் செய்தவர்களைப் பற்றிய துப்புக் கிடைத்ததும், போலீசை அழைத்துச் சென்று கைது செய்ய முயல வேண்டுமே தவிர ஒரு வழக்கறிஞர் 'தப்புதிப்பு' என்று அடிதடியில் தாமே இறங்குவது எவ்வளவு அசட்டுத்தனம்! எம். ஜி.-ஆருக்கு 'அடிதடி சான்ஸ்' கொடுக்க வேண்டும் என்பதற்காக இக்காட்சி சேர்க்கப் பட்டிருக்கிறது. ஆனால் படம் பார்ப்பவர்கள் பொறுமையை இழந்து பொங்குகிறார்களே! ஓயாமல் இம்மாதிரி அர்த்தமற்ற, அசம்பாவிதமான சண்டைக் காட்சிகளைப் பார்க்கும் போது ஜனாதிபதியின் தங்கப் பதக்கத்தைப் பெற என்றுமே நம் தமிழ்ப் படங்கள் தகுதியுடையனவாக இருக்க முடியாதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. கதைக்குக் கால் இல்லை என்பார்கள்; கருத்தும் இல்லை என்றால் என்ன செய்வது! படத்தின் தலைப்பான நீதிக்குப்பின் பாசம் என்பதைப் பல முறை சொல்ல வேண்டுமா?


அசோகன் கொஞ்ச நேரமே வந்தாலும் மனத்தில் பதியும் வண்ணம் நடித்திருக்கிறார்.

பாட்டு ஒன்றுகூட நன்றாயில்லை.

நீதிக்குப் பின் பாசம்—பாதிக்கு மேல் சுத்த மோசம்!



பால் பாட்டில் வித்தை



[மாதவரம் பண்ணை பாட முறைப்படி.]

"இந்தப் பால் இருக்கிறதே, அது மோசம், படு மோசம்" என்று பால் விற்பவர்கள் அலுத்துக்கொள்வார்கள். ஏனென்றால், பாலில் தண்ணீர், பால் பவுடர் இவ்விரண்டையும் தவிர வேறு எதையும் கலக்க முடிகிறதில்லை. இவற்றைக் கலந்தால் கலப்பு தெரிந்து விடும். மற்றெதையாவது கலந்தாலோ பால் திரிந்து விடும்.

பட்டணத்தில் பால்கறந்து விற்பவர்கள், மாயா ஜாலக்காரர்கள். மாடு கறக்கும் போது அதைப் பார்த்துக் கொண்டிருந்தால் என்று ஒரு வழக்கம் உண்டு.

பால் கறப்பவர் பால் குவளையை இப்படியும், அப்படியும் ஒரு சுற்றுச் சுற்றிக் காண்பிப்பார். அதற்குள் ஒன்றுமில்லை என்று அதற்கு அர்த்தம். மாட்டின் ஒரு பக்கம் மாமியார் அம்மாளும் இன்னொரு பக்கம் அவள் பெண்ணும் நிற்பார்கள். மாட்டின் பின்பக்கம், அது காலால் 'விசுக்' என்று உதைக்கிற இடத்தில் ஒரு நாட்டுப் பெண் நிற்பாள்.

இவை யெல்லாம் உதாரணத்துக்காகச் சொல்கிறேன். ஆறு கண்கள் பால்காரரைக் கவனித்துக் கொண்டிருக்கும். பால் கறந்ததும் அவர் வழிய வழிய அளந்து போடுவார். அப்புறம் பெரிய அம்மாள் தண்டித் தண்டிக் கொசுறு கேட்டு வாங்குவார். பிறகு உள்ளே போய்ப் பாலைப் பார்க்கும்போது அது தண்ணீர் கலந்ததாக இருக்கும். அளவும் குறைந்திருக்கும். அது எப்படித்தான் தண்ணீரைக் கலப்பார்களோ! அது எப்படித்தான் அளவு குறையுமோ ?

இப்பொழுது பலர் இவர்களிடம் வாங்குவதில்லை. பால் பண்ணைகள் என்று ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில்தான் வாங்குகிறார்கள். அதில் மாட்டைக் கொண்டு வந்து கண்ணுக்கு நேரே கறக்கிறது, அதைப் பார்த்துக் கொண்டிருப்பது என்ற தொல்லை எல்லாம் கிடையாது. கெட்டியான பாட்டில்களில் போட்டு மெல்லிய காகிதத் தகட்டினால் சீல் மாதிரி வைத்து மூடி அனுப்புகிறார்கள். ஒவ்வொரு பாட்டிலும் ஒரு லிட்டர் அளவு. பட்டணம் படி கால் படிக்கு மேல் கொஞ்சம் கூட இருக்கும்.

மாதவரத்தில் சர்க்கார் பால் பண்ணை இருக்கிறது. இதிலிருந்து ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட 40,000 பாட்டில்கள் பால் விற்கிறார்கள். பையன்கள் இவற்றை ஒரு பெட்டியில் அடுக்கி வைத்துக்கொள்வார்கள். அந்தப் பெட்டியைச் சைக்கிளில் ஏற்றிக் கிளம்புவார்கள். அவர்கள் தூரத்தில் வரும் போதே பாட்டில்கள் ஒன்றுடன் ஒன்று உராய்ந்துகொள்ளும் சத்தம் கேட்கும். அதிகாலையில் காப்பி சாப்பிடும் வழக்கம் உள்ளவர்களுக்கு அந்தச் சத்தம் இன்பக்காப்பி வந்து காதினிலே பாய்வது போலிருக்கும். பால் தேவையானவர்கள் முன்னாலேயே பணம் கட்டிப் பால் 'கூப்பன்கள்' வாங்கிக்கொண்டிருக்க வேண்டும். பையன்கள் கூப்பனை வாங்கிக்கொண்டு பால் பாட்டிலைக் கொடுத்து விட்டுப் போவார்கள்

பாட்டில்களுக்கு மூடி சீல் வைப்பதில் மூன்று விதம் உண்டு. ஒன்று நீல வர்ணம். இது எருமைப் பாலுக்கு அடையாளம்; சிவப்பு மூடி, பசும் பாலைக் குறிக்கும். வேறு வர்ண மூடியுள்ள பாட்டிலில் பக்குவப்படுத்தப்பட்ட பால் இருக்கும். இதில் ஓரளவு பால் பௌடர் கலந்திருப்பார்கள். அதற்காக இதன் விலை குறைவு. பட்டணவாசிகளாயில்லாதிருப்பவர்களுக்காக இந்த விவரங்களைச் சொல்கிறேன். இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் அவர்கள் ஊர்களுக்கும் பாட்டில் பால் வந்துவிட்டால் வியப்பில்லை.

மூடியை மேலே கட்டை விரலால் அமுக்கினால் அது சுலபமாகத் திறக்க வரும். பாலுக்கு மேலே வெண்ணெயோ ஏடோ மிதக்கும். பால் குழம்பு போல் இருக்கிறது. கண்ணீர்ச் சொட்டுப் போல் இருக்கிறது என்றெல்லாம் வர்ணிப்பது வழக்கம். 'ரீத் பேண்ட்' போல இருக்கிறது என்றுகூடச் சிலர் சொல்வார்கள். பாலை அப்படியே அடுப்பில் வைத்தால் சூடு பிடித்ததும் 'சர்' என்று பாத்திரத்தில் ஒட்டிக்கொள்ளும். அதற்காக அதில் கண்ணை மூடிக்கொண்டு ஒரு டம்ளர் தண்ணீரை விடலாம். அந்தச் சமயத்தில் எதிர்பாராமல் விருந்தினர்கள் வந்துவிட்டால் கண்ணைத் திறந்துகொண்டு இன்னொரு டம்ளர் தண்ணீர் கூட விடலாம். அந்தப் பால் அத்தனையும் தாங்கும். கடைசியில் பால் பாட்டிலில் கால் டம்ளர் தண்ணீரை

விட்டும் அலம்பிவிடலாம். இத்தனை செய்தும் அது வாசலில் வாங்கும் கைப்பாலைவிட நன்றாகவே இருக்கும்.

இந்தப் பால் வந்த புதிதில் எல்லோரும் சந்தோஷப்பட்டோம். அந்தப் பாலை நினைத்துப் பார்த்த மாத்திரத்திலேயே உடம்பு பலமடைந்து விடும் போலிருந்தது. "அப்படியெல்லாம் உங்களை யார் நினைத்துக் கொள்ளச் சொன்னது?" என்று யாரோ கேட்பது நமது காதில் விழவில்லை.

சில மாதங்கள் கழிந்த பின்னர் ஒரு நாள் பாலைப் பால் பாட்டிலிலிருந்து பாத்திரத்தில் ஊற்றிய பிறகு பாட்டிலைப் பார்த்தபோது அது ஏற்கனவேயே மிக நன்றாகப் பிரஷ் போட்டு அலம்பப் பட்டுவிட்டது போலிருந்தது. வழக்கம் போல் பாத்திரத்தில் தண்ணீரை விட்டு



அநுசுயா

பிறகு பார்த்தால் பால் வெள்ளையாகத்தான் இருந்தது. ஆனால் வெள்ளைத் தண்ணீரா யிருந்தது.

"பால் நேற்றுத் தண்ணீரா யிருந்ததே?" என்று மறு நாள் பால்காரப் பையனை விசாரித்தேன்.

"நாங்கள் என்னம்மா செய்கிறது? அப்படித்தான் டெப்போவிலிருந்து வருகிறது" என்று பணிவுடன் கூறினான்.

பால் டெப்போவில் எப்படிப் பால் தானாகத் தண்ணீரைச் சேர்த்துக் கொண்டிருக்க முடியு மென்று தெரியவில்லை. ஒருவேளை ஏதேனும் மந்திர ஜாலத்தால் தானாகவே தண்ணீர் ஊறிக் கொள்கிறதோ என்று சந்தேகித்தேன்.

பிறகு சில தினங்கள் வரை பால் நன்றாக இருந்தது. அப்புறம் ஒரு நாள் பாட்டிலின் மேல் மூடி சரியாகப் பொருந்தியிருக்கவில்லை.

"பாட்டில் மூடி தொட்டதும் வந்துவிடுகிறதே, அப்பா!" என்று பால்காரப் பையனைக் கேட்டேன்.

"நாங்கள் என்னம்மா பண்ணுகிறது? டெப்போவிலிருந்து அப்படித்தான் வந்தது" என்று மிக மிகப் பணிவுடன் தெரிவித்தான்.

இன்னொரு நாள் எருமைப் பாலைக் காய்ச்சி 'உறைகுத்தி' வைத்தேன். பிறகு தயிரை எடுத்துப் பார்த்தபோது அது மஞ்சளாக இருந்தது. விஷமோ என்று பயம் எனக்கு.

மறு நாள் பையன் தன் பெட்டியி லிருந்த மூடியில்லாத ஒரு பால் பாட்டிலைக் காண்பித்தான். "மூடியைக் காக்கை கொத்திக் கொண்டு போய்விட்டது. உங்கள் பாட்டில் நீல மூடியைக் கொடுங்கள்" என்றான்.

அப்படியே கொண்டு வந்து கொடுத்தேன். அதை நான் கொடுத்திருக்கக் கூடாது. ஏனென்றால், அவன் அந்த மூடியைத் திறந்திருந்த பசும்பால் பாட்டிலின் மீது வைத்து அழுத்தி மூடுகிறான். அப்போது தான் எனக்கு விஷயம் புரிந்தது. அதிக விலையுள்ள எருமைப் பாலுக்குப் பதில் குறைந்த விலையுள்ள பசும்பாலைக் கொடுப்பதற்காக இப்படிச் செய்கிறான் என்று. "நேற்று எருமைப் பால் தயிர் மஞ்சளாயிருந்தது" என்றேன்.

"நாங்கள் என்னம்மா பண்ணுகிறது....?" என்று ஆரம்பித்தான்.

"டெப்போவிலிருந்தே அப்படித்தான் வருகிறது" என்று நானே அவனது வழக்கமான பல்லவியை முடித்தேன். அவன் அசட்டு விழி விழித்துக் கொண்டு போய்விட்டான்.

சில சமயம் அவனாகவே முந்திக் கொண்டு "வைக்கிலே ஒரு மாடு வந்து முட்டி விட்டது. அதனால் பாட்டில் மூடிக ளெல்லாம் கழன்றுபோய் விட்டன" என்று சொல்லி விடுவான். சரி, மூடி கழன்றிருக்கட்டும். அந்தச் சமயங்கள் பார்த்தா பாலும் எப்படியோ தண்ணீர் கலந்ததாக மாறி விட வேண்டும்?



பால் பாட்டில்கள் பால் ஏற்றி வரும் மோட்டார் வண்டியிலிருந்து டெப்போவில் இறங்கும் வரை நன்றாகத்தான் இருக்கின்றன.

பிறகு பையன்கள் எடுத்துச் சென்ற பிறகுதான் இந்தத் தில்லுமுல்லுகள் எல்லாம் நடக்கின்றன. அவர்கள் இப்படித் தண்ணீர் கலந்து கொண்டு வருவதற்காக, 'டெலிவரி சார்ஜ்' என்று வேறு இரண்டு ரூபாய் அதிகப்படியாய்க் கொடுக்க வேண்டும்! பால் கொடுக்கும் பையன்கள் அநேகமாக இருபது வயது முதல் முப்பது வயதுக்குள்ளிருக்கும் பையன்கள். ஏதோ கொஞ்சம் நியாயம் பார்க்கிறார்கள். இன்றைக்கு எனக்கு மூடி சரியில்லாத பால் பாட்டில் கொடுத்தால் நாளைக்கு எனக்கு அது மாதிரி கொடுப்பதில்லை. அந்தப் பாக்கியம் இன்னொரு வீட்டுக்குக் கிடைக்கும். பிறகு இரண்டு தினங்கள் கழித்து மறுபடியும் என் முறை வரும். பாரபட்சமில்லாமல் நடந்து கொள்கிறார்கள்! இந்த அழகில் பாலின் விலையை வேறு லிட்டருக்கு 10 நயா பைசா அதிகமாக உயர்த்தி விட்டிருக்கிறார்கள்.



பால் பண்ணை உத்தியோகஸ்தர்கள் ஏதோ சோதனை என்று செய்கிறார்கள். அதுபோதாது. பையன்கள் சைக்கிள்களில் ஏறுவது முதல் அவர்களைத் தொடர்ந்து சென்று கவனிக்க வேண்டும். திடீரென்று சோதனை செய்ய வேண்டும். பால் சோதனை இன்ஸ்பெக்டர் எந்தச் சமயத்திலும் தன்னைப் பின்தொடர்கிறார் என்ற பயம் அவர்களுக்கு இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

இன்னொரு பால் பண்ணை ஐயனாவரம் கூட்டுறவு பால் பண்ணை. இது இந்தியாவிலேயே முதன் முதலாக ஆரம்பித்த கூட்டுப் பால் பண்ணை. இதிலும் பால் பாட்டில்கள் கொடுப்பவர்கள் பலர், நாம் தண்ணீர் கலக்காத பாலைச் சாப்பிட்டு அஜீர்ணப்படாத படி பார்த்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களிடம் ஒளிவு மறைவு கிடையாது. ஒவ்வொரு பால்காரரும் தயாராக ஒரு மூடி போட்ட பெரிய பாற்குவளையைச் சைக்கிளில் தொங்கவிட்டுக் கொண்டு தான் புறப்படுவார்கள். தண்ணீருக்காக ஒருத்தரைப் போய் ஏன் கெஞ்சிக் கொண்டிருக்க வேண்டும்?

மொத்தத்தில் இவர்கள் மேல் குறை சொல்லிப் பயனில்லை. மேலதிகாரிகள் அதிகக் கவனம் செலுத்தாதிருப்பதுதான் தவறு.

நல்ல உதை!

"தினமும் மூன்று பாட்டில் கொடுக்கிறதுண்டே. இன்று ஒன்றுதானே கொடுத்திருக்கிறாய்?"

"நான் என்னம்மா செய்கிறது? மெஷின் உதைச்சு விட்டது!" என்று பால்காரப் பையன் பதிலளித்தான். அவன் 'குழாய் உதைத்துவிட்டது. ஆகையினால் பால் இல்லை' என்று சொன்ன அந்த மகானுபாவனின் வம்ச வழி வந்தவன்!

குடும்ப அகராதி

பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு...

குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மூவிகளின் மீது அநாவசியமாய்ப் பழியைச் சுமத்தும் ஒரு வாசகம். இது கல்யாணப் பத்திரிகைகளில் வரும். உண்மையில் வரனை நிச்சயம் செய்பவர்கள் ஒரு பெண்ணின் தாயாரோ அல்லது பெண்ணும் பெண்ணின் தாயாருமோ, அல்லது பெண்ணின் தாயார், பெண், அவள் தந்தையுமோ ஆவார்கள்.

தலை மயிர்:

ஸ்திரீகளுக்கு இன்றியமையாததும், அவர்களுடைய முகத்துக்கு அழகு கொடுப்பதுமாகும். இழுத்த இழுப்புக்கு வரும். அதனைப் பிடரிப்பக்கம் வெட்டிக் கொள்ளலாம். ஒரு பின்னலில் ஆரம்பித்து அரை டஜன் பின்னல்கள் வரை பின்னிக் கொள்ளலாம். அவ்விதமே கொண்டை போட்டும் பரீட்சை செய்து கொள்ளலாம். யாரோ சோம்பேறிப் பெண் பின்னல் நுனியில் ரிப்பன் வைத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டது. இப்போது நாகரிகமாகக் கருதப்படுகிறது. பிறந்தகத்திலிருந்து புக்ககம் போகும்போது கட்டு மயிர் இருக்கும். திரும்பி வரும் போது கூடை மயிரும் ஒரு 'காலா'க் குறைந்து போயிருக்கும். இதை வளரச் செய்ய எத்தனையோ விதமான தைலங்கள் இருக்கின்றன. இவற்றைக் கண்டு பிடித்தவர்கள் அநேகமாகத் தலைமயிரால் தொந்தரவு பட்டுக் கொண்டிருப்பதில்லை.

குழந்தைக்குச் சட்டை போட:

குழந்தைகளுக்குச் சட்டை அல்லது ஸ்வெட்டர் போடும்போது ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அதன் தலை பம்பளிமாஸ் பழம் போல் உருண்டையாயில்லை; சற்றுக் கோழி முட்டை வடிவம் போல இருக்கிறது என்பதை.

முதலில் சட்டையைக் கொசுவி, சுருக்கி வைத்துக் கொண்டு குழந்தையின் பின் தலைப் பக்கமாக மாட்ட வேண்டும். பிறகு முன் பக்கம் இழுத்துக் கொண்டு நெற்றி, மூக்கு இவை வழியாகத்தான் கீழே கொண்டு வர வேண்டும்

கழற்றும் போது கைகளைச் சட்டையிலிருந்து முதலில் எடுத்துவிட வேண்டும். பிறகு கழுத்திலிருந்து மூக்கு, நெற்றி தலையின் முன் பக்கம் இப்படிக் கொண்டு போய், பின் பக்கமாக எடுத்துவிட வேண்டும்.



மொதல்லே அம்மாதான்

பேப்பர்லே படிச்சா.

அப்பா கிட்டே சொன்னு.

என் காதிலேயும் விழுந்துது....

எல்லா ஊர்லேயும்

ஏகப்பட்ட க்ளாக்ஸோ—

குழந்தைகளின் உணவு

வெச்சிருக்காம். க்ளாக்ஸோ

சாப்பிட்டுபலசாலியா

வளந்துடுவேன்.

. ஆரோக்கியமாயும் இருப்பேன்.

எல்லாம் ஒங்களுக்கு

தெரிஞ்சது தானே!

என் குஷிக்குக் கேக்கணுமா?

தாய்ப்பாலில் உள்ள எல்லா
நல்ல அம்சங்களும் க்ளாக்ஸோ
வில் இருக்கின்றன...ஆம்!
உங்கள் குழந்தை பலசாலியாக
வளர அவசியமான
யாவுமே உள்ளன. இலவசமாக
'க்ளாக்ஸோ குழந்தைப் புத்தகம்'
(தமிழ்) பெற விரும்புவோர்
(தபால் செலவுக்காக)
50 நயா பைசாவுடன்,
'க்ளாக்ஸோ, வுட்ஸ் ரோட்,
சென்னை-2' என்ற
விலாசத்திற்கு எழுதவும்.



GLY-2-TAM

Glaxo

க்ளாக்ஸோ—குழந்தைகளுக்கான மிகச் சரியான பாலுணவு.

அறிவுக் கனலே

ரா. கணபதி (31)

சாரதை உண்மையிலேயே தடுமாறினாள். ஜுர வேகம் சற்று அதிகமாகிவிடவே சுருண்டு விட்டாள். என்றாலும் அதே சமயத்தில் மனோ வேகம் மங்கியது. அவள் உள்ளத்தில் எல்லையற்ற நிம்மதி குடிகொண்டது. அவர் அன்பொழுகப் பேசிய அந்த ஓரிரு வார்த்தைகளிலிருந்தே அவர் பித்தரல்ல என்பதைப் புரிந்துகொண்டாள் அவள்.

"அன்னையே! இப்படி உடல் நலம் சரியில்லாமல் வந்திருக்கிறாயே! என் மதுரும் அக்ஷயனும் கூட உன்னைக் கவனித்துக் கொள்ள இந்த உலகில் இல்லையே?" என்று கூறிய ராமகிருஷ்ணர் அக்கறையுடன் அவளுடைய சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்.

அவருக்குச் சுகவீனம் என்று எண்ணி அவள் பணிவிடை செய்ய வந்தாள். ஆனால் அவளே சுகவீனமுற்று அவர் அவளைப் பரிந்து கவனித்துக் கொண்டார்.

'என் அன்புத் தெய்வம் என் அன்பு தெய்வமாகவேதான் இருக்கிறது. ஊரார் என்னவெல்லாம் பிதற்றிவிட்டார்கள்?' என்று எண்ணினாள் சாரதாமணி. அந்த எண்ணம் காரணமாகவோ அல்லது அவளுடைய பதியின் பரிவு காரணமாகவோ சாரதையின் உடல்நிலை சில தினங்களில் செவ்வையாயிற்று.

'நஹவத்' எனப்படும் சங்கீத மண்டபத்தில் தன் மாமியாருடன் தங்கினாள் சாரதை. மாமியாருக்கும், கணவருக்கும் மாறி மாறிப் பணிவிடை புரிந்து இன்பம் கண்டாள்.

'ஊர் உலகத்தாரைப் போலத் தம் மகள் வாழவில்லை. அதனால் என்ன? இந்த வாழ்க்கையிலேயே அவள் மன 'நிறைவு பெற்று விட்டாள்' என்பதைக் கண்டு மனம் நிறைந்த ராமசந்திர முகோபாத்தியாயர் ஜயராமவாடிக்குத் திரும்பினார்.

தோதாபுரி ஸ்வாமி ஆத்மாவின் பரிசுத்தத்தைச் சொல்லி, ஞானி எந்த நிலையிலும் பரிசுத்தம் குலைய மாட்டான் என்று கூறியிருந்தார். அந்தப் பரிசுத்தத்தைப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டுமென அப்போதிருந்தே ராமகிருஷ்ணருக்கு ஆர்வமுண்டு. என்றாலும் அம்பிகை விதிக்கிறபோது அது தானாக நிகழும் என்பதால், தாமாக மனைவியை அழைத்து வைத்துக்கொண்டு சந்நியாசம் அனுஷ்டிக்க அவர் முற்படவில்லை. இப்போது தேவியின் திருவருளால் அந்த ஒப்பற்ற பரிசோதனையைத் தொடங்கினார்.

தேவியின் திருவருளை விட சாரதாமணியின் திருவருளை முக்கியமாகக் குறிப்பிடலாம். அவள் தன் கணவனிடமிருந்து உலக இன்பத்தை எதிர்பார்த்திருந்தால் அதனை வழங்கத் தயாராகவே இருந்தார் அந்தத் தியாகசீலர்.

சந்நியாச வாழ்க்கைக்கு அந்தக் குழந்தையின் சம்மதத்தைப் பெறுமலே அவளை மணம் புரிந்துகொண்டதால், அவள்




அருட் புனலே!

மாறாக விரும்பினாலும் அந்த விருப்பத்தை ஈடேற்றுவதே தமது கடமை என மதித்தார் அந்தப் பிறர்க்குரியாளர். ஆனால் அவள் காற்றாடியைக் கீழே இறக்குகிற கல்லாக இல்லை. அதனை மேலும் உயரச் செலுத்தித் தானும் அதனுடன் சேர்ந்து உயரப் பறக்கும் நூலைச் சுருளாகவே யிருந்தாள்.

''சாரதா, இந்த உடம்பு உன்னுடையது. இதனிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறாயோ அதைத் தருகிறேன்'' என்றார் சந்நியாசத்துக்கும் சந்நியாசம் அளிக்க முற்பட்ட அந்தத் தியாகி.

சாரதை குன்றிப்போனாள். 'தன்னை அவ்வளவு கேவலமாகவா அவர் எண்ணிவிட்டார்? அல்லது சோதனை செய்கிறாரா? தான் அவரைச் சபலமுறத் தூண்டுவதற்குப் பதில் அவர் தன்னைச் சபலம் கொள்ளத் தூண்டுகிறாரா? மாட்டேன். சபலம் கொள்ள மாட்டேன். பாலப் பருவத்திலிருந்து மலர்களின் நிர்மலத்தைப் பார்த்துப் புனிதத்தைத் தேடிய எனக்கு வாய்ப்பாக இப்படி ஓர் அற்புதக் கணவர் கிடைத்தார். எல்லாரையும் போல் வாழ்க்கைப்படாமல் என்இதயத்துக்கு உகந்த என் அபிலாஷைக்கு உகந்த, இப் பாவனரின் கையைப் பற்றினேன். இப்போது புனிதத்தை இழக்கலாமா? ஒருபோதும் முடியாது.'

''ஸ்வாமி உங்கள் உடம்பு எனக்கு வேண்டாம். உள்ளம்தான் வேண்டும். உள்ளத்தில் என்னை இணைத்துக்கொள்ளுங்கள். உங்கள் உன்னத அநுபவங்களை எனக்கும் தாருங்கள்' என்றெல்லாம் விகஸிதமாகப் பேச அறிந்தவளில்லை சாரதாமணி. வார்த்தைகளில் வடிக்க வராத புனிதத்துடன், ''உங்கள் சாதனைக்கு நான் இடையூறாக இருக்க மாட்டேன். என்னை நீங்கள் ஏற்றுக்கொண்டால் அதுவே போதும்'' என்றாள்.



புனித சீலம் செறிந்த ஓர் அதிசய தாம்பத்தியம் தொடங்கிற்று.

'வேறெந்த அவதாரத்திலும் காண முடியாத அற்புதம் இது. கணவன் மனைவி இருவருமே துறவிகளாக வாழ்ந்து உலகுக்கு மனித மனத்தின் கட்டுப்பாட்டை இதுபோல் விளக்கியதே இல்லை' என்று ராமகிருஷ்ண பக்தர்கள் பெருமை கொள்வதுண்டு. ஆம், மனித மனம் எதனாலும் மாசுறாது எப்படிப் பரம பாவனமாக இருக்க முடியும் என்பதற்கு எல்லை நிலத்தை ராமகிருஷ்ணர் சாரதாமணியின் வாழ்க்கையில்தானே காண முடிகிறது? உலகத்தின் ஆத்மிக சரித்திரத்தில் இது ஈடு இணையற்ற ஓர் அத்தியாயம்தான்.

நிஜங்களைப் பண்டங்கள் நிறைந்திருக்கும் சூழலில் நாவைக் கட்டுப்படுத்துவதுதான் உண்மையான கட்டுப்பாடு. பாலைவனத்திலிருந்துகொண்டு 'நாவைக் கட்டி விட்டேன்' என்று சொல்வதில் என்ன பெருமை இருக்கிறது? புறப் பொருட்களால் நேருகிற ஒன்றல்ல தன்னடக்கம். அகத்தையே ஒட்டிய ஓர் அரிய நிலை அது. கணவனும் மனைவியும் அருகே இருந்து வாழும்போதே தன்னடக்கத்தை நிரூபித்தனர் இந்த ஒப்பற்ற தம்பதி.

கணவனும் மனைவியும் குருவும் சிஷ்யையும் ஆனார்கள். கங்கைக் கரையில் இருவரும் உலவும் போது ஆற்றைக் காட்டுவார் ராமகிருஷ்ணர்.

''இந்த ஆறும் அலையும் போலத்தான் பரமாத்மாவும் ஜீவாத்மாவும். பரமாத்மாவில் தோன்றிப் பரமாத்மாவில் ஒடுங்குகிறவர்கள்தாம் நாம்'' என்பார்.

கங்கைக் கரையையும், அங்கு விரிந்த தோப்பு துரவுகளையும் தனிரொளியில் முழுக்காட்டும் மதியத்தை மனைவிக்குக் காட்டுவார்.

''உலகத்துக் குழந்தைகளுக்கெல்லாம் தனித் தனியாக மாமா உண்டு. ஆனால் எல்லோருக்கும் ஒரு மாமா அம்புலி. அதே போல்தான் மனிதர்களுக்குள் பல உறவுகள் இருந்தாலும் எல்லோருக்கும் ஒரே உறவாக ஆண்டவன் இருக்கிறான். அந்த உறவைப் புரிந்துகொண்டு உறவு கொண்டாடினால் அவன் இங்கு வந்துவிடுவான்; நீ அப்படி உறவு கொண்டாடு; உன்னிடமும் வந்து விடுவான்'' என்பார்.

ஒருநாள் ராமகிருஷ்ணரின் கால்களைப் பிடித்துக் கொண்டிருந்த சாரதையை உற்று நோக்கினார் அவர்.

''என்ன பார்க்கிறீர்கள் அப்படி?'' என்றாள் சாரதை.

''ஆலய சந்நிதானத்தில் பவதாரிணியாக நிற்கிறவள் நகுவத்தில் என்னைப் பெற்ற அன்னையாக இருக்கிறாள். இப்போது புதிதாக இதோ என் காலைப் பிடித்துவிடும் நீயாகவும் இருக்கிறாளோ என்றுதான் பார்க்கிறேன்'' என்றார்.

சாரதாமணிக்குப் புல்லரித்தது.

இன்னொரு நாள் ராமகிருஷ்ணருக்குப் பணிவிடை செய்து களைத்துப் போய் அந்த அறையிலேயே உறங்கிப் போனாள் சாரதாமணி.

அவளை நோக்கிய ராமகிருஷ்ணர் தமது மனதை விளித்து அதனிடம் பேசலானார். ''மனமே! உள்ளொன்றும் புறமொன்றுமாக இராதே. வேண்டுமானால் நீ இதோ கிடக்கும் இந்த உடலை அநுபவிக்கலாம். இவள் உன் தர்மபத்தினி என்பதால் அதில் ஏதும் தவறில்லை. ஆனால் அப்படிச் செய்தால் நீ பல ஜன்மத்துக்கு உடம்பில் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டியதுதான். சச்சிதானந்தத்தில் நீ கரைய முடியாது. என்ன சொல்கிறாய்? என்ன ஆசையாயிருந்தாலும் அதைத் தீர்த்துக் கொள். நீ தாலி கட்டிய தாரம்தான் இதோ உன் முன் துயில்கிறாள்.''

அவருடைய மனம் சுத்த சத்வமே வடிவான நல்லவா? ஆத்மஜோதியைப் பிரதிபலிக்கும் ஸ்படிகம் போன்ற அந்த மனசு மோகத்தில் எவ்வாறு சிக்கும்? மோன நிலையை நோக்கி, சிதானந்த ஆகாயத்தில் அது உயர உயர மிதந்தது. பிறகு தானே அற்றுப்போய், 'மனதற்ற பரிசுத்த நிலை'யில் கரைந்தது. மறுநாள் காலை வரை சமாதி நிலையில் இருந்த கணவரைக் கண்டு ஒன்றும் புரியாமல் திகைத்தும் பயந்தும்போனாள் சாரதை. திவ்விய நாமங்களை ஹிருதயர் ராமகிருஷ்ணரது காதில் ஓதிய பின்தான் அவர் இவ்வுலகுக்கு வந்தார்.

புனிதமற்ற எண்ணத்தின் ஒரு நிழல் கூடப் படியாமல் ஓராண்டுக்கு மேல் ஓடிவிட்டது.

ஜ்யேஷ்டா மாதத்து அமாவாசை. பவதாரிணி அன்னை அடியாரின் கர்ம பலன்களை இல்லாமல் செய்வதால் பலஹாரிணி என்றும் பெயர் பெற்றவள். 'பலம்' என்பது கனியையும் குறிக்குமாதலால் ஏராளமான பழங்களைப் பலஹாரிணி தேவிக்கு நிவேதித்து விசேஷ ஆராதனை நிகழ்த்துவார்கள்.

தக்ஷிணேசுவரத்திலும் சிறப்பான பூஜைக்கு ஏற்பாடாயிற்று. ஆனால் பழங்களையும், புஷ்பங்களையும் இதர சாமக்கிரிகளையும் பவதாரிணியின் சந்நிதிக்கு மட்டும் அனுப்பாமல் ராமகிருஷ்ணர் தமது அறைக்கும் அனுப்பி

யது ஏன் என்றுதான் யாருக்கும் புரியவில்லை. ராமகிருஷ்ணரது அறையில் கோலங்களால் அலங்காரம் செய்யப்பட்ட பீடமும் அமைக்கப்பட்டது. அதில் எந்த மூர்த்தியை அவர் எழுந்தருளச் செய்யப் போகிறார் என்றுதான் யாருக்கும் புரியவில்லை.

அஸ்தமனமாயிற்று. அமாவாசைத் திரை விரிந்தது.

ஹிருதயரை நோக்கி ராமகிருஷ்ணர், "பவதாரிணிக்கு நீ பூஜை பண்ணு" என்று சொல்லி சந்நிதிக்கு அனுப்பி வைத்தார்.

ஒன்பது மணியாயிற்று. "சாரதையை இங்கே பூஜைக்கு வரச் சொல்லுங்கள்" என்று கூறி ஆளனுப்பினார் ராமகிருஷ்ணர்.

சாரதையும் பூஜை பார்க்க வந்து சேர்ந்தாள்.

பூஜையைப் பார்க்கத்தானா?

மந்திர பூர்வமாக ஸ்தல சுத்தி செய்தார் ராமகிருஷ்ணர். ஆத்ம பூஜையும் முடிந்தது.

இனி தேவி ஆராதனை தொடங்க வேண்டியதுதான்.

ஆனால் பிரதிமையா, யந்திரமா எதையுமே காணோமே!

பூஜையின் விசித்திரத் தன்மையை சாரதாமணி கவனிக்கவே இல்லை. அவளது ரத்தக் குழாய்களில் ஏதோ திவ்விய ரஸம் பாய்ந்து கொண்டிருப்பது போலவே உணர்ந்தாள். 'ஆலய சந்நிதானத்தில் பவதாரிணியாக நிற்கிறவள் நஹபத்தில் என்னைப் பெற்ற அன்னையாக இருக்கிறாள்... இதோ நீயாகவும்' என்று அன்று பர்த்தா கூறியது இன்று பரம சத்தியமாக அவளது மேனி முழுவதும் பேசுவது போல் இருந்தது.

ஆத்ம பூஜையை முடித்த ராமகிருஷ்ணர் அவளை நோக்கினார்.

தேவி மூர்த்தத்தை எழுந்தருளச் செய்ய வேண்டிய அலங்கார பீடத்தை நோக்கினார்.

பீடத்தை சாரதைக்குக் காட்டினார்.

சாரதை பரவச நிலையிலே எழுந்திருந்து அந்தப் பீடத்தை நெருங்கினாள்.

தயக்கமோ, பதற்றமோ, கூச்சமோ இன்றி அதிலேயே பாங்குற அமர்ந்தாள்.

பூஜையும் தொடங்கிற்று.

சாரதையைப் பரிசுத்தமாக்குவதற்காக மந்திரங்களைக் கூறி, தீர்த்தத்தை அவள் மீது புரோக்ஷித்தார்.

"தேவி, திரிபுரசுந்தரி, எல்லா சக்திகளையும் அடக்கியாளும் பராசக்தி! பூரணத்துவத்துக்குக் கதவத்தைத் திறந்துவிடும் பகவதி! இவளது உடலையும், மனசையும் சுத்தமாக்கி அவளில் நீ உறைவாய். உறைந்து கருணை பொழிவாய்" என்று பிரார்த்தித்தார்.

கணவன் — மனைவி உறவு போயிற்று; குரு — சிஷ்ய உறவும் போயிற்று; தாய்—சேய், தெய்வம் — பக்தன் என்ற புதிய உறவு தொடங்கிற்று.

விக்கிரகத்தில் ஆவாஹனம் செய்யும் தேவியை சாரதையின் திரு உடலில் ஆவாஹனம் செய்து வழிபடலானார் ராமகிருஷ்ணர்.

நியாஸங்கள் செய்து சாஸ்திர விதிப்படி சாரதாமணியின் உடலில் மூல சாரதையாகிய சர்வேசுவரியை ஆவாஹனம் செய்தார்.

இப்படிச் சொல்வது சரிதானா?

ராமகிருஷ்ணர் உண்மையில் சாரதாமணியை மந்திர ஜல புரோக்ஷணத்தால் சுத்தமாக்கினாரா?

அவளில் தேவியை வரவழைத்தாரா?

சாரதைக்குச் சுத்திகரிப்புச் சடங்கு தேவையா என்ன? தூய்மையையே தூயதாக்குபவள் அல்லவா அவள்?

சாரதையின் உடலில் புதிதாகத் தேவியை உறையச் செய்ய வேண்டுமா என்ன? தேவி இல்லாத இடம் எது?

அப்படிப் பார்த்தால் 'வானந்தம் மண்ணனந்தம்' ஒவ்வோர் அணுவிலும் எப்போதுமே உள்ள தேவியைச் சிலையில் கூட ஆவாஹனம் செய்ய அவசியமில்லையே! ஆனால் அவ்வாறு எதிலும் எப்போதும் அம்பிகையின் சாந்நித்தியத்தை உணருவது சிறிதேனும் சாத்தியமா? இதனால்தான், சாதகனுடைய மனோபாவத்தைக் கருத்தில் கொண்டு அவனிடம் பக்தியின் தீவிரம் ஏற்படுவ[தற்]காக எங்குமே, எப்போதுமே உள்ள தேவியைச் சிலையில் ஆவாஹனம் செய்வதாக ஒரு பாவனையை மகான்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

தமக்கு இயற்கையாக வாய்த்த அனுபவங்களையே சாஸ்திரங்களின் மூலமும் நிச்சயப்படுத்திக் கொண்ட ராமகிருஷ்ணர் இந்த விதிக்கிணங்கவே சாரதைக்குப் புனிதச் சடங்கு நிகழ்த்தி, தேவியை அவளில் மந்திர பூர்வமாக ஆவாஹனம் செய்தார்.

அந்தக் கணமே எழுத்தில் கூற முடியாத மகத்தான சம்பவம் நிகழ்ந்தது.

சகல ஜீவராசிகளிலுமே ஜீவ பாவத்தின் வேஷம் போட்டுக் கொண்டு தன் 'தெய்விகத்தை மறைத்துக் கொண்டு வாழும் தேவி அப்போது

சாரதையின் ஜீவபாவத்தைத் தகர்த்துத் தாருகவே பொலிந்தாள்.

விஞ்ஞானம் சொல்கிறது: அணுவுக்குள் எத்தகைய மகத்தான சக்தி உள்ளது என்பதை. எங்கும் பராசக்தி நிறைந்திருக்கிறாள் என்பதற்கு இனி வேறு நிரூபணம் வேண்டாம். ஆனால் ஏனோ அந்தச் சக்தி தன்னை மறைத்துக்கொண்டு, அல்லது மறுத்துக் கொண்டு அல்லது மறந்துகொண்டு வாழ்கிறது. நம்மில் ஒருவரின் தலையிலிருந்து கால்வரை உள்ள அத்தனை அணுக்களிலும் உள்ள மகத்தான சக்தி தன் சொரூபத்தை வெளிப்படுத்தினால் அண்ட பகிரண்டங்களை ஆக்கலாம்; அழிக்கலாம்.

ஆனால் அந்தச் சக்தியை வெளிப்படுத்தக் கூடிய ராமகிருஷ்ணருக்கு எங்கே போவது?

அப்படியெனில் ராமகிருஷ்ணர் சக்தியையா வெளிப்படுத்தினார்? அல்ல. விஞ்ஞானிகள்தான் அணுவின் சக்தியை வெளிப்படுத்தி ஆக்கத்தையும் அழிவையும் உண்டாக்குவார்கள். ராமகிருஷ்ணருக்கு இந்த ஆக்கம், அழிவு இரண்டும் அவசியமில்லை. அவருக்கு அன்புதான் முக்கியம். அருள்தான் முக்கியம்; எனவே அவர் சக்தியை அபரிமிதமான சக்தியாக வெளிப்படுத்த மாட்டார். அவருக்கு ஆற்றல் வேண்டாம்; அன்புதான் வேண்டும். விஞ்ஞானிகள் பொருளே (Matter) சக்தியாகும் (energy) என்கிறார்கள் அல்லவா? ராமகிருஷ்ணர் பரம்பொருளே பராசக்தியாகும்; அல்லது பராசக்தியே பரம்பொருளாகும் என்று அறிந்தவர். இதனால் ஜடத்தை அல்லது ஜீவனைச் சக்தியாக்கிப் பின் சக்தியைச் சிவமாக்குவார்.

சாரதாமணியில் உறையும் பராசக்தியை விழிப்புறச் செய்து அவளைச் சிவமாக வெளிப்படுத்தி விட்டார் ராமகிருஷ்ணர். கருணையில் கனிந்து கொண்டு வழிபாட்டைப் பெற்றாள் சாரதாமணி.

ஷோடசி என்ற பெயரில் பதினாறு திருவெழுத்துக்களை மூல மந்திரமாகக் கொண்ட சௌந்தர்ய மூர்த்தியை, சௌம்யமூர்த்தியை ஸ்ரீ ராஜராஜேசுவரியை சாரதாமணியில் விழிப்புறச் செய்து அவளை ஷோடச உபசாரங்கள் என்ற பதினாறு உபசாரங்களால் ஆராதித்தார் ராமகிருஷ்ணர்.

அவளும் சர்வ சகஜமாக அந்தப் பூஜையை ஏற்றாள். சக்தியற்றிருந்த மின்விளக்கு விசையைப் போட்ட பின் 'ஒளிர மாட்டேன்' என்று மறுக்க



''நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளாவிட்டால் இந்த ஜன்மத்தில் வேறொரு பெண் முகத்தை நான் நிமிர்ந்து பார்ப்பேன் என்று நினைக்காதே. ஆமாம்.''

''அதெல்லாம் சரிதான்....! கல்யாணம் பண்ணிக்கொண்டுவிட்டால் அப்புறம் என்னவாம்!''

முடியுமா? இவர் ஏதோ ஒரு விசையைத் தட்டிவிட்டார். அவள் ஒளி வெள்ளமாகி விட்டாள்.

கணவன் மனைவியாகக் கலியாணம் புரிந்துகொண்ட அந்த இருவரில் இப்போது கணவர் பக்தக் குழந்தையாகிவிருக்கிறார்! அன்னைத் தெய்வமாகிவிட்ட மனைவிக்கு பக்ஷ்ய-போஜ்யங்களையும், பலவிதமான பழங்களையும் நிவேதனம் செய்கிறார்!

திவ்விய அன்பின் நெரிசல் அதிகரித்தது. முன்பு பவதாரிணியிடம் செய்தாற் போலவே இப்போது சாரதாமணியின் திருவாயில் தாமே உணவு ஊட்டினார்.

அவ்வளவுதான்.

கணவன் — மனைவி உறவு போய், குரு — சிஷ்ய உறவு போய், குழந்தை— அன்னை என்ற உறவும், பக்தன் — தெய்வம் என்ற உறவும் கூடப் போய் விட்டன.

உறவு என்பது இரண்டு பொருள்களைத் தொடர்புறுத்துவது தானே? இரண்டு பொருள்கள் இருப்பதாகவே உணர்வின்றி, ஒன்றேயான பொருளில் ஆழ்ந்து விட்டால்? ராமகிருஷ்ணர், சாரதாமணி இருவருமே சமாதியில் ஆழ்ந்துவிட்டனர். ஏதோ லவலேசம் பிரக்ஞையுடன் ராமகிருஷ்ணர் தீபாராதனை செய்தபோது அவர் சாரதைக்குக் கற்பூரம் காட்டினாரா, தமக்கே காட்டிக் கொண்டாரா என்று யார் சொல்ல முடியும்?

அதோ அந்தக் கற்பூரம் எப்படிச் சாம்பல்கூட இன்றி அக்கினியில் அப்படியே

பூரணமாக மறைய அந்த அக்கினியும் மறைந்து விட்டதோ அப்படியே ராமகிருஷ்ணர் சாரதையில் உள்ள தெய்விகத்தில் மறைய அந்தத் தெய்விகமும் மறைந்து. இருவரும் சச்சிதானந்தத்தில் மூழ்கியிருந்தார்கள்.

காலம்ஊர்ந்து கொண்டே இருந்தது. காலத்தைத் தோற்றுவிப்பதால்தான் தேவி, காளி என்று பெயர் பெற்றிருக்கிறாள். 'காலமாம் வனத்தில்...ரீங்காரமிட்டுலவும் வண்டு' என்று இதனால் தான் மகா கவியும் அன்னையைப் பாடுகிறார். ஆதியில் எப்படி தேவி கால உணர்வை உண்டாக்கினாள் என்பதை நாம் யாரும் அறிவதற்கில்லை. 'ஆதி' என்பதே காலத்தை வைத்து ஏற்பட்ட பதமாகையால் இந்த விசாரணைக்குப் பொருளே கிடையாது. எனவே, கால உணர்வற்ற பிரம்மம் எப்படிக் கால நியதிக்கு உட்பட்டாற்போலாகி உலகத் தோற்றமாயிற்று என்ற வினவுக்கு விடை கிடையாது. ஆனால் பிரம்மம் கால நியதிக்கு உட்பட்டது போல் தோன்றி இந்த உலகாக இருப்பதை என்னவோ நம் கண் முன் காண்கிறோம். இப்படியேதான் சமாதி நிலையில் பரம்பொருளில் திளைத்திருப்பவர்களுக்குக் கால உணர்வு எப்படி ஏற்பட்டுச் சமாதி நிலை கலையும்?' என்று கேட்டால் அதற்கும் விடை கிடையாது. எல்லாம் காளி மாதாவின் திருவிளையாடல் என்றுதான் சொல்ல வேண்டும். குழந்தை விளையாடுவது உலக வழக்கு. அதைப் பார்க்கும் தாய்க்கு அதன் பொருள் புரிவதில்லை. ஆனால் இங்கோ உலகத்து அன்னையே விளையாடுகிறாள். குழந்தையாகிய நமக்கு அந்த விளையாட்டு எப்படிப் புரியும்?

அதெப்படியானாலும் அம்பிகையின் ஆக்ஞையில் ராமகிருஷ்ணர், சாரதாமணி இருவரது சமாதியும் நீண்ட நேரத்துக்குப் பின் — இரவின் இரண்டாம் ஜாமத்துக்குப்பின் — மெல்ல மெல்லக் கலையலாயிற்று.

பாவமுகம் எனப்படும் நிலையில் பரம்பொருளை முன் வைத்து உலகை நினைக்கும் இயல்பில் தோய்ந்திருந்தார் ராமகிருஷ்ணர்.

ஸர்வ மங்கல மாங்கல்யே,
சிவே ஸர்வார்த்த ஸாதிகே!
சரண்யே த்ரயம்பிகே
கௌரி நாராயணி நமோஸ்துதே ||

''சுபமான சகலத்திலும் சுபமாக இருப்பவளே! பரமசுபமான பரமசிவையே! எல்லாச் செயல்களையும் உன்னிருந்து ஆற்றுபவளே! அடைக்கலப் பொருளே! முக்கண்ணுளே (மும்மூர்த்திக்கும் மூத்தவளே)! தூய வெண்ணிறத்தவளே! மக்கள் கடைத்தேறும் மார்க்கமான நாராயணனின் ஸ்வரூபமானவளே! உன்னைப் பணிகிறேன், பணிகிறேன், பணிகிறேன்!'' என்று உணர்ச்சியின் விழுமிய எழுச்சியுடன் கூவினார்.


சாரதாமணியின் கழலிணையில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கும்பிட்டார். அவளும் பாவ முகத்திலிருந்து அதை அங்கீகரித்தாள்.

உலகத்துக்கு ஒருவனை இழக்கிற மனைவி என்ற உருவத்தில் பரமேசுவரியைப் பக்குவத்துடன் பூஜித்ததுடன் தமது சாதனைகள் நிறைவு பெற்றுவிட்டன என்று ராமகிருஷ்ணர் உணர்ந்தார். சாதனையும் நிறைந்தது; அவருடைய இதயமும் நிறைந்தது. சாதனையின் பலனை முழுதும் அனுபவித்துவிட்டோம் என்று ஆனந்தம் கொண்டார். அந்த நிலையில் அவ்வளவு காலமாக பன்னிரண்டு நீண்ட ஆண்டுகளாக — அவர் புரிந்த சாதனைகளின் நினைவே ஒரு பாரமாகக் கனத்தது. வீட்டுக்குள் வந்தவுடன் குடையை மூடி வைத்துவிட வேண்டியதுதானே? தம் சாதனைகளையும் கழற்றி அப்பால் வைக்கத் துடித்தார் ராமகிருஷ்ணர். 'அப்பால்' என்றால் அம்பிகையின் கழலிணையில் கழற்றி வைக்கத் துடித்தார்.

அம்பிகையாக அமர்ந்திருந்த சதியிடம் ஆனந்தக் கண்ணீருடன் கூறினார்:

''தேவி நான் அனுபவித்த வேத-வேதாந்த - தந்திர - மந்திர சாதனைகளையெல்லாம் இதோ உன் திருவடிகளில் சமர்ப்பித்து விட்டேன். இவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு உன்பால் அன்பால் நெகிழ்கிற பான்மையை மட்டும் கொடுத்தருள்வாய்.

''எல்லாம் உன் உடைமையே! இதோ உன்னுடையனவான அந்த எல்லாவற்றிலும் என்னிடம் எனவை எனவை தங்கியிருந்தனவோ, அவற்றை உன்னிடமே அர்ப்பணிக்கிறேன். இதோ உனது ஞானம்; இதோ உனது அஞ்ஞானம். இதோ உனது நன்மை; இதோ உனது தீமை. இதோ உனது புண்ணியம்; இதோ உனது புகழ்ச்சி; இதோ உனது இகழ்ச்சி'' என்று கூறித் தம்முடைய எல்லாவற்றையும் அவளுடையதாகப் பாவித்து அவளிடமே அர்ப்பித்த ராமகிருஷ்ணர், ''இதோ உனது சத்தியம்; இதோ உனது அசத்..'' என்று கூறும்போது தயங்கினார்; திகைத்தார்; தடுமாறினார். (தொடரும்)



மாலைக் கதிரவன் மேலைக் கடலாடும் நேரம். இந்த நேரத்தில் சந்தியா தேவி 'விசுக் விசுக்' கென்று விரைந்தோடி வருகிறாளே, எதற்காக? இரவெல்லாம் ஆதிக்கம் செலுத்தும் இருளரக்கனுடன் போராடி வெற்றி வாகை சூடிப் பகலெல்லாம் பவனி வந்த ஆதவனுக்கு மஞ்சள் நீர் கரைத்து ஆரத்தி எடுத்து மகிழவா, அல்லது எத்தனையோ வீர திலகங்களை ஈன்றெடுத்த பாரதத் தாயின் பெருமையைப் போற்றிப் பெருமிதம் கொள்ளவா?

எதுவாயிருந்தால் என்ன? அதோ பாருங்கள், செக்கர் வானம் பூத்துவிட்டது! வானம் என்னும் தாம்பாளத்திலே செந்நீர் கரைத்துக் கொண்டு சந்தியா தேவி ஆரத்தி எடுக்கும் அழகைக் கண்டு மகிழுங்கள்! மலைவாயில் புகும் மாலைச் சூரியனை

வீரதிலகம்

ரா. வீழிநாதன்

மலைத்து நின்று பார்க்கிறீர்களே, நாம் பார்க்கக் கூடாதா?

எத்தனையோ வீர திலகங்களுக்குத் திலகம் இடும் சந்தியா தேவி அதோ ஆதவனுக்கும் அவ்வாறு நெற்றிப் பொட்டு வைத்துவிட்டாள்! அந்தப் பொட்டு எத்தனை பெரிய வட்டமாக, பார்க்கப் பார்க்கப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றும்படி எழில் கொழிக்கத் தெரிகிறது, பாருங்கள்!

சரி, பார்த்து விட்டீர்கள் அல்லவா? சற்று இப்படிப் பார்வையைத் திருப்புங்கள். இல்லாவிட்டால் இந்த இன்பக் காட்சியைக் காண முடியாமல் போய் விடும்.

இதோ, இதுதான் 'புந்தேல்கண்ட்' பகுதியைச் சேர்ந்த 'ஓர்ச்சா'வில் உள்ள அரண்மனை. அரண்மனையை அடுத்த உத்தியானவனத்திலே ஆணும் பெண்ணும் இணை இணையாகப் புள்ளினங்கள் ஆரவாரம் செய்து கொண்டிருக்கின்றனவே, காதில் விழுகிறதா?

அந்த ஒலி வரும் திசையை நோக்குங்கள்! அதோ முகத்தில் மகிழ்ச்சி பொங்க, அழகில் ரதியையும் மன்மதனையும் நிகர்க்க வரும் காதல் ஜோடியைப் பார்த்தீர்களா? அவர்கள்தாம் ஓர்ச்சா ராஜ்யத்து மகாராஜா யசவந்த சிம்மரும் மகாராணி மகாமாயாவும் ஆவர்.

அவர்களுக்கு முகமன் கூறி வரவேற்கத்தான் பறவை இனங்கள் இத்தனை கோலாகலக் குரல் எழுப்புகின்றன. காதல் ஜோடிகளுக்குத் தங்களைப் போன்ற காதல் ஜோடிகளைக் காணுவதில்தான் எத்தனை இன்பம்!

காதலும் வீரமும் இணையும் இந்தப் பொன்னான நேரத்தைப் புகழச் சொற்களுக்குப் பஞ்சம்தான். ஆனால், உணர்ச்சிகளுக்குப் பஞ்சம், பஞ்சம், பஞ்சமென்பதே இல்லையே!

மன்னரும் மகாராணியும் கொடி வீட்டிலே போடப்பட்டிருக்கும் மலர் மஞ்சத்திலே அமர்ந்து விட்டார்கள். மயில்கள் தோகை விரித்து நடம் புரிய, பறவைகள் இன்னிசை எழுப்ப, இலைகள் தாளம் போட, தென்றல் சாமரம் வீச, மலர்கள் மணம் பரப்ப அதோ அவர்கள் மெய்ம் மறந்து விட்டார்கள். மன்னர் தம்மையும் மீறி மகாமாயாவின் கரங்களைத் தம் கரங்களில் ஏந்திக் கொண்டு விட்டார். நாணிக் கோணிக் கண் புதைக்கும் மகாமாயாவின் முகம் எப்படி வெட்கிச் சிவந்து விட்டது! மென்னகை புரிந்தவள் திடீரென்று 'களுக்'கெனச் சிரிப்பானேன்? நாம் பார்த்துவிட்டோமென்றா?

அதோ மன்னர் ஏதோ கேட்கிறாரே!

''என்ன மகாமாயா?''

''ஒன்றும் இல்லை!''

''ஒன்றும் இல்லாமல் இப்படிச் சிரிப்பாயா...?''

''வந்து....வந்து....''

''என்ன?''

''நமது முந்தையத் தலைமுறையைச் சேர்ந்த மன்னர் ஒருவரது நினைவு வந்தது.''

''என்ன புதிர் போடுகிறாய்?''

''புதிர் போடவில்லை. இளம் கன்னி ஒருத்தியைக் கரம் பிடித்தவர் 'அவளே கதி' என்று அந்தப்புரத்தில் அடைக்கலமாகிவிட்டாராம். அரசாங்க அலுவல்களையெல்லாம் மந்திரி பிரதானிகளுக்கே விட்டு விட்டுத் தமது இன்பம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டுவிட்டாராம்.''

''பிஹாரி என்னும் கவிஞர் பாடிய பாடலை எனக்கு நினைவுறுத்துகிறாய். அப்படித்தானே?''

''ஆம்.''

''அவரது காவியநாயகி ஒரு மலராத மொட்டு. அந்த அரும்பிலே மகரந்தம் உருவாகவில்லை. தேன் வைக்கவில்லை. மலர்ச்சி பெற்று மலர் மணமும் பரப்பவில்லை. வெறும் மொட்டையே வண்டு மொய்க்கத் தொடங்கி விட்டது. மொட்டு மலர்ந்து மணம் பரப்பத் தொடங்கி விட்டால் என்ன ஆகுமோ என்று ஐயத்தைக் கிளப்பினார் கவி. ஆனால் நாம்.....''

''.....மலர்ந்து மணம் பரப்பும் பிராயத்தினர்கள். கவியின் ஐயப்பாடு நம்மைப் பற்றி கொண்டுவிட்டால்....?''

கடகடவெனச் சிரித்தார் மன்னர். ''இயற்கையின் நியதியை மாற்ற முடியாதே நம்மால்? மலர் வண்டை மறப்பதுண்டு. ஆனால் வண்டு மலர்த் தேனை மறப்பதுண்டா? அதே போல நீ என்னை மறந்தாலும் நான் உன்னை மறக்க முடியாதே'' என்றார்.

''என்ன பேச்சுப் பேசுகிறீர்கள்? நான் உங்களை மறப்பதா? இந்த ஜன்மத்தில் என்ன? எந்த ஜன்மத்திலும் நான் உங்களை மறக்க மாட்டேன்!'' — மகாமாயாவின் பூங்கரம் மெதுவாக மன்னரது கைகளைத் தடவிக் கொடுத்தது.

மன்னர் அவளது மாதுளங் கன்னங்களைத் தடவி, மெய் சிலிர்க்க, ''மகாமாயா!'' என்று அழைத்தார்.


''மகாராஜ்!''

மகாமாயாவா அப்படித் தம்மைக் கூப்பிட்டாள்?

இல்லை. பின் அழைத்தது யார்?

மன்னர் தீர்மானித்து ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளாக மகாமாயா கேட்டு விட்டாள்: 'என்ன கலோசனு?'





சருமப் பராமரிப்புக்குத் தகுந்த ஏற்பாடு அவசியம்...

அதற்குகந்தவை


'ஹேஸலின்' அழகு சாதனங்கள்



ஸ்ப்ரே * கோல்ட் க்ரீம் * டால்க்

உங்கள் சருமத்துக்குத் தனிப்பட்ட அழகுப் பராமரிப்பு தரும் மூன்று வகை நறுமண அழகுப் பொருள்கள்.

* "'ஹேஸலின்' ஸ்ப்ரே"—மேனி யெழிலுக்கு மெருகூட்டி, சருமத்தைப் பாதுகாக்கிறது.
* 'ஹேஸலின்' கோல்ட் க்ரீம் ஊடுருவிச் சுத்தம் செய்து, சருமத்தை மழமழப்போடும், கட்டுத் தளரா இளமையுடனும் இருக்கச் செய்கிறது.
* 'ஹேஸலின்' டால்க் நறுமணமுள்ள மென்மையான பவுடர் – பூசிக்கொண்டால்...ஆகா! என்ன குளுமை! என்ன புதுமை! என்ன புது மணம்!



பர்ரோஸ் வெல்கம் தயாரிப்புக்கள்

BWT-10-TAM.

"மன்னரைப் பார்க்க மங்கள சிம்மர் வந்திருக்கிறார். உடனே பார்க்க வேண்டுமாம். மிக முக்கியமான வேலையாம்."

'மங்கள சிம்மர் வந்திருக்கிறாரா? முக்கியமான வேலையா?' — மன்னரின் வாய் முணுமுணுத்தது.

மங்கள சிம்மர் மன்னரது ராணுவ அலுவல்களைக் கவனிக்கும் அந்தரங்கக் காரியதரிசி. இந்த நேரத்தில் அவர் வருவானேன்?

மன்னர் யோசிக்கலானார்.

"இதோ வந்துவிட்டார் என்று போய்ச் சொல்!" மன்னரின் யோசனைக்கு முற்றுப் புள்ளிவைத்துப் பதிலளித்தாள் மகாமாயா.

மங்களசிம்மர் வந்திருக்கிறார் என்றால் அது ஏதாவது முக்கியமான ராணுவ விஷயமாகத்தான் இருக்கும். எத்தனையோ ஆண்டுகளாக இந்த ராணுவத்துக்கும் இது பற்றிய ஆலோசனைக்கும் வேலையே இல்லாமற் போய்விட்டது. ஜஹாங்கீர் பாதுஷா தமது தந்தை அக்பரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டிருந்தார். ஒருவர் ஆட்சியில் இன்னொருவர் அனாவசியமாகத் தலையிடுவதில்லை என்றும், ஒருவர் ராஜ்யத்தை இன்னொருவர் பறித்துக் கொள்ள முயலுவதில்லை என்றும், ஒருவருக்கொருவர் நட்புடனும் உதவியாகவும் இருப்பதைத் தவிர்த்து ஒருவர் உரிமையில் இன்னொருவர் தலையிடுவதில்லை என்று தீர்மானித்து அதன்படி ஒழுகி வந்தனர். அரசாட்சி ஷாஜஹானின் கைக்கு வந்துவிட்டபோதிலும் அந்த உடன்படிக்கைக்கு ஒரு பங்கம் வரவேண்டும் என்று அவசியம் இல்லையே! எனவே, மொகலாய மன்னரிடமிருந்து அத்தகைய அச்சம் எழுந்திருக்கக் கூடும் என்று அவருக்குத் தோன்றவில்லை. அக்கம் பக்கத்தில் உள்ள மற்ற ராஜ்யங்களுக்கு மன்னர் யசவந்த சிம்மரை எதிர்க்கும் துணிவு கிடையாது. அப்படி இருக்கும் போது, தலை போகிற ராணுவ காரியம் என்ன நிகழ்ந்திருக்க முடியும்?

மன்னரது இத்தனை யோசனைக்கும் அந்த அந்தி சந்திவேளையில் மகாமாயா அவர் அருகில் இருந்தது காரணமா? அல்லது பல ஆண்டுகளாக அந்த நாட்டில் வீரத்துக்கே வேலை இல்லாமல் போய்விட்ட அசிரத்தை காரணமா?

காரணம் எதுவாக இருந்தாலும், மகாமாயாவுக்கும், யசவந்த சிம்மருக்கும் அறியாப் பருவத்திலேயே 'இவனுக்கு இவள் தான்' என்று முடி போட்டு வைத்த தாய் தந்தையரின் மனத்திலே இருந்த கருத்து வேறு அல்லவா?

அந்தக் கருத்தை அறிந்துகொள்ள அந்தக் காலத்துக்கு — அதாவது யசவந்தசிம்மரின் தாய் — தந்தையர் ஆட்சி புரிந்த காலத்துக்குப் போக வேண்டும். அப்போதுதான் அவர்களது அந்தரங்கம் ஒருவாறு புலனாகும்.

அப்பொழுது மகாமாயாவும் யசவந்த சிம்மரும் ஆறு எட்டு நிரம்பாத அறியாப் பிள்ளைகள். அறியும் பருவத்தினர்களான அந்தக் காலத்து மன்னரும் மகாராணியும் இதே இடத்தில் அமர்ந்து குழந்தைகளின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தனர்.

அந்தக் குழந்தைகள் அன்று விளையாடிய விளையாட்டு, சாதாரணக் குடும்பத்துக் குழந்தைகள் விளையாடும் அப்பா — அம்மா விளையாட்டு அல்ல; ராஜா — ராணியாகவும் அவர்கள் பாவித்துக்கொண்டு விளையாடவில்லை.

மெழுகினால் ஆன பெரும் கோட்டை ஒன்றை விளையாட வைத்துக் கொண்டிருந்தான் பையன். அதில் ஓர் அரசன். அவனும் பெரியவன்.

பெண்ணின் அருகிலே ஒரு சிறு கோட்டை. அதற்குக் காவலன் ஒருவன். அவன் அதற்கேற்றாற் போலச் சின்னவன்.

"என் கோட்டை ராஜா பெரிய ராஜா. நினைத்தால் உன் சின்னக் கோட்டை ராஜாவைச் சிறைப்படுத்திவிடுவார். இவருக்கு அடங்கித்தான் உன் ராஜா நடக்க வேண்டும். தெரியுமா?" என்றான் பையன்.

"அதுதான் என் ராஜா கிட்ட நடக்காது. சின்ன ராஜாவாக இருந்தாலும் யாருக்கும் தலை வணங்க மாட்டார். கப்பம் கட்டும் ஊனத் தொழிலைச் செய்ய மாட்டார்."

"அதெல்லாம் வெறும் பேச்சு. இந்த ராஜா நினைத்தால் யாரையும் தன் காலில் வந்து விழும்படி செய்துவிட முடியும்."

"வெறும் பகற் கனவு. தலை போனாலும் இவர் அடிபணிய மாட்டார்."

"பார்க்கலாமா?"

"பார்க்கலாமா?"

இரு குழந்தைகளுக்கும் இடையே சிறு சண்டை. சின்னப் பொம்மையை அவன் பிடித்துக்கொள்ள இவள் இழுக்கக் கலை பாழாகி விட்டது. கடைசியில் பொம்மை பையனின் கையில் இருந்தது.

"சிறைப்பிடித்தால் மட்டும் ஆயிற்று? நான் சொன்னபடி உயிரே போனாலும் இவர் தலைவணங்க மாட்டார்!"

"அதையும்தான் பார்த்து விடுவோமே! இதோ பார்! பெரிய ராஜா இவன் தலையைக் கொய்ய உத்தரவு கொடுத்து விட்டார். வெட்டுகிற வேகத்தில் அவர் காலடியில் இவன் தலை வந்து விழ வேண்டுமாம்!"

"விழாது. நான் சொன்னால் சொன்னது தான்" என்று பெண் தன் பேச்சுக்கு அழுத்தம் கொடுத்துப் பேசினாள்.

பையன் தன் கத்தியை எடுத்துப் பெரிய ராஜாவின் காலடியில் வந்து சின்ன ராஜாவின் தலை முத்தமிடும்படியாகக் குறி வைத்து வீசினான். பெண் சட்டென்று அவன் கையை லாகவமாகத் தட்டி விட்டாள். அவள் தட்டிய வேகத்தில் சிரச் சேதம் செய்யப்பட்ட தலை பெரிய ராஜாவின் காலடியில் போய் விழாமல் எதிர்ப் புறத்தில் போய் விழுந்தது. அது ஆடி நின்ற வேகம், பெரிய ராஜாவைப் பார்த்துக் 'கெக்கெலி' கொட்டி நகைப்பது போலவும் இருந்தது.

"சொன்னேனே, பார்த்தாயா? உண்மையான வீரர்கள் யாருக்கும் அடிபணிய மாட்டார்கள். சுதந்திரத்தை இழந்து உயிர் வாழவும் மாட்டார்கள். தெரிந்துகொள்!"

என்றான் பெண்: ஆயினும் தன் பொம்மை போன துயரத்தில் அவள் தொண்டை சற்றுக் கரகரத்தது.

''உண்மையான வீரப் பெண்மணி தன் கணவனைப் போர்க் களத்துக்கு அனுப்பும் பொழுது இப்படி அழ மாட்டாள். அவன் போரில் உயிர் துறந்தான் என்று கேள்விப் பட்டாலும் நிலை குலைய மாட்டாள். நீயும் தெரிந்துகொள்!'' என்றான் பையன்.

குழந்தைகளின் இந்த வீர விளையாட்டை யும் வாசகத்தையும் கண்டு கேட்ட அந்தக் கணமே ராஜ தம்பதிகளின் மனத்திலே இவ் விருவருக்கும் முடி போட்டு விட வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. அது செயலாக முகிழ்க்கவே, இதோ யசவந்த சிம்மரும் மகாமாயாவும் கணவன் மனைவியாக, மன்ன ரும் மகாராணியுமாகத் திகழ்கின்றனர்.

''இன்னும் நீங்கள் புறப்படவில்லையா?'' என்று கேட்டு மகாமாயா அவரைப் புறப் படும்படி தூண்டவே மன்னர் எழுந்து, அரச அவைக்கு வந்தார்.

முகத்தில் கலவரக் குறியுடன் நின்ற மங் களசிம்மர் மன்னரைக் கண்டதும், ''மகா ராஜா! மொகலாய மன்னர் ஷாஜஹா னின் படைகள் நமது கிராமங்களையும் காடு களையும் அழித்துக் கொண்டு முன்னேறி வரு வதாகச் செய்தி வந்துள்ளது. சில இடங் களில் அதிக்கிரமித்துப் பாதைகள் கூடச் சமைத்து வருகிறார்களாம்!'' என்றார்.

''மொகலாய மன்னரது படைகள் நம் நாட்டில் ஊடுருவி வருகின்றனவா? செய்து கொண்ட உடன்படிக்கை என்னவாயிற்று?''

''என்னவாயிற்று? கேட்டால் காற்றில் பறந்து விட்டது என்பார்கள்!'' என்றாள் மகாமாயா.

''பெருத்த நம்பிக்கைத் துரோகம். அவர்கள் பேச்சில் நம்பிக்கை வைத்து இத் தனை நாட்களும் நாம் நம் படை பலத்தைப் பெருக்கிக் கொள்ளாமல் போனோமே, அது அதைக் காட்டிலும் பெரும் முட்டாள்தனம். நமது பலவீனத்தைச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு விட்டார்களே பாவிகள்!'' மன்னர் பொரிந்து தள்ளினார்.

''நடந்தது நடந்து விட்டது. இப்பொழுது என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?''

''என்ன செய்யலாம், நீதான் சொல் லேன்! நமது நிலையை எண்ணி எதிரிகளிடம் தஞ்சம் புகுவோமா? வருவது வரட்டும் என்று போரில் குதிப்போமா? அல்லது மந்திரி பிர தானிகளைக் கூட்டி ஆலோசனை கேட்போமா?'' மன்னர் அடுக்கிக்கொண்டே போனார்.

''இராஜபுத்திரர்களைப் பற்றி நான் இது வரை கேள்விப்பட்டிருப்பது ஒரே ஒரு விஷ யம்தான். வெற்றி அல்லது வீர மரணம். இதைத் தவிர்த்து அவர்கள் வேறு எதையுமே அறியார்கள்!''

''அப்படி இருக்கும்போது என்ன செய்வ தாக இருக்கிறீர்கள் என்று என்னைக் கேட் கிறீரே! நான் செய்யப் போவது என்னவாக இருக்கும்? நீதான் சொல்லேன்!''

மகாமாயா மனம் பூரித்தாள்: தன்னை மறந்து 'மகாராஜாவுக்கு ஜே!' என்று வெற்றி கோஷமிட்டுக் கொண்டு உப்பரி கைக்கு ஓடினாள்.

அடுத்த சில விநாடிகளில் கோட்டை கொத்தளங்களெல்லாம் அதிரும்படியாக இடி முழக்கமென ரணபேரிகை ஒலித்தது.

2

காலை இளஞ் சூரியனுக்குக் கன்னி உஷை ஆரத்தி சுற்றி வழி அனுப்பவும், பெரும் படை யோடு போருக்குப் புறப்பட்டுக் கொண் டிருந்த மன்னர் யசவந்தசிம்மருக்கு மகா ராணி ஆரத்தி எடுத்துத் திலகமிட்டு வழி அனுப்பவும் சரியாக இருந்தது.

மன்னர் எங்கோ தொலைவில் வந்து கொண்டிருந்த மொகலாயப் படையைத் தடுத்து நிறுத்தப் போய்க் கொண்டிருந்தார். மகாராணியோ தன் மனத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல் போர்க்களத்திலே புக விட்டிருந்தாள்.

மன்னரின் படைகள் எத்தனையோ வீரா வேசத்துடன் கடலொத்த மொகலாயர் களின் படையோடு பொருதின. ஆயினும் முன்னேறி வரும் மொகலாயப் படையைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. எத்தனையோ வீர இளைஞர்களின் உயிரைப் பலி கொடுத் தும் வெற்றி காண முடியவில்லை. போரில் பின் வாங்கினாலும் படை வீரர்கள் வெற்றி அல்லது வீர மரணம் என்னும் கொள்கை யில் சிறிதும் பிறழாமல் முன்னேறினர்.

படை வீரர்களை அநாவசியமாகக் காவு கொடுத்துத் தோல்வி காண்பதைக் காட்டி லும் தற்போதைக்குப் பின் வாங்கித் தரு ணம் பார்த்து எதிரிகளைத் தாக்கினால் என்ன என்று மன்னர் எண்ணமிட்டார்.

அவ்வேளையில் மகாராணியின் மனமோ மன்னரது படைகள் எதிரிகளின் படைகளை ஓட ஓட விரட்டியடிப்பதாகக் கனவு கண்டு மகிழ்ந்தது. ராஜபுத்திரர்களின் வீரத்துக்குக் களங்கம் கற்பிக்காமல் பெருமை கூட்டிப் பெருமிதம் கொண்டிருந்தது.

பிரதோஷ வேளை நெருங்கியதும், அந்த ரங்கத் தோழி கலாவதி அர்ச்சனைப் பொருள்களை ஏந்தி வர, போருக்குத் தெய்வ மான துர்க்கையை வேண்டிக் கொள்ளக் கோயிலுக்குப் புறப்பட்டாள் மகாமாயா.

கோயில் படி ஏறும்பொழுது, கலாவதி யின் காலைப் படி இடறி விடவே, பூசைத் தட்டு பூமியில் விழுந்தது. அர்ச்சனைத் திர வியங்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடின.

மகாமாயா திரும்பிப் பார்த்தாள். கலா வதி திகைத்துத் திக்பிரமை பிடித்தவள் போல் நின்றாள். அவளுக்குத் தன் உடல் இரத்தமே உறைந்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. ராணி பூசைத் தட்டு விழுந்ததை அச்சானியமாக நினைத்துக் கோபித்தால்.....?

மருண்ட மானென நின்ற அவளைப் பார்த்து, ''போனால் போகிறது, வருத்தப் படாதே. காலில் காயமொன்றும் படவில்லையே!''

உங்கள் மகனை சுய முயற்சியால் வாழப் பழக்குங்கள்

எதிர்கால வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடன் ஏற்பதற்கு ஏற்றவகையில் உங்கள் மகனைப் பழக்கவேண்டியது உங்களுடைய சிறப்புரிமை மட்டுமல்ல முக்கிய கடமையும் ஆகும். நீங்கள் செய்யவேண்டிய மிக முக்கியமான பணி அவனுக்குப் பணம் சேமிக்கும் பழக்கத்தை கற்பிப்பதுதான். இந்தப் பழக்கம் ஆயுள் முழுவதும் நீடிப்பது மட்டுமல்லாமல் அவனுக்கு வாழ்க்கையில் முன்னேற பெரிதும் உதவி புரியும்.

இளமையிலேயே சேமிக்கும் பழக்கத்தை பயில்விப்பது தான் சரியான முறை...அப்போழுது தான் நீங்கள் பக்கபலமாக இருந்து அவனுக்கு உதவி புரிய முடியும். பதினொன்றும் அதற்கு மேலும் வயதான சிறுவர்களுக்கென்றே, பிரத்தியேகமாக பாங்க் ஆஃப் பரோடாவில் மைனர்களுக்கான 3% வட்டியுள்ள ஒரு சேவிங்ஸ் அக்கௌண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக சிறுவர்களுக்கு பணம் சேமிக்கும் நற்பழக்கம் ஏற்படும். பாங்க் ஆஃப் பரோடாவில் உங்கள் குழந்தையை ஒரு மைனர்களுக்கான சேவிங்ஸ் அக்கௌண்டைத் தொடங்கச் செய்யுங்கள். அவனுக்குத் தனி பாஸ் புத்தகம் கிடைக்கும்; அது மட்டுமல்ல, அந்த அக்கௌண்டை அவனே நிர்வகிக்கலாம்!

'உங்கள் சேவை எங்கள் கடமை' என்ற எங்கள் இலவச புத்தகத்தில் எல்லா விவரங்களும் உள்ளன. இதைப் பெற இன்றே கேட்டு எழுதுங்கள்.

தி பாங்க் ஆஃப் பரோடா லிமிடெட்
(ஸ்தாபிதம்: 1908)
தலைமைக் காரியாலயம்: பரோடா



IWT-26-1100



மறைவு

● இம்பீரியல் பாங்கியின் தலைமைக் காஷியரா யிருந்து ஓய்வுபெற்ற டி. கே. வேணுகோபாலய்யர் தமது அறுபத்தேழாவது வயதில் 26-8-63 அன்று சிவலோகப் பிராப்தி யடைந்தார். அவரது மனைவியும், தனையர்களும், ஒரே புதல்வரும், பேரக் குழந்தைகளும் அவரது பிரிவால் வருந்துகின்றனர். ●

என்று கேட்டதோடு மட்டும் நில்லாமல், இடறிய காலைப் பிடித்துச் சுளுக்கு வழித்து விடவே தொடங்கிவிட்டாள் மகாராணி. "மகாராணி! மகாராணி!" என்று சொல்லத் தோன்றியதே தவிர, சுலோசனுவால் வேறெதுவும் செய்ய முடியவில்லை.

"தேவி துர்க்கை எதையும் நல்லபடியாக நடத்தி வைப்பாள்!" என்று கூறித் தேற்றி அவளைத் துர்க்கையின் சந்நிதிக்கு அழைத்துச் சென்றாள் மகாராணி.

மகாராணியின் வீர உள்ளத்திலே எத்தகைய இரக்கம் குடிகொண்டிருக்கிறது என்று வியந்தவண்ணம் சுலோசனு தெய்வத்தை வேண்டிக்கொண்டாள், ராணியின் இஷ்டத்தை நிறைவேற்றி வைக்குமாறு.

துர்க்கையின் தரிசனத்தை முடித்துக் கொண்டு மாளிகைக்கு வந்தால், மகாராணியின் தரிசனத்துக்காக மங்களஸிம்மர் காத்துக் கொண்டிருந்தார்.

மகாராணிக்கு ஒரு கணம் தலை சுற்றியது. என்ன அசம்பாவிதம் நடந்திருக்குமோ என்று! வீர குலத்தில் உதித்தவர்கள் மன உறுதி இழக்கலாமா? எது நடந்தாலும் பொருட்படுத்தாமல் மேற்கொண்டு காரியத்தைக் கவனிப்பதல்லவா வீர குலத்துதித்த மங்கைகளுக்கு அழகு? மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு, 'என்ன?' என்ற கேள்வியைச் சமிக்ஞையாலேயே கேட்டாள்.

"தோல்வி!" என்றார் மங்களஸிம்மர்.

இராஜபுத்திரர்களது வரலாற்றிலோ, அகராதியிலோ இல்லாத சொல் அது. சொல்லக் கூசவில்லையா உமக்கு?"

"மன்னிக்க வேண்டும், மகாராணி! மெய்யைப் பொய்யாக்க முடியவில்லையே!" என்றார் மங்களஸிம்மர்.

"வெற்றி அல்லது வீர மரணம். இந்த இரண்டைத் தவிர வேறு அறியாதவர்கள் ராஜபுத்திரர்கள். அதுவும் ஓர்ச்சா வீரர்கள் தன்மானத்துக்காக உயிரையும் திருணமாக மதித்துப் போராடுபவர்கள். அவர்களா தோற்று ஓடிவருவார்கள்? ஒருநாளும் இராது. எதிரிகள் அப்படி ஒரு பொய்க் கதை கட்டி விட்டிருப்பார்கள். அதை நம்பி நீங்கள் வந்திருப்பீர்கள். மானத்தைப் பெரிதாக மதிக்கும் ராஜபுத்திரர்கள் தோல்வி என்னும் சொல்லுக்கே அடிமையாகாதவர்கள்!"

"அந்த மெய்தான் இன்று பொய்யாகி விட்டது, மகாராணி!"

"உண்மை அதுவானால் ஓர்ச்சாவின் மகாராணி நான் உத்தரவிடுகிறேன். கோட்டைக் கதவைத் தாழிடச் சொல்லுங்கள். தோற்றவர்கள் யாராயிருந்தாலும் இந்தக் கோட்டைக்குள் நுழையக் கூடாது. உயிருக்குப் பயந்து ஓடிவருபவர்களுக்கு இந்தச் சுதந்திரக் கோட்டைக்குள் புக அனுமதி கிடையாது; கிடையவே கிடையாது! பயங்கொள்ளிப் படை வீரர்களை — போரில் புறமுதுகிட்டு ஓடிவந்த கணவன்மார்களைக் கண்கொண்டு காணச் சகியார்கள் ராஜபுத்திர ரமணிகள். அவர்களுடன் அவமான வாழ்வு வாழ்வதைக் காட்டிலும் தீக்குளித்து இறந்து ஒழிவதையே பெரிதும் விரும்புவார்கள்!" என்று கர்ஜித்தாள் மகாராணி.

"மகாராஜாவேதான் எதிரிகளின் தாக்குதலைத் தாங்க முடியாமல் இப்படி உத்தர விட்டாராம்."

"அப்படியானாலும் போடுங்கள், இரட்டைத் தாழ்ப்பாள்!" மகாராணியின் உத்தரவு மேலும் இறுகியது.

மங்களஸிம்மர் தர்மசங்கடத்தில் ஆழ்ந்தார். மகாராணியின் உத்தரவுக்குக் கீழ்ப்படிவதா? அல்லது மன்னரைக் கோட்டைக்குள் விடுவதா?

இதே சமயம் மங்களஸிம்மரின் தர்மசங்கடத்தைத் தீர்த்துவைக்க வந்தார் ராஜமாதா. அவரது உடலிலும் ராஜபுத்திர ரத்தம்தான் ஓடிக் கொண்டிருந்தது. புறமுதுகிட்டு ஓடிவந்தவனின் தோல்வியை வெற்றியாக்க வேண்டும் என்றால் அவனை வெளியே நிறுத்தி வைத்து என்ன செய்வது? எனவே, பொய்க் கோபத்துடன் கடிந்துகொண்டார்: "என் மகனோ ஒரு தாய்க்கு ஒரே பிள்ளை. அவனை வாசலில் நிறுத்துவதா? அதுவும் போர்க் களத்திலிருந்து ஓடிவந்தான் என்ற ஒரு சிறு குற்றத்துக்காக. கூடாது, கூடாது; கூடவே கூடாது. இன்றையத் தோல்வி ஏன் நாளைய வெற்றியாகக் கூடாது? எனவே, கோட்டை வாசலைத் திறந்துதான் வைக்க வேண்டும்!"

மகாராணி ராஜமாதாவின் சொல்லுக்கு மாறு சொல்ல முடியாமல் தவித்தாள். ராஜமாதாவின் சொல்லுக்கு மதிப்புத் தரவேண்டும் என்பதற்காகக் கோட்டைக் கதவு திறந்திருந்தது. ஆனால் அரசனை அரசாங்க மரியாதையுடன் வரவேற்கமட்டும் ஆள் இல்லை. பேயறைந்த மாளிகை போல் அரண்மனை சோபையற்றுக் கிடந்தது. இதுவே வேறு



"டேய்! சேகர்! நான் பிள்ளையார் சதுர்த்தி அன்னிக்குத்தான் பிறந்தேன்; தெரியுமா உனக்கு?...."

கண்ணன் பரீட்சையில் தேருமற் போனது, அவன் உபாத்தியாயருக்கே ஆச்சரியமாகப் போய் விட்டது. அவன் இப்படிக் குறைந்த மார்க்குகள் இதுவரை வாங்கியதே இல்லை. அவனைக் கூப்பிட்டு, ''என்னடா இப்படி எல்லாப் பேப்பரிலுமே 'பெயி' லாகிவிட்டாய்?'' என்று கேட்டார்.

''இதில் என் குற்றம் என்னளவும் இல்லை, சார்! சூழ்நிலை அப்படியாகி விட்டது!'' என்றான் அவன்.

''அப்படி என்னடா சூழ்நிலை உனக்கு வந்து விட்டது?''

''சார்! உங்களுக்குத் தெரியுமே, மாதவன் என் நெருங்கிய நண்பன். எப்பொழுதும் என் பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பானே?''



''ஆமாம், அவனுக்குத்தான் பாவம் பரீட்சை எழுத முடியாமல் உடம்புக்கு வந்துவிட்டது!''

''அந்த வருத்தம்தான் சார், காரணம், நான் எந்தப் பேப்பருமே சரியாக எழுத முடியவில்லை.''

''ஒரு பேப்பர் இரண்டு பேப்பர் வருத்தம் காரணமாகப் பெயிலாகி விட்டது என்றால், அதை ஒரு விதத்தில் ஏற்றுக் கொள்ளலாம். உன் பேப்பர் எல்லாமே அல்லவா சரியாக இல்லை!''

''ஆமாம், சார்! அவன் பக்கத்தில் இருந்தால் பார்த்து எழுதச் சௌகரியமாயிருந்திருக்கும். எந்தப் பேப்பரிலும் பெயிலாகி யிருக்க மாட்டேன்!'' என்றான் கண்ணன்.

விதமாக நடந்திருந்தால் மன்னரை வரவேற்க எத்தகைய படாடோப ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்?

உண்மையைக் கேட்கப் போனால், மன்னரும் மனமொப்பியா இந்தக் காரியத்தைச் செய்தார்? இல்லை, இல்லவே இல்லை. தமது பழமறிந்த இராஜதந்திர முறையைக் கையாள விரும்பினார். 'காலம் வரும், தர்மம் வெல்லும்' என்று கணக்குப் போட்டார்.

ஆனால், மகாமாயா மாறுபட்ட கருத்தல்லவா கொண்டிருந்தாள்! உலகத்திலே அபிப்பிராய சுதந்திரம் என்று ஒன்று இருக்கும்வரை இத்தகைய மாறுபட்ட கருத்துக்கள் தோன்றுவது சகஜமே. தமது உள்ளக் கிடக்கையை மகாராணிக்குக் கூறி, அவளைச் சம்மதிக்க வைத்துவிடலாம் என்ற நோக்கத்தில் மன்னர் வந்தால், அவரது அறை வெறிச்சோடி யிருந்தது. மன்னரை வரவேற்க மகாராணி அங்கு இல்லை.

அவருக்கு மனத்தை உறுத்தியது. இப்படிப் புறமுதுகிட்டு ஓடிவந்து அவமானப்படுவதைக் காட்டிலும் போர்க்களத்திலேயே பொருதி மடிந்திருக்கலாமே! இனி போனதை நினைத்து என்ன பயன்?

மன்னர் மாற்றுடை தரித்துக்கொள்ள உள்ளே போனார். இருட்டி இரண்டாவது ஜாமம் தொடங்கிவிட்டவே பணிப் பெண் கலோசனு மன்னரை உணவருந்தக் கூப்பிடுவதற்காக வந்தாள். தினமும் மகாராணி வருவது வழக்கம். இன்று பணிப் பெண்...

''எனக்கு இன்று இங்கு கிடைத்திருக்கும் வரவேற்புக்கு எட்டு நாள் சாப்பாட்டை இன்று ஒரு நாளிலேயே சாப்பிட்டுவிட்ட திருப்தி தோன்றுகிறது!'' உள்ளத்து ஆத்திரத்தைச் சொற்களில் வடித்தார் மன்னர்.

''மகாராஜா என்ன சொல்கிறீர்கள்?''

''சோற்றுக்கு உப்பு இல்லை என்று!'' மீண்டும் சீறினார் மன்னர்.

''மகாராஜா இப்படிக் கோபித்துக் கொண்டால் என்ன செய்வது? இத்தனை நாட்களும் உப்புப் போட்டு உணவு பரிமாறியதற்குத் தகுந்த பலனைத்தான் பார்த்தாயிற்றே!''

ஒரு பணிப்பெண் பேசுகிற பேச்சா இது?

''என்ன?''

''கோபிக்கக் கூடாது. எழுந்து உணவருந்த வரவேண்டும். உணவு அருந்தாமல் இருந்தால், உடம்பு என்னத்துக்கு ஆகும்? சுவரை வைத்துக் கொண்டுதானே சித்திரம் எழுதியாக வேண்டும்? இன்று புறமுதுகிட்டு ஓடி வந்தாலும், நாளை இழந்த கௌரவத்தை மீட்க வேண்டும் என்றால் இந்த உடம்பு இல்லாமல் முடியுமா? எழுந்து வாருங்கள்!'' என்றாள் பணிப் பெண்.

மன்னருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இந்தப் பணிப் பெண்ணுக்குத்தான் என்ன வாய்த்துடுக்கு? இத்தனை தைரியமாகப் பணிப் பெண் ஒருத்தி பேசுவாளா? நிமிர்ந்து பார்த்தார். 'மகாராணி சொல்லிக் கொடுத்த வாசகத்தைத்தான் அவள் தைரியத்தில் இவள் கிளிப்பிள்ளை போலச் சொல்லுகிறாள். புறமுதுகிட்டு ஓடிவந்ததற்குச் சரியான வரவேற்புத்தான் இது!'

''மகாராணிக்கு வர முடியவில்லையோ?'' மன்னர் கேட்டார்.

''மகாராணிக்கு உடல் நிலை சரியாயில்லை. எனவேதான் என்னை அனுப்பினார்.''

'உடல்நிலையா, உள்ள நிலையா?' — கேட்க வாய் எடுத்தவர் திருத்திக் கொண்டார். மேலும் பேச்சை எடுத்துச் சொல்லிக் கேட்டுக்



கௌரவத்தைக் குறைத்துக்கொள்ள விரும்பவில்லை அவர். "கலோசனா! நீ நன்றாகப் பேசக் கற்றுக்கொண்டிருக்கிறாய். இதோ வருகிறேன், போ!" என்றார்.

இந்தப் போர் வந்தாலும் வந்தது. அந்நியோன்னியமாக இருந்த மகாராஜாவுக்கும் மகாராணிக்கும் இடையே ஒரு பெரிய பிளவையே அல்லவா உண்டுபண்ணிவிட்டது! மகாராணி இப்படி ஓர் நாடகம் நிகழ்த்துவதற்குக் காரணம் பணிப்பெண் கலோசனாவுக்கு விளங்காமல் இல்லை. இது இப்படி ஓர் அவமதியாக உருப்பெற வேண்டுமா என்றுதான் சிந்தித்தாள். ஆயினும் மன்னர் தன் பேச்சுக்கும் செவிமடுத்து உணவருந்த வரச் சம்மதித்ததில் அவளுக்கு ஒரு தனியான திருப்தி. உண்மையைக் கேட்டால், அவள் வாய் பேசிற்றே யொழிய அவளா சுயமாகப் பேசினாள்? அப்படி ஓர் அக்ஞானம் அவளுக்கு!

மன்னர் போஜன சாலைக்கு வருவதற்கு முன்பாகவே, மகாராணி அவருக்கான உணவை ஒரு தட்டில் எடுத்து வைத்தாள். ஆனால் இதென்ன? தினம் தங்கத் தட்டில் பரிமாறிப் போகும் உணவு இன்று இரும்புச் சட்டியில் போகிறதே!

கலோசனா வந்ததும், "இவ்வுணவை அரசருக்கு எடுத்துப் போ!" என்றாள் மகாராணி. இரும்புச் சட்டியைப் பார்த்த கலோசனாவுக்கு ஒரு வியப்பு! என்னைக் கருவியாக்கி மகாராணி மன்னரை எப்படியெல்லாமோ அவமதிக்கத் திட்டமிட்டிருக்கிறாரே! முடியாது என்று மறுத்துவிட்டால்....?

"என்ன தயங்குகிறாய்? உம், எடுத்துச் செல்!" என்று கனல் கக்க மொழிந்தாள் மகாராணி. கலோசனா பதில் பேசாமல் எடுத்துச் சென்றாள் உணவுத் தட்டை.

அவள் மன்னரை நெருங்கியிருக்க மாட்டாள். அதற்குள் வேகமாக நுழைந்தாள் மகாராணி. கலோசனாவின் கையில் உள்ள தட்டை அப்பொழுதுதான் பார்ப்பவள் போலப் பார்த்துவிட்டு, "கலோசனா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? இந்த இரும்பு வாணலியில் மன்னருக்கு உணவு எடுத்து வந்திருக்கிறாயே, நமது வீர ராஜபுத்திர மன்னருக்கு இரும்பைக் கண்டால் எவ்வளவு பயம் என்று தெரியாதா? இது அவருக்குக் கேடயமாகக் காட்சி அளிக்குமே!" என்று கடிந்தாள்.

அப்பொழுது ராஜ மாதா ஓர் இரும்புக் கரண்டியைக் கையில் எடுத்துக் கொண்டு அங்கே வந்தார்.

"ஐயையோ! நீங்கள் கொண்டு வந்திருக்கும் கரண்டியைக் கத்தியென்று எண்ணிவிடப் போகிறாரே, உங்கள் பிள்ளை. பெண்களாகிய நாம் கேடயத்தையும் கத்தியையும் எடுத்துக் கொண்டு தம்மைத் தாக்க வந்திருப்பதாக எண்ணிப் போர்க்களத்திலிருந்து ஓடிவந்தது போல இந்த அந்தப்புரத்திலிருந்தும் ஓடிப் போய்விட்டால் அப்புறம் என்ன ஆவது?" என்றாள் மகாராணி.

"என்ன ஆகும்? போரில் புறமுதுகிட்டு ஓடி வந்தவனை அந்தப்புரத்துப் பெண்கள் அடித்து விரட்டி விட்டார்கள் என்ற அவப்பெயர் நமக்கு ஏற்படும்! ஓடிப் போய்த் தங்கத் தாம்பாளத்தில் உணவு எடுத்துவா, கலோசனா. இவற்றைக் கொண்டு போய்க் கண்காணாத இடத்தில் வைத்து விடு. குழந்தை பயந்துவிடப் போகிறான்!" என்றார் ராஜமாதா.



மன்னர் மூவரையும் மாறி மாறிப் பார்த்தார். முன்னேற்பாட்டோடு நடத்தும் நாடகமாகப் பட்டது அவர் கண்களுக்கு. போர்க்களத்திலிருந்து புறமுதுகிட்டு ஓடிவருபவனின் கதி இதுதான். தன் ஆண்மைக்கு இழுக்குத் தேடிக்கொண்டவனை அன்னை, மனைவி, பணியாளர்கள் எவருமே லட்சியம் செய்ய மாட்டார்கள் என்பதை நிதர்சனமாகக் கண்டார். அப்புறம் அவருக்கு அங்கே உட்கார்ந்து உணவருந்தப் பைத்தியமா, என்ன?

விருட்டென்று எழுந்தார். வெற்றி அல்லது வீர மரணம் என்று தீர்மானித்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்.

மன்னர் போகும் விதத்தைக் கண்டு மகாராணி மகாமாயாவுக்கு மன அமைதி ஏற்பட்டது. தன் கணவர் இனி முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டார், போர்க் கோலம் பூண்டு வீராவேசத்துடன் புறப்பட்டு விடுவார் என்ற உறுதி ஏற்பட்டது.

தனது செய்கைக்கு விளக்கம் தெரிவித்து, தான் நடத்திய ஊடல் நாடகத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கலாம் என்ற நோக்கத்துடன் மன்னரது அறைக்குச் சென்றவளைத் தாழிட்ட கதவுதான் வரவேற்றது.

3

இரவுக்கிரவே மன்னர் தமது படை வீரர்களை ஊக்கி வீராவேசத்துடன் போருக்குப் புறப்பட்டது உஷைக் கன்னிக்குக்கூட தெரியாது. ஆக்ரோஷம் மிகுந்த ராஜபுத்திரப் படை எதிரிகளை எதிர்பாராத விதமாகத் தாக்கி அயர வைத்துவிட்டது.

நேற்றுப் பயந்து ஓடிய புந்தேல் வீரர்களுக்கு இன்று இத்தனை பலமும் துணிவும் எங்கிருந்து வந்தன? ஆழந் தெரியாமல் நாம் காலை விட்டு விட்டோம், இன்று வகையாக மாட்டிக்கொண்டுவிட்டோம் என்று தோன்றவே மொகலாயர் படை மிரண்டு மருண்டு பின்வாங்கியது.

ஆதவன் உக்கிர ரூபம் தரிக்கத் தரிக்க அவன் வழியில் உதித்த ராஜபுத்திரர்களின் ஆவேச உணர்வும் அதிகமாகியது. மொகலாயர்களை ஓட ஓட விரட்டலாயினர். மன்னரோ தமது படைகள் தம் வேகத்துக்குப் பின் தொடருகின்றனவா என்றுகூடப் பாராமல் வெற்றி வெறியில் முன்னேறிக்கொண்டிருந்தார்.

பின் வாங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்திலும் மொகலாயர்கள் ஒரு சூழ்ச்சியைக் கையாண்டு மன்னரைத் தனி வழியே வெகு தூரம் இட்டுச் சென்று தருணம் பார்த்துச் சிறைப்படுத்தி விட்டனர்.

'மன்னர் நம் கைக்குள் சிக்கிக்கொண்டு விட்டார். இனி நாடு நமது வசமாவதற்குக் கேட்பானேன்?' என்ற இறுமாப்பில் முதல் நாள் பிடித்த இடங்களையெல்லாம் கூட விட்டு விட்டு மொகலாயர்கள் பின்னடைந்தார்கள்.

மன்னர் சிறைப்பட்டுவிட்டார் என்ற செய்தி புந்தேலப் படைகளுக்கு முதலில் அதிர்ச்சியைத்தான் தந்தது. ஆனால் எதிரிகளை நாட்டின் எல்லையிலிருந்து அப்புறப்படுத்திவிட்டோம் என்ற உணர்வு மகிழ்ச்சியைத் தந்தது. 'மன்னரை மீட்போம். எல்லையைக் காப்போம்' என்று உறுதி பூண்டு மனம் தளராது பணியாற்றினர்.

மன்னர் 'வெற்றி அல்லது வீர மரணம்' என்று உறுதி பூண்டு பெரும் படையோடு போருக்குப் போயிருக்கிறார் என்ற செய்தி மகாமாயாவை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி மனம் பூரிக்கச் செய்தது.

பொழுது புலருவதற்கு முன்பாகவே நீராடி நல்லாடை அணிந்து, அன்னை துர்க்கைக்கு விசேஷ பூஜை செய்யப் புறப்பட்டு விட்டாள். போர்க் கோலம் பூண்டிருந்த துர்க்கையின் முகார விந்தத்தைக் காண அவளுக்குப் புல்லரித்தது. 'என் கணவருக்கு வெற்றியைத் தந்தருளுவாய் தேவி!' என்று வேண்டியவண்ணம் கற்பூரத்தை ஏற்றினாள்; கையில் எடுக்கு முன் அது அணைந்தது.

பக்கத்தில் நின்ற கலோசனு மீண்டும் பற்ற வைத்து எடுத்துக் கொடுத்தாள். மகாராணி அதைத் தன் கையில் வாங்குவதற்குள்ளாக அது மறுபடியும் அணைந்தது.

இன்று கற்பூரம் ஏன் இப்படி அணைகிறது? கலோசனுவுக்கு மனத்துக்குள் ஒரு பதற்றம். மகாராணியோ இதைக் கவனித்தும் கவனியாதது போல் மூன்றும் முறையாக ஏற்றினாள். துர்க்கைக்குக் கற்பூர ஆரத்தி எடுத்துக் கீழே வைத்துக் கண்களில் ஒற்றிக்கொள்ளப் போன தருணம் கற்பூரம் அணைந்துவிட்டது.

அதற்கு மேலும் கலோசனுவினால் பேசாமல் இருக்க முடியவில்லை. கண்களில் நீர் துளும்ப, குரல் நடுங்க, ''என்ன மகாராணி இது?'' என்றாள்.

உறுதி வாய்ந்த நெஞ்சம் படைத்த மகாராணி, ''பதற்றப்படாதே, கலோசனு! என்ன இடையூறுகள் நேர்ந்தாலும் அதை எதிர்த்து முன்னேறுவதே மனிதர்களின் கடமையாக இருக்க வேண்டும். மன்னர் வெற்றி வாகை சூடிக்கொண்டு வரப்போகிறார். இப்பணியில் அவருக்கு இப்பொழுது கற்பூரம் அணைந்தது போல எத்தனையோ இடையூறுகள் ஏற்படலாம். அவற்றையெல்லாம் அவர் சமாளித்துக் கொண்டு வரவேண்டியிருக்கும் என்பதைக் குறிப்பிடவே, இந்த நிகழ்ச்சி நடந்துள்ளது. அதுவன்றி நீ நினைப்பது போல் ஏதாவது இசைகேடான காரியம் நடந்தாலும் நாம் வருந்துவதற்கு ஒன்றும் இல்லை. அன்னை பராசக்தி அவள் கொடுத்த உயிரை எடுத்துப் போகிறாள் என்று கொள்ள வேண்டும். 'என் கணவர் தம் பணியைச் செய்த வண்ணம் உயிர் துறந்தார். நாட்டின் சுதந்திரத்தைக் காக்கும் முயற்சியில் மடிந்தார்' என்று சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டுமே ஒழிய வீர ராஜபுத்திர ரமணிகள் கலங்கி அழக்கூடாது. எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்களா யிருப்பதே ராஜபுத்திர ரமணிகளுக்கு அழகு!'' என்றாள்.

தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்க்கு ஏற்படும் ஆனந்தத்தை ஒத்ததல்லவா, தன் கணவன் ஓர் உண்மையான வீரன், அஞ்சா நெஞ்சம் படைத்தவன், அற நெறியிலே வழுவாது வாழ்பவன் என்று கேட்கும் மனைவிக்கு!

இப்படியாகத் தன் மனத்துக்குச் சஞ்சலம் கொடுக்காமல் தன் கணவரின் வெற்றி ஒன்றையே கருத்தில் கொண்டு மகாராணி மாளிகையை அடைந்தாள். மங்களசிம்மர் தன்னைப் பார்க்க வந்திருக்கிறார் என்னும் செய்தி ஒருகணம் அவளைத் தூக்கிவாரிப் போட்டது. அப்பொழுது கிழக்கே உதித்த சூரியன் மேற்கே உறைந்த நேரம்.

என்ன செய்தி சொல்லப் போகிறாரோ மங்களசிம்மர்?

''மகாராணி!''

மகாராணியை நேருக்கு நேர் பார்த்த மங்களசிம்மருக்கு எதுவும் சொல்லத் தோன்ற


இப்பொழுது நடைபெறுகிறது
மதுரை சிந்தாமணி
மற்றும் தென்னாடெங்கும்
அன்னபூர்ணா வின்
இரு நண்பர்கள்
டைரக்ஷன்: வசனம்; இசை: காமிரா தயாரிப்பு:
A.சுப்பாராவ், ஆரூர்தாஸ், S.ராஜேஸ்வரராவ், P.S.செல்வராஜ், D.மதுசூதனராவ்
ELEGANT
For Particulars: VIJAYAPRABHA PICTURES, MYLAPORE, MADRAS-4

வில்லை. முதல் நாள் அநுபவம் வேறு நினைவிருக்கிறதே! காய்ச்சி விட்டானே!

"ஏன் நிறுத்திவிட்டீர்? சொல்லும்!"

"மகாராணி!....."

"ஏன் தயக்கம்? எந்தச் செய்தியானாலும் சொல்லலாம். எந்த அதிர்ச்சியையும் தாங்கும் இதயம் ராஜபுத்திரப் பெண்மணிகளின் ஏகபோக சொத்து. பேரிடியே விழுந்தாலும் அதிர்ந்து விடமாட்டார்கள்!"

"மகாராணி! மன்னர்...."

"என்னவானார்?"

"மொகலாயர்களின் கையில் சிக்கிச் சிறைப்பட்டு விட்டார்!"

"பூ. இவ்வளவு தானே? இதைச் சொல்லவா இத்தனை தயங்கினீர்? நல்ல ஆண் மகன் ஐயா நீர்? மரணத்துடன் போராடி உறவாடும் வீரர்களைப் பற்றிச் சொன்னால் கூட நாங்கள் அஞ்ச மாட்டோம். தோல்வி என்னும் ஒரு சொல்லைக் கேட்கத்தான் எங்களுக்குச் சகிக்காது. புறமுதுகிட்டு ஓடி வருபவர்களைக் கண்டாலும் பிடிக்காது. நீர் போய் எல்லையைக் காக்கும் பணியில் ஈடுபடும். மற்ற எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றாள் மகாராணி.



4

ஆக்ரா நகரத்தில் அன்று மாலை ஏகக் கொண்டாட்டம். ஷாஜஹான் மன்னரோ மகிழ்ச்சிக் கடலிலே மிதந்தார். அன்றுவரை சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு வாழ்ந்த ஓர்ச்சா மன்னரைச் சிறைப்படுத்திவிட்ட மிதப்பில் அவருக்குத் தலைகால் தெரியவில்லை. என்றுமே அடிபணியாத நாடு இனி அடிபணிய வேண்டியதுதானே? ஓர்ச்சா தலைவணங்கினால், மற்ற சுதந்திர ராஜ்யங்கள் அத்தனையுமே தலை வணங்கினாற்போலத்தான். இந்த நினைப்பு அவரது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியிருந்தது. அதோடு சிறைப்பிடிக்கப்பட்ட மன்னர் யசவந்தசிம்மரை ஆக்ராவுக்கே கொண்டு வந்து சிறையில் அடைத்திருந்தனர். தங்களது மகிழ்ச்சி ஆரவாரம் அவரது காதிலும் விழவேண்டும், அவர் மனம் புழுங்க வேண்டும் என்றெண்ணிக் குதூகலக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாட்டைப் பெருத்த அளவிலே செய்திருந்தார்கள்.

எதிரிகள் வந்து தாக்கிவிடுவார்களோ என்ற அச்சம் சிறிதும் இல்லாமையால் கோட்டையின் பெரிய பிரதான வாசல்கள் கூடத் திறந்து வைக்கப்பட்டிருந்தன.

அன்றைய மகிழ்ச்சிக் கொண்டாட்டம் பின்னிரவு வரைகூட நீடித்தது. பறையும், முரசும் ஒலிக்கப் பல மொகலாயக் குதிரைப் படை வீரர்கள் யசவந்த சிம்மர் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்தில் வரிசை வரிசையாக வந்தனர். 'வாழ்க ஷாஜஹான் மன்னர்! வீழ்க யசவந்தசிம்மர்! ஒழிக ஓர்ச்சா ராஜ்யம்!' என்று கோஷமிட்டுக் கொண்டு கத்தினர். சிறைக் காவலர்களும் அவர்களது குரலோடு குரல் கொடுத்து மகிழ்ந்தனர்.

இரவு மூன்றும் ஜாமம் முடியவும், இளங் குளிர் காற்று வீசவும் சரியாக இருந்தது. கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் கண்களை உறக்கம் கவ்வவே, அவரவர் வீட்டுக்குச் சென்றனர். கண் கொட்டாமல் காவல் புரிய வேண்டியவர்களைக் கூட நித்திரா தேவி ஆட்கொண்டாள். ஒருவன் உட்கார்ந்து 'சாமி'யாடினான். இன்னொருவன் நின்று தவம் செய்தான்.

பஞ்சணை மெத்தையில் படுத்துப் பங்காக் காற்று வாங்கிக்கொண்டு தூங்கும் மனிதனின் தூக்கம் இந்தத் தூக்கத்துக்கு எதிரில் எம்மாத்திரம்?

சிறைச்சாலை வாசலில் கூடிக் கொம்மாள மடித்த குதிரை வீரர்களில் ஐவர் மட்டும் தூங்கப்போவது போலப் போக்குக் காட்டிவிட்டு ஓரிடத்தில் கூடினர்.

அவர்களுக்குத் தலைவனாகத் தோன்றியவன், "ரஞ்ஜித்! நீங்கள் நால்வரும் குதிரைகளோடு சிறையை ஒட்டினாற்போலுள்ள இரகசிய வாசலுக்கருகில் நில்லுங்கள். நான் வேலையை முடித்துக்கொண்டு வந்து சேருகிறேன்!" என்றான்.

அவர்களைப் பிரிந்தவன் சிறைக் காவல் புரிந்தவண்ணம் நின்று தூக்கத் தவம் செய்து கொண்டிருந்தவனிடம் வந்தான். அவனை உசுப்பி, 'சாமி!' என்றான். 'ஆங்' என்று அலறத் தொடங்கியவன் வாயிலிருந்து அப்புறம் வார்த்தைகள் வெளிவரவில்லை. ஒடிமரம் சாய்வது போலச் சாய்ந்தான். படுத்தவன் பாதி எழுந்தான். எழுந்த கையோடு பாதியும் விழுந்தான். அப்புறம்...? இருவரும் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்தார்கள். வந்தவனின் கையில் சிறைச்சாலைச் சாவி இருந்தது.

சிறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றவன், "மகாராஜ்! ஜல்தி புறப்படுங்கள்!" என்றான்.

மன்னர் யசவந்தசிம்மர் திகைத்தார்.

"எங்கே?"

"உங்கள் நாட்டுக்கு. பேச நேரமில்லை: சிறைச்சாலையை ஒட்டியுள்ள இரகசிய வாச



ஜுக்கு அருகில் நான்கு படை வீரர்கள் குதிரைகளோடு காத்து நிற்கிறார்கள்.''

''மொகலாய வீரனை நீ என்னை விடுவிக்கக் காரணம்?''

''உங்களுக்கும் எனக்கும், ஏன்? எல்லோருக்கும் இருக்கும் சுதந்திர உணர்ச்சிதான்!''

''உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்?''

''எனக்குச் செய்யும் கைம்மாறை உங்கள் நாட்டுக்குச் செய்யுங்கள். நாட்டின் சுதந்திரத்தை எந்த நிலையிலும் விலை கூறாதீர்கள்! உம், நேரமாகிறது!''

மன்னர் எழுந்தார். கைச் சங்கிலி ஒலித்தது. கால் சங்கிலி கனத்தது. நிமிர்ந்து வீரனைப் பார்த்தார்.

உடை வாளை உருவினான். வெட்டினான் கைச் சங்கிலியை. இரத்தம் வந்தது. சங்கிலிக்கா? இல்லை, அவசரத்தில் உருவும்பொழுது கத்தி ஆள் காட்டி விரலைப் பதம் பார்த்துவிட்டது; நகக் கணு வரை விரலைப் பலியும் வாங்கிவிட்டது. வடியும் ரத்தத்தைப் பொருட்படுத்தாமல் மன்னரது தளையை வெட்டி அகற்றினான்.

தளையிலிருந்து விடுபட்ட மன்னர் தலைப்பாகையை எடுத்துக் கிழித்தார். வீரனின் விரலுக்குக் கட்டுப் போட்டார். அவரது மஞ்சள் தலைப்பாகைத் துணி இரத்த வண்ணம் பெற்றது. 'வேண்டாம், நீங்கள் புறப்படுங்கள்! நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்று அவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவர் கேட்கவில்லை.

''அப்பா! மனிதத் தன்மையை இழக்க உபதேசிக்காதே. அந்நிய மதத்தினனான நீ உயிரைப் பணயம் வைத்து என்னை மீட்க வந்திருக்கிறாய். உனது இந்தச் சிறு காயத்துக்குக் கட்டுப் போட்டு விட்டுப் போகும் வாய்ப்பையாவது எனக்கு அளி!'' என்றார்.

''சரி, சரி! சீக்கிரம் ஆகட்டும்!'' துரிதப்படுத்தினான் அவன்.

''உன்னை ஒரு நாளும் மறக்க மாட்டேன்!'' என்று கூறிச் சிறைச் சாலையிலிருந்து அவனோடு வெளியே வந்த மன்னர் விடைபெற்றார்.

''முயன்றாலும் முடியாது!'' என்று அவன் கூறிய பதில் இருளில் பிரிந்து சென்று விட்ட அவர் செவிகளுக்கு விழ நியாயம் இல்லை.

வீரன் சிறைச் சாலையைத் திரும்பிப் பார்த்தான். காவலர்கள் இருவரது உயிரற்ற உடலும் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டான். ஒரு பெருமூச்சு விட்டு, ''ஒரு சுதந்திர நாட்டின்

மன்னரைக் காப்பதற்காக உங்கள் இருவருடைய உயிரையும் பலி வாங்கும்படியாகி விட்டது. மன்னித்தருள்க!'' என்று கூறி அவ்விடத்தை விட்டு வெளியேறினான்.

இரகசிய வாசல் வழியே வெளியேறிய மன்னருக்கு ஆச்சரியம் தாங்க வில்லை. நான்கு ராஜபுத்திர வீரர்கள் அல்லவா அவர் வருகைக்குக் குதிரைகளோடு காத்துக் கொண்டு நின்றனர்! அப்படியானால் மோகலாய வீரனின் உருவத்தில் சிறைச்சாலைக்குள் புகுந்து அவரை விடுவித்தவனும் ராஜபுத்திரன்தானோ? உள்ளத்து மகிழ்ச்சியை உள்ளத்தில் தேக்கி, ''புந்தேல்கண்ட் உங்கள் பணியை என்றும் மறக்காது!'' என்றார் அவ்வீரர்களை நோக்கி.

குதிரை வீரர்களோ உணர்ச்சி வேகத்தில் ''வாழ்க, மகாராஜா!'' என்று கோஷமிடுவதற்குப் பதிலாக, ''வாழ்க, மகாராணி மகாமாயா!'' என்று வாழ்த்தொலி எழுப்பினர்.

''ஓகோ! மகாமாயாவின் வேலையா இது?'' என்று கேட்ட மன்னர், வீரர்களோடு சேர்ந்து தாமும் மகாமாயாவுக்கு வாழ்த்துக் கூறி மகிழ்ந்தார்.

குதிரைகள் காற்றோடு உறவாடின. பொழுது புலர்வதற்கு முன்னால் ஓர்ச்சாவில் இருந்தாக வேண்டும் என்ற வேகம் அவற்றுக்கு. எல்லாக் குதிரைகளையும் விட இன்னொரு குதிரைக்கு வேகம் அதிகம். அதனால் அதை இவர்களால் பார்க்கவே முடிய வில்லை.

பொழுது புலர்ந்தது. பிரபாத பேரிகை முழங்கியது. உஷைக் கன்னிகைக்கு முன்பாக எழுந்து நீராடி விட்டு ஓர்ச்சாவின் அரண்மனை ஆசார வாசலில் மஞ்சள் நீர்த் தட்டு ஏந்தி மகாமாயா நின்று கொண்டிருந்தாள். மன்னரின் வருகைக்காக வழி மேல் விழி வைத்த வண்ணம் காத்திருந்தாள்.

குதிரைகளின் குளம்பொலி காதில் விழவே, அவளது இதயம் இன்ப உணர்வில் படபடத்தது. மன்னரின் மகிழ்ச்சிகரமான வரவைத் தெரிவிக்க மங்கள வாத்தியங்கள் முழங்கின.

அடுத்த சில கணங்களுக்கெல்லாம் மன்னர் ஏறி வந்த புரவி ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டு நின்றது. மன்னரும் குதிரையிலிருந்து குதித்து இறங்கினார்.

மன்னர் மகாமாயாவைப் பார்த்தார்; மகாமாயா மன்னரைப் பார்த்தாள்.

''என்ன மகாராணி! அப்படியே நின்று விட்டீர்கள்? ஆரத்தி எடுங்கள்!'' என்று நினைவுபடுத்தினான் கலாசனு.

ஆரத்தி சுற்றி மன்னருக்குத் திலகமிடத் தன் ஆள்காட்டி விரலை மஞ்சள் நீரில்தோய்க்கப் போனாள் மகாராணி.

அப்பொழுது மன்னரின் விழிகள் அவளது விரலை நோக்கின.

இதென்ன விந்தை! முதல் நாளிரவு மோகலாய வீரனுக்குச் சுற்றிய துணிப் பாகைக் கட்டு மகாமாயாவின் விரலில் காட்சி அளிக்கிறதே!

சட்டென்று மகாமாயாவின் விரலைப் பற்றிக் கொண்டார் மன்னர். மோகலாய வீரனாக வந்து தம்மைச் சிறையிலிருந்து மீட்டவள் இந்த மகாமாயாதான் என்பதை உணர அவருக்கு நேரமாக வில்லை.

''மகாமாயா! நிஜமாகவே நீ மகாமாயாவிதான்!'' என்று கூறித் தமது ஆள்காட்டி விரலை மஞ்சள் நீரில் தோய்த்து எடுத்தார்.

''என்ன செய்கிறீர்கள் நீங்கள்?''

''வெற்றித் திலகம் இடப் போகிறேன்!''

''நான் அல்லவா இடவேண்டும்?'' மகாமாயா தன் கட்டுப் போட்ட விரலை மஞ்சள் நீரில் நனைத்து எடுத்தாள்.

''அதெப்படி? வீரத்தின் விளை நிலம் நீ அல்லவா? எனவே, நான்தான் உனக்குப் பொட்டு இடவேண்டும்!''

''ஊஹூம், நான்தான்!''

''ஊஹூம், நான்தான்!''

''எதற்குக் குழந்தைகளைப் போலச் சண்டை போட்டுக் கொள்ளுகிறீர்கள்? நீ அவனுக்கு இட அவன் உனக்கு இட இரண்டு பேரும் சேர்ந்தே இட்டு விடுங்களேன்!'' என்றார் ராஜமாதா. குழந்தைப் பருவத்து அவர்களது விளையாட்டைப் பார்த்து அவர்தானே அவர்களை இணை சேர்த்து வைத்தவர்!

அவர் பேச்சுக்கு மாறு சொல்லாமல் இருவரும் ஏககாலத்தில் திலகம் இட்டுக் கொண்டனர். அந்தக் காட்சியைக் காண உஷைக் கன்னி விரைந்தோடி வந்தாள். அவளையும் தள்ளிக் கொண்டு கதிரோன் எட்டிப் பார்த்தான்.

இத்தகைய வீர திலகங்கள் உள்ள நாட்டிலே நம் ஜபம் சாயாது. போய் அவமானப் பட்டுத் திரும்புவதைக் காட்டிலும் பேசாமல் போய் விடுவது நல்லது என்று அறிவுசார்ந்த முடிவுக்கு ஷாஜஹானின் படைகள் வந்திருந்தன என்பதற்கு அந்நாட்சி சூரியோதயத்துக்கு முன்னால் அவை ஆக்ராவை நோக்கிப் பயணமானதேயாகும்.

அடுத்த இதழில்

விசேஷக் கட்டுரை:

வள்ளுவர் வாழ்கிறார்

★

நாடெங்கும் நவராத்திரி

★

கலை வளர்க்கும் கோயில்கள்:

கோவை அரசினர் கலைக் கல்லூரி

அக்டோபர் மாதத்திய நெடுங்கதை

வை. சுப்பிரமணியன் எழுதுகிறார்

இதைப்போன்ற புள்ளிகளை நீங்கள் சுவர்களில் கவனித்ததுண்டா?



மிகவும் கவனமாக அவைகளைப் பாருங்கள்—அவைகள் மூட்டைப்பூச்சிகளின் அடையாளங்கள் அதாவது உறக்கமற்ற இரவுகளின் அறிகுறிகள். நீங்கள் அறிந்திருப்பதைக்காட்டிலும் மூட்டைப் பூச்சிகள் மிகமிக வேகமாகப் பெருகுகின்றன. அவைகளை அலட்சியப்படுத்தாதீர்கள். அவைகளை இப்பொழுதே 'டால்பை'க் கொண்டு அழித்தொழியுங்கள். கொஞ்சம் டால்பைத் தெளியுங்கள்.... நீங்கள் அறியுமுன்பே மூட்டைப் பூச்சிகள் செத்துப்போயிருக்கும்.

டால்பின் ஒரே ஒரு தெளிப்பு அல்லது அதன் ஸ்பரிசம் பட்டாலே போதும். டால்ப் மூட்டைப் பூச்சிகளை உடனடியாகக் கொல்வதுடன் நீடித்த வன்மையுடையது. எல்லாவற்றையும்விட டால்ப் மிகவும் சிக்கனமானது—ஒவ்வொரு பாட்டிலிலிருந்தும் முழு ஸ்ப்ரே டப்பிகளையோ அல்லது ஃபிளிட் டின்களையோ இதன் கரைசலால் நிரப்பலாம்



பேயர் இந்தியா லிமிடெட்.

டால்ப்

A Bayer PRODUCT

BAYER

மூட்டைப்பூச்சிகளுக்கு சாவு மணியடிக்கிறது

விலகிய மூவர்

இந்திய சுதந்திரத்துக்குப் பிறகு மத்திய மந்திரி சபையிலிருந்து விலகிய மந்திரிகளைப் பற்றி ஒரு கட்டுரை சமீபத்தில் வெளியாயிற்று. ஆனால் டாக்டர் ஷியாமப் பிரஸாத் முகர்ஜி, டாக்டர் அம்பேத்கர், ஸ்ரீ வி. வி. கிரி மூவரையும் பற்றி அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்படவில்லை.



ஸ்ரீ முகர்ஜி

டாக்டர் ஷியாமப் பிரசாத் முகர்ஜி இந்தியாவின் முக்கியமான அரசியல் தலைவர்களில் ஒருவர். சுதந்திரத்துக்கு முன்பும், பிறகும் தேசத்தின் பொது வாழ்க்கையில் சிறந்த தொண்டாற்றியிருக்கிறார். ஜன சங்கத்தின் தலைவராக இருந்து பணியாற்றியவர். சுதந்திரத்துக்குப் பின் மத்திய மந்திரி சபையில் நேரு — பட்டேல் இவர்களின் அழைப்பை ஏற்று, தொழில் ஸப்ளை மந்திரியாகச் சுமார் மூன்று வருஷங்கள் பணிபுரிந்தார்.

மத்திய மந்திரி சபையிலிருந்து நேரு—லியாகத் அலிகான் ஒப்பந்தத்தை எதிர்த்து 1950 ஏப்ரலில் ராஜிநாமாச் செய்தார். ராஜிநாமாவுக்குப் பின் பார்லிமெண்டில் வெளியிட்ட அறிக்கையில் அவர் இதற்குமுன் இந்தியாவும் பாகிஸ்தானும் செய்துகொண்ட ஒப்பந்தங்களைப் பாகிஸ்தான் மீறியிருப்பதைச் சுட்டிக்காட்டினார். நேரு-லியாகத் அலிகான் உடன்படிக்கையினால் இந்தியாவில் உள்ள முஸ்லிம் சிறுபான்மையினரின் பிரச்னைதான் மீண்டும் எழுப்பப்படும் என்று அபிப்பிராயப் பட்டார். பாகிஸ்தான் விஷயத்தில் இந்தியா உறுதியாயிருக்க வேண்டும் என்று சொன்னார்.



ஸ்ரீ அம்பேத்கர்

டாக்டர் ஷியாம பிரசாத் முகர்ஜி காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் 23—6—53ல் காலமானார்.

"இக்காலத்து மனு" என்று போற்றப் பட்ட டாக்டர் அம்பேத்கர் இந்தியாவின் முதல் சட்ட மந்திரி. இந்திய அரசியல் சட்டத்தைத் தயாரித்த குழுவில் ஒருவர்.

டாக்டர் அம்பேத்கர் 1951 செப்டம்பரில் மத்திய மந்திரி சபையிலிருந்து ராஜிநாமாச் செய்தார். பிரதமர் நேருவுக்கு எழுதிய ராஜிநாமாக் கடிதத்தில் அவர், பல நாட்களாகவே தாம் மந்திரி சபையிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று நினைத்ததாகவும், ஆனால் இந்துமத சீர்திருத்த மசோதாவை அப்போது இருந்த பார்லிமெண்டு முடிவதற்கு முன்பே நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசையினாலேயே தொடர்ந்து இருந்து வந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார். இந்துமத சீர்திருத்த மசோதாவைப் பிரிக்கவும் ஒப்புக் கொண்டு, கல்யாணம், விவாகரத்து ஆகிய பகுதிகளையாவது நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பியதாகவும், அதுவும் முடியாமற் போகவேதான் மந்திரி சபையிலிருந்து தாம் விலகுவதாகவும் தெரிவித்திருக்கிறார். டாக்டர் அம்பேத்கர் புது தில்லியில் 6—12—56 அன்று காலமானார்.



ஸ்ரீ கிரி

தற்போது கேரள கவர்னராக இருக்கும் ஸ்ரீ வி. வி. கிரி என்றுமே தொழிலாளரின் க்ஷேமத்தைக் கோரியவர். மத்திய சர்க்காரில் தொழிலாளர் நல மந்திரியாக இருந்த போது 1954 செப்டம்பர் மாதத்தில் அவர் ராஜிநாமாச் செய்தார். பாங்கி ஊழியர்களின் கோரிக்கைகளின் மீது வெளியான தொழில் கோர்ட் தீர்ப்பைச் சர்க்கார் மாற்ற முற்பட்டபோது அதை எதிர்த்து அவர் ராஜிநாமாச் செய்தார். பாங்குகளுக்கும் அவற்றின் ஊழியர்களுக்கும் உள்ள தகராறை விசாரித்த தொழில் கோர்ட் தன்னுடைய தீர்ப்பை வெளியிட்டது. அந்தத் தீர்ப்பை அப்படியே அமுல் நடத்தினால் தேசப் பொருளாதாரத்தின் ஒரு முக்கிய அங்கம் பாதிக்கப்படும் என்று சொல்லிக் கொண்டு சர்க்கார் அந்தத் தீர்ப்பில் சில மாறுதல்களைச் செய்தது. தொழில் கோர்ட்டின் தீர்ப்பைச் சர்க்கார் மாற்றுவது தவறானதாகும் என்று கண்டித்துப் பதவியிலிருந்து ஸ்ரீ கிரி வெளியேறினார். இந்திய மக்கள் அனைவரின் நன்றிக்கும் என்றென்றும் உரியவராகிவிட்டார் கிரி.


'விலகிய காரணம்' என்ற கட்டுரை வெளியான பிறகு சமீபத்தில் காமராஜர் திட்டத்தின் காரணமாக முழு மனத்துடனும் அரை மனத்துடனும் கொஞ்சமும் மனமின்றியும் விலகிய மந்திரிகளின் பட்டியலைக் கூறத் தேவையில்லை. சர்க்காரின் அடிப்படைக் கொள்கைகளிலும் நோக்கிலும் நல்ல மாற்றங்கள் உருவானாலொழிய 'டிக்னோர்' சீட்டாட்டத்தில் கைக்குச் சீட்டுச் சேர்ப்பது போல மந்திரிகளைப் பிரதமர் மாற்றுவதனால் பிரமாதமான பலன் ஏதும் விளைந்து விடாது.

சென்னை—14
27—8—63 வி. கோபாலன்

பொன் விலங்கு

முப்பத்தைந்தாவது அத்தியாயம்

பயன் கருதாமல் அந்தக் கல்லூரிக்கும் அதன் மாணவர்களுக்கும் எத்தனையோ பல நற்பணிகளைத் தொடர்ந்து புரிந்து கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. அவற்றை யெல்லாம் பேராசிரியர்களும் கல்லூரி முதல்வரும் பாராட்டவில்லை யானாலும் நாளுக்கு நாள், மாணவ மாணவிகளுக்கும் சத்தியமூர்த்திக்குமிடையே நெருக்கமும் பாசமும், அவற்ருல் வளர்ந்து பெருகிக் கொண்டிருந்தது. சக விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும், கல்லூரி முதல்வரும், துணை முதல்வரும் இதற்காக அவன் மேல் அதிகமாகப் பொரு



மைப்பட்டார்கள்: அவனைப் பற்றி அதிகமாகப் புறம் பேசினார்கள். காலாண்டுத் தேர்வுக்கான பரீட்சைகளும் அவசர அவசரமாக நடந்து முடிந்தபின் இருபத்தைந்து மாணவர்களும், ஐந்து மாணவிகளும் சந்தனச் சோலை கிராமத்தில் மலை சரிந்து மண் மேவிப்போன சாலையைச் செப்பனிடச் சம்மதித்துக் கையொப்பமிட்டிருந்த தாளையும், 'சோஷியல் சர்வீஸ்', 'ஒர்க் காம்ப்'புக்கான திட்டத்தையும் எடுத்துக் கொண்டு போய், முதல்வரையும், பாலக்காட்டுப் பேராசிரியரையும் சத்தியமூர்த்திசந்தித்தபோது அவர்கள் மறுக்காமல் 'ஒர்க் காம்ப்' பிற்கு இணங்கியாக வேண்டியிருந்தது. நவராத்திரி விடுமுறைக்காக அப்பாவோடு மைசூர் தசரா

மணிவண்ணன்

வுக்குப் போகப் போவதாக ஆசிரியர்களிடமும், சக மாணவிகளிடமும் பெருமையடித்துக் கொண்டிருந்த பாரதியே அந்த ஒர்க் காம்ப்பிற்கு இணங்கித் தானாகக் கையொப்பமிட்டிருந்தது சத்தியமூர்த்திக்குப் பெரிதும் ஆச்சரியத்தை அளித்தது. சமூக சேவை முகாமுக்காகக் கூடாரங்கள் சமையல், சாப்பாடு ஏற்பாடுகள் எல்லாம் மாணவர்களே செய்தார்கள். மலை மேல் எட்டாயிரம் அடி உயரத்துக்கு இருந்த அந்தச் சிற்றூரில் சந்தன மரங்கள் ஏராளமாக இருந்தன. அந்த ஊரின் குளிரில் அட்டைக் கடியையும் பொறுத்துக் கொண்டு ஒரு வாரம் கடுமையாகப் பாடுபட்டு மலைச் சரிவை அகற்றிச் சாலையைப் பழையபடி ஆக்குவதற்காக மாணவ மாணவிகள் மிகவும் கடுமையாக உழைத்தார்கள்.



சத்தியமூர்த்திக்குத் துணையாக ஆயிரம் அனுப்புச் சலிப்போடு அந்த மலையாளத்து அறிவியல் பேராசிரியரும் வந்திருந்தார். மாணவிகளை மேற்பார்க்க ஒரு பேராசிரியையும் வந்திருந்தார். பயனை எதிர்பாராமல் யாரோ நடக்க யாரோ வழி உண்டாக்கித் தருகிற அந்தப் பணியில் எவ்வளவு மன நிறைவு இருக்க முடியும் என்பதை அந்தச் சமூகசேவை முகாம் முடிந்து, மாணவ மாணவிகளைத் திரும்ப அழைத்துக் கொண்டு மல்லிகைப் பந்தலுக்குத் திரும்பிய தினத்தன்று சத்தியமூர்த்தி உணர்ந்தான். எந்த

இடத்தோடு அந்தச் சாலையை அவர்கள் செப்பனிட்டு முடித்தார்களோ அந்த இடத்தில் ஓர் அடையாளமாகச் சாலை மேல் ஏதாவது மரம் நட வேண்டும் என்று மாணவர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். அந்த மரத்தைச் சத்தியமூர்த்தியே தன் கையால் நட வேண்டுமென்றும் மாணவர்கள் விரும்பினர். சத்தியமூர்த்தி அங்கே சந்தன மரத்தின் சிறு செடி ஒன்றை நட்டான். அருகில் நின்றுகொண்டிருந்த பாரதி உற்சாகமாகப் பூவாளியைத் தூக்கிக்கொண்டு வந்து அந்தச் செடிக்குத் தண்ணீர் ஊற்றினாள். "மிஸ் பாரதியே தன் கையால் நீர் வார்த்த பிறகு இந்த மரத்தின் யோகத்துக்குக் கேட்கவா வேண்டும்?" என்று சத்தியமூர்த்தி அப்போது இருந்த கலகலப்பான நிலையில் வேடிக்கையாகச் சொல்லியதைக் கூட அவள் இரசிக்கவில்லை போலிருந்தது. எல்லாரும் அதைக் கேட்டுச் சிரித்தார்கள். அவளோ தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்த பூவாளியையும் கீழே போட்டு விட்டு முகத்தைத் தூக்கிக் கொண்டாள். அப்போது மறுபடியும் அவனுக்கு அவள் புதிரானாள். சமூக சேவை முகாம் முடிந்து அவன் மல்லிகைப் பந்தலுக்குத் திரும்பிய நாளன்று அங்கே குமரப்பன் அவனுக்குச் சொல்வதற்காக ஒரு பெரிய துயரச் செய்தியை வைத்திருந்தான்.

நமக்கு மிகவும் வேண்டியவர்களுக்குத் துயரம் வந்துவிட்டால் அப்படி ஒரு துயரம் நிகழ்ந்ததாகவே நம் மனம் நம்பி ஒப்புக்கொள்ள மறுக்கிறது. சந்தனச்சோலை கிராமத்தில் சமூக சேவை முகாம் முடிந்து மல்லிகைப் பந்தலுக்குத் திரும்பிய சத்தியமூர்த்தியிடம் குமரப்பன் தெரிவித்த துயரச் செய்தியும் நம்பவும், ஒப்புக்கொள்ளவும் இயலாத அளவுக்கு வேதனை நிறைந்ததாகத் தான் இருந்தது. ஏற்கெனவே சமூக சேவை முகாம் முடிந்து திரும்பியதும் மதுரைக்குப் புறப்படுவதாக இருந்த அவன் இந்தச் செய்தி தெரிந்ததும் உடனே புறப்பட்டாக வேண்டியிருந்தது. உடம்பும் மனமும் தளர்ந்து போய்க் கேள்விப்பட்ட துயர நிகழ்ச்சியால் தாங்க முடியாத வருத்தத்தோடிருந்தான் அவன். இரண்டு மூன்று நாட்களுக்கு முன் நவராத்திரி விழாவுக்காக மஞ்சள்பட்டி சம்ஸ்தானத்துக்குப் போய்விட்டுத் திரும்பும் போது மோகினியும் அவள் தாயும் வந்துகொண்டிருந்த கார் பயங்கரமான விபத்துக்குள்ளாகி விட்டதென்றும் விபத்து நடந்த இடத்திலேயே மோகினியின் தாய் முத்தழகம்மாளும், கார் டிரைவரும் இறந்து போய் விட்டனர் என்றும், விபத்தில் உயிர் தப்பிய மோகினி சில்லறைக் காயங்களோடு மதுரை பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள் என்றும் தினப் பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பதாகக் கூறிவிட்டுக் குமரப்பன் அந்தப் பத்திரிகைகளையும் கொண்டு வந்து காண்பித்தான். 'கார் விபத்தில் பிரபல நாட்டியக்காரி மயிரிழையில் உயிர் தப்பினார்' என்று தலைப்பிட்டு முதற் பக்கத்தில் பரபரப்பான செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது அது. அந்தச் செய்தியைப் படித்ததும் சத்தியமூர்த்தியின் உடம்பும், மனமும் நடுங்கின. கண் கலங்கிற்று. பிறருடைய துயரங்களுக்காக மனம் வருந்தி அநுதாபப்பட நேரும் சம்பவங்கள் அவன் வாழ்க்கையில் நிறைய நிகழ்ந்திருக்கின்றன. இன்று மோகினிக்கு நேர்ந்த துன்பத்தைக் கேள்விப்பட்டபோதோ சாதாரணமான வருத்தத்திற்கும் துயரத்திற்கும் அப்பாற்பட்டதொரு தவிப்பையே அவன் உணர்ந்தான். சொற்களால் சொல்ல முடியாததோர் அழகிய சோகம் மிதக்கும் மோகினியின் கண்களை நினைவு கூர்ந்தான். அந்தக் கண்களில் நீர் பொங்க அவள் அழுவது போலக் கற்பனை செய்தபோது அந்தக் கற்பனையைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாத அத்தனை துயரத்தை அடைந்தது அவன் மனம். தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் அவன் அழத் தொடங்கியபோது குமரப்பன் அருகில் வந்து ஆறுதல் கூறினான்.

"உன் துயரம் எனக்குப் புரிகிறது சத்தியம்! ஆனால் உன்னையும் என்னையும் போல் ஆண் பிள்ளைகளின் துயரம் உணர்ச்சியெல்லையில் நிற்கவேண்டுமே ஒழிய அழுகையாக வெளிப்படக் கூடாது. பெண்கள் எதற்காகவும் வாய் விட்டு அழலாம். ஆண்கள் இதயத்தினால் மட்டுமே அழ முடியும். பெருமைக்கும், வலிமைக்கும் உரியவனான ஆண் மகன் துயரப்படும்போதுகூட ஆண்மை அழியாமல் துயரப்பட வேண்டும். என்ன நேர்ந்துவிட்டதென்று இப்படிக் கண் கலங்குகிறாய் நீ? மோகினிக்கு இப்படிப் பட்ட துயரம் நேர்ந்திருக்கக் கூடாது தான். நேர்ந்துவிட்ட பிறகு நீயும் நானும் என்ன செய்ய முடியும்? நாளைக் காலையில் முதல் பஸ்ஸில் மதுரை சென்று ஆஸ்பத்திரியில் அவ

சிறந்த புடவை, ஷர்ட்டிங்குகளை வாங்குபவர்கள் இந்தச் சின்னம் இருக்கிறதா என்று பார்த்தே வாங்குகிறார்கள்



பிபின்

நைலான் ஜார்ஜெட் புடவைகள்
மற்றும் டெரிலின் ஷர்ட்டிங்குகள்

பிபின்

ஸில்க் மில்ஸ் கம்பெனி
ப்ரை. லிட்.,
12, தாதர் ரோட், பம்பாய்-14

ரோஹித்க்குப் நிறுவனங்களில் ஒன்று.

ளைப் பார்த்துவிட்டு வரலாம். என்னுடைய கடையில் இப்போதுதான் தொழில் சுறுசுறுப்பாக நடக்கத் தொடங்கியிருக்கிறது. இந்த நிலையில் நான் தொழிலை விட்டு விட்டுக் கடையை இழுத்துப் பூட்டிக்கொண்டு உன்னோடு மதுரைக்கு வர முடியாது. ஆனாலும் உன்னைத் தனியாக அனுப்புவதைக் காட்டிலும் நானும் உடன் வருவது நல்லதென்று எண்ணி நான் வருகிறேன். பொறுமையாக இரு. காலையில் புறப்பட்டுப் போய்ப் பார்க்கலாம்.....'' என்றான் குமரப்பன்.

மலைக்காட்டு ஊரில் ஒரு வார காலமாக ஓடியாடி உழைத்துக் களைத்துப் போய் வந்திருந்தும் அன்றிரவு சத்தியமூர்த்தி உறங்கவேயில்லை. மோகினியைப் பற்றிய ஞாபகங்களிலேயே அந்த இரவு கழிந்தது. அவனுடைய நிகழ்காலத் துயரத்தை நினைத்தபோது கடந்த காலத் துயரங்களாக அவள் கூறியிருந்தவற்றையும் எதிர்காலத் துயரங்களாகத் தன்னால் அநுமானிக்க முடிந்தவற்றையும் சேர்த்து எண்ணினான் சத்தியமூர்த்தி. மறு நாள் காலை ஐந்தரை மணிக்கு விடிகின்ற நேரத்துக் கருக்கிருட்டில் நண்பன் குமரப்பனோடு பஸ் நிலையத்துக்குப் போய் மதுரைக்குப் பஸ் ஏறியபோது இன்னும் மூன்று-மூன்றரை மணி நேரம் பயணம் செய்து போக வேண்டும் என்று நினைப்பதற்கே பொறுமையின்றி இருந்தான் அவன். மோகினியின் மென்மையான இதயத்தைப் பற்றி அவனுக்கு நன்றாகத் தெரியும். கார் விபத்தினாலும் தாயின் மரணத்தினாலும் அவள் எவ்வளவிற்கு அதிர்ச்சியடைந்து வாடியிருப்பாள்—என்று கற்பனை செய்து பார்த்துத் தன் மனத்திற்குள் அவன் வருந்தினான்.

சத்தியமூர்த்தியும் குமரப்பனும் சேர்ந்து செய்கிற பயணத்தில் ஒருவருக்கொருவர் அதிகம் பேசிக்கொள்ளாமல் அவசரத்துடனும், மௌனமாகவும் செய்த முதற் பயணமாக இருந்தது இன்றையப் பயணம். இருவரும் மதுரையை அடைந்து ஆஸ்பத்திரிக்குச் சென்றுகொண்டிருந்தபோது, ''கார் விபத்தில் மோகினிக்கு அதிகக் காயங்கள் ஏற்பட்டிருக்குமோ குமரப்பன்?'' என்று பரபரப்பாக ஒரு கேள்வியை இருந்தாற்போலிருந்து கேட்டான் சத்தியமூர்த்தி. ''அப்படியெல்லாம் நினைத்து வீணாக் கலவரமடையாதே சத்தியம்! 'சில்லறைக் காயங்களோடு உயிர் தப்பினார்' என்றுதான் பத்திரிகைகளில் போட்டிருக்கிறது. இன்னும் கால் மணி நேரத்தில் ஆஸ்பத்திரிக்குப் போய் நேரிலேயே பார்த்துவிடப் போகிறோம். மனத்தை அலட்டிக்கொள்ளாமல் வா'' என்று நண்பனைத் தேற்றி அழைத்துக் கொண்டு சென்றான் குமரப்பன். எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்காக அவர்கள் இருவரும் டவுன் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்த போது வையைப் பாலம் நெருங்கும் வேளையிலேயே சத்தியமூர்த்தியின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. ஓடுகால் பள்ளங்களும், மணல் மேடுகளும் மறைந்து, வையையில் செந்நிறப் புது நீர் அபூர்வமாகப் பெருக்கெடுத்துப் பாய்ந்துகொண்டிருந்தது. பாலத்தின் மேற்குப்புறம் கட்டை வண்டிகளும், மற்றப் போக்குவரவு வாகனங்களும் செல்கிற கல் பாலத்துக்கும் அப்பால் தளர்ந்த கல் தூண்களோடு எதற்கோ கட்டுப்பட்டு நிற்கும் பழைய உண்மையாய் மைய மண்டபம் நின்று கொண்டிருந்தது. அதற்கும் மேற்கே இரயில் பாலத்தில்—

பொன் விளைந்த

ஒரு பெண் எதற்காகவும் வாய் விட்டு அழலாம். ஆனால் ஆண் பிள்ளை பல சமயங்களில் அப்படி அழ முடியாது: இதயத்தினால் மட்டுமே அழுவதற்கு முடியும்.

பாலத்தின் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் சரியாயிருக்கிறாற் போல ஒரு கூட்ஸ் வண்டி போய்க் கொண்டிருந்தது. அந்தப் பாலத்தில் இரயில் வந்து கொண்டிருந்த அதிகாலை நேரமொன்றின்போதுதான் கீழே குதித்துத் தற்கொலை செய்துகொள்வதற்கிருந்த மோகினியை அவன் காப்பாற்றினான். அப்படி அவன் காப்பாற்றியதைப்பற்றிப் பின்னால் ஒரு சமயம் அவளே கூறியிருந்த அழகிய வாக்கியமும் இப்போது சத்தியமூர்த்திக்கு நினைவு வந்தது. எத்தனை அழகிய வாக்கியம் அது......?

''மேளம் கொட்டாமல் நாகஸ்வரம் வாசிக்காமல் அந்த அதிகாலை நேரத்தில் ஓடும் ரயிலில் பாணிக்கிரகணம் செய்து கொண்டதுபோல் என் வலது கையைப் பிடித்து இழுத்தீர்களே...'' என்ற இனிய குரல் இப்போதும் இன்னும் கூட அவன் காதருகே ஒலித்துக் கொண்டிருப்பது போலத் தோன்றியது;

ஆஸ்பத்திரியின் அருகே பஸ்ஸிலிருந்து இறங்கி உள்ளே சென்ற போது முன் பக்கம் வரிசையாக நின்றிருந்த கார்களைப்பார்த்துக் கொண்டே நடந்த குமரப்பன், ''கண்ணாயிரமும் மஞ்சள்பட்டியாரும் வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது. இதோ அவர்களுடைய கார்கள் அடுத்தடுத்து நிற்கின்றன பார்!'' என்றான். மஞ்சள்பட்டி ஜமீன்தாருடைய மிகப் பெரிய 'காடிலாக்' காரும் அதனருகே கண்ணாயிரத்தின் சின்னஞ் சிறிய காரும் அங்கு அப்போது நின்று கொண்டிருந்தன. மோகினி அனுமதிக்கப்பட்டிருந்த ஸ்பெஷல் வார்டு அறையின் முன்புறம் கூட்டம் அதிகமாயிருந்தது. அறையின் முகப்பில் இருந்த நாற்காலிகளில் பழக் கூடைகள், ஹார்லிக்ஸ் பாட்டில்கள் சகிதம் ஜமீன்தாரும், கண்ணாயிரமும் அட்டகாசமாக உட்கார்ந்திருந்தார்கள். இன்னும் சிறிது தள்ளி மேஜைக்கருகே ஒரு சிறிய ஸ்டூலில் நர்ஸ் ஒருத்தி அமர்ந்திருந்தாள். அறைக்குள் நுழையத் தயங்கினான் சத்தியமூர்த்தி. உள்ளே போய் மோகினியைப் பார்ப்பதற்கு அவன் கால்களும் மனமும் துடித்தாலும் பின்புறம் காவல் நாய்களைப் போல் உட்கார்ந்து கொண்டு முறைத்துப் பார்த்த ஜமீன்தாரையும், கண்ணாயிரத்தையும் கண்டு தயங்கினான். நர்ஸ் வந்து ஏதோ விசாரித்தாள். அதற்கும் குமரப்பன்தான் பதில் கூறினான். ''தயங்காமல் உள்ளே வாடா சத்தியம்! இந்தப் பாவிகள் இங்கே இருக்கிறார்கள் என்பதற்காக நீயும் நானும் எதற்காகத் தயங்க வேண்டும்? பேசாமல் என் பின்னால் வா... சொல்கிறேன்'' என்று ஸ்கிரீன் வைத்து மறைத்திருந்த மறுபுறத்துக்கு அவனை அழைத்துச் சென்றான் குமரப்பன். கட்டிலில் படுத்திருந்த மோகினி நல்ல வேளையாக அப்போது விழித்துக் கொண்டுதான் இருந்தாள். அவளுடைய நெற்றியிலும், மோவாயிலுமாக இரண்டு மூன்று பிளாஸ்திரி ஒட்டுக்கள் போட்டிருந்தன. அவளுடைய அழகிய கண்கள் இரண்டும் அழுது அழுது இரத்தம் கன்றிச் சிவந்திருந்தன. முகம் கறுத்து வாடியிருந்தது. திடீரென்று தன் கட்டிலருகே சத்தியமூர்த்தியைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. சத்தியமூர்த்தியைக் கட்டிலருகே இருந்த ஸ்டூலில் உட்காரச் சொல்லிக் கையைக் காண்பித்து விட்டுப் படுக்கையில் நிமிர்ந்து தலையணைகளில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்தாள் அவள். தேனிற் செய்தது போன்ற அவள் குரல் இன்று துயரத்தினால் உடைந்து நலிந்து போயிருந்தது.

''நீங்கள் வந்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் உங்களுக்கு இதெல்லாம் தெரியுமோ, தெரியாதோ என்று எண்ணி என் ஆசையை நானே அடக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று. என் தவிப்பு வீண் போகவில்லை. நான் எதிர்பார்த்தபடி தெய்வமே உங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்து விட்டது....'' மேலே பேச முடியாமல் அழுகை பொங்கியெழுந்து அவள் குரலை அடக்கியது.

''தெரியாமல் போகுமா? செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்தேன்... உடனே நானும், இவனும் புறப்பட்டு வந்தோம். தெய்வமே என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்திருப்பதாகச் சற்று முன் நீ கூறினாயே; அந்தத் தெய்வம் இவன்தான்!'' என்று சொல்லிக் குமரப்பன் பக்கமாகக் கையைக் காண்பித்தான் சத்தியமூர்த்தி. ''ஒருவருக்கொருவர் புகழ்ந்து கொள்வதற்கும் நன்றி சொல்லிக் கொள்ளுவதற்கும் இதுவா நேரம்? ஆறுதலாக நாலு வார்த்தை பேசிக் கொண்டிரு. நான் வெளியில் போய் இருக்கிறேன். ஜமீன்தாரும், கண்ணாயிரமும் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்'' என்று சொல்லி விட்டுக் குமரப்பன் அங்கிருந்து நகர்ந்தான். அவன் வெளியேறிய சிறிது நேரத்தில் நர்ஸ் கட்டிலருகே வந்து, ''படுத்துக் கொண்டே பேசுங்கள். வீணாக 'ஸ்டிரெயின்' பண்ணிக் கொள்ளக் கூடாது....'' என்று மோகினியை எச்சரித்து விட்டுப் போனாள்.

''இந்த நர்ஸ் ரொம்ப நல்லவள்! இன்று அல்லது நாளைக்கு இவளை விட்டு உங்களுக்கு ஒரு கடிதம் எழுதச் சொல்லலாம் என்றிருந்தேன். நானே எழுத முடியாதபடி கையிலும், தோள்பட்டையிலும் கட்டுப் போட்டுத் தொலைத்திருக்கிறார்கள். இவளிடம் சொல்லி எழுதச் செய்யலாமென்றால், ஒரு நிமிடம் கூடத் தனியாக இருக்க முடியாதபடி பாழாய்ப் போன ஜமீன்தாரும், கண்ணாயிரமும் எனக்கு உபசாரம் செய்கிறேன் பேர்வழியே என்று மாற்றி மாற்றிக் காவல் இருக்கிறார்கள். நல்ல வேளையாக என் வேதனையும், தவிப்பும் பொறுக்க முடியாமல் தெய்வமே கண் திறந்தது போல் நீங்களே தேடி வந்து விட்டீர்கள். இனி மேல்தான் என் வாழ்க்கையில் வேதனைகளும், சோதனைகளும் அதிகம். இந்தக் கார் விபத்தில் அம்மாவும் டிரைவரும் செத்துப் போன

தற்குப் பதில் நான் செத்தொழிந்திருந்தால் எவ்வளவோ நிம்மதியாயிருக்கும். இந்த உலகத்தில் யாருமே புரிந்து கொள்ளாத அநாதைப் பெண்ணுக உயிர் வாழ்வதைக் காட்டிலும் சாவது எவ்வளவோ மேல். நான் தீர்மானமாகச் செத்துப் போய் விட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு சாக முயன்ற ஒரே ஒரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் குறுக்கிட்டுக் காப்பாற்றி விட்டீர்கள். அப்படி நீங்கள் என்னைக் கைப் பிடித்துக் காப்பாற்றிய முதல் விநாடியிலிருந்து அல்லது இதை அந்தரங்கமாக நான் எப்படி நினைக்கிறேனே அப்படியேசொல்வதாக இருந்தால் நீங்கள் என்னைக் காப்பாற்றிக் கைப்பிடித்த முதல் விநாடியிலிருந்து நான் உங்களுக்கு மானசீகமாக வாழ்க்கைப் பட்டு விட்டேன். உங்களை நினைப்பதற்காக, உங்களை நினைந்துத் தவிப்பதற்காக, உங்களுக்காகத் தவித்து உருகுவதற்காக — நான் இன்னும் வாழ வேண்டும் போலவும் ஆசையாயிருக்கிறது. நீங்கள் நினைப்பதற்கு ஒரே ஒரு பவித்திரமான ஞாபகமாகச் சாக வேண்டும் போலவும் ஆசையா யிருக்கிறது. நான் வாழ்ந்து உங்களை நினைக்கவேண்டும் அல்லது நீங்கள் வாழ்ந்து நினைக்க ஒரு ஞாபகமாகி நானே போய்விட வேண்டும். 'மானிடவர்க்கு என்று பேச்சுப்படின் வாழகில்லேன்' என்று ஆண்டாளாக அரிதாரம் பூசிக் கொண்டு நாட்டிய மேடையில் கதறிக் கண்ணீர் மல்கி நான் ஆடும் ஒவ்வொரு முறையும் எந்தத் தெய்வத்தை நினைத்துக் கொண்டு ஆடுகிறேனே, அந்தத் தெய்வம் நீங்கள்தான்! என்னைச் சுற்றிலுமோ, என் வாழ்க்கையைச் சுற்றிலுமோ, உங்களைச் சந்திப்பதற்கு முன் இவ்வளவு சத்தியமான எந்த மனிதரையும் நான் சந்தித்ததில்லை. ஆண்டாள் அரங்கநாதருக்குச் சூடிக் கொடுத்தது போல நான் உங்களுக்குச் சூடிக் கொடுத்து வாழ்க்கைப் பட்டிருக்கிறேன். அன்று ஒரு நாள் எங்கள் வீட்டு முருகன் படத்துக்கு நான் மாலை சூட்டிய போது உங்களை நினைத்துக் கொண்டு உங்களுக்கே சூட்டுவதாகப் பாவித்துக் கொண்டு சூட்டினேன். நான் நினைத்ததும் பாவித்ததும் வீண் போகாமல்அந்த மாலை உங்கள் கழுத்திலேயே நழுவி விழுந்தது. வெள்ளைக்காரச் சாஸ்திரம்—மோதிரம் மாற்றிக் கொண்டாலே திருமணம் முடிந்து விடுமாமே? நாம் வெள்ளைக்காரர்களில்லையானாலும் எங்கள் வீட்டில் அந்த முருகன் படத்தைத் தெய்வ சாட்சியாகக் கொண்டு நம்முடைய இருமணம் நிகழ்ந்து விட்ட




தாகவே நான் நினைக்கிறேன்........"

மோகினி தன் பேச்சை முடிக்காமல் விசும்பி விசும்பி அழலானுள். கண் கலங்கி வீற்றிருந்த சத்தியமூர்த்தி அவளுடைய தலையைக் கோதி விட்டுக் கொண்டே கனிவுடன் கூறினன்:

"நானும் அதை மறுக்க வில்லை மோகினி! இந்து தர்மப்படி ஒரு பெண் தனக்கு நினைவு தெரிந்தபின் எந்த ஆண் மகனைச் சுயமாகவும் இதயபூர்வமாகவும் வரித்துக் கொண்டு அவனுடைய க்ஷேமலாபங்களுக்காக இடைவிடாமல் நோன்பும் தவமும் செய்கிருளோ, அந்த ஆண் மகனுக்கு அவள் மனைவியாகிருள். பெண் மெய்யாக உறையும் மனை கணவனுடைய வீடு மட்டுமன்று. இந்தத் தேசத்துப் பெண்ணின் வாழ்க்கை இலட்சியம் கணவனுடைய இதயத்தில் நித்திய சுமங்கலியாகத் தங்கி வசிப்பது தான்."

"நான் அப்படி உங்கள் இதயமாகிய மனையில் என்றும் நித்தியசுமங்கலியாகத் தங்கி வசிக்க முடியுமா அன்பரே?"


இந்தக் கேள்வியை அவனிடம் கேட்கும் போது அவளுக்கு மெய் சிலிர்த்தது. விழிகளில் நீர் பெருக எதிரே மிக அருகில் வீற்றிருக்கும் அவனுடைய கம்பீரமான முகத்திலும் கண்களிலும் தன் வாழ்வின் நம்பிக்கைகளைத் தேடுகிறவளைப் போல் ஏறிட்டுப் பார்த்தாள் மோகினி. (தொடரும்)



மைத்தான் ஏவி, பாக்ரா டிவி 900 மிமீ, 1200 மிமீ, 1400 மிமீ, 1500 மிமீ.

AEI

ஸீலிங்
மற்றும்
டேபிள்
விசிறிகள்



டிலக்ஸ் 400 மிமீ மேஜை மாடல்

- சுழட்டக்கூடிய விலக்கூண்டு
- இஷ்டமான கோணத்தில் பொருத்தி, இருபுறமும் திரும்பி வீசக்கூடியது.
- மின்சாரியான வடிவமும் சம நிலையு முள்ள அலுமினியம் பிளேடுகள்
- மூன்றுவகை வேகம்
- ஒரு சில நிறங்களில் எனாமல் பூச்சு.

தேர்ந்தெடுத்த பாகங்களைக் கொண்டு, துல்லியமான திறமையுடன் தயாராகும் ஏஇஐ ஸீலிங் மற்றும் டேபிள்-மின்சாரவிசிறிகளுக்கு அனுபவமும், தொழில் நுணுக்க அறிவும்தான் ஆதார மானவை. அதி விசை ஓட்டத்திற்கும், குறைந்த மின்சார உபயோகத்திற்கும் — ஏஇஐ என்று குறிப்பிட்டுக் கேட்கவும்.


அசோஸியேடட் எலக்டிரிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரை. லிட்.
கிரௌன் ஹவுஸ், 13, ராஜேந்திரநாத் முகர்ஜி ரோடு, கல்கத்தா-1.
கிளைகள்: பம்பாய் - புதுடில்லி - மதராஸ் - பெங்களூர் - கோயமுத்தூர் - காகபுரி.

AEI-47A TAM




இன்னும் ஒரு மாதம் சென்றால் கோவிந்த ராவுக்கு எழுபத்து நான்கு முடிந்து எழுபத்தைந்தாகிவிடும். இவ்வளவு ஆண்டுகளில் அப்படி ஒரு பளபளப்பான, பூவேலைகள் நிறைந்த ஒரு விநோதப் பொருளைப் பார்த்ததே யில்லை. அலமாரியின் மேல் தட்டிலிருந்து எதையோ எடுக்கப் போனார். பொத்தென்று ஒரு தகர டின் கீழே விழுந்தது. பல வண்ணங்களில் அதன் நிறம் கண்ணைப் பறித்தது. குனிந்து அதை எடுத்துச் சிறிதே திறந்து பார்த்தார் அவர். 'குப்' என்று ஒருவித வாடை மேலே எழும்பி அவரையே கீழே தள்ள முயன்றது. அப்படி ஒரு வாசனையை அல்லது அவர் கருத்தில் வாடையை அவர் சுவாசித்ததேயில்லை. சந்தேகமில்லை. முகர்ந்து பார்த்துக் கொண்டு விட்டார். முகப் பவுடர் டின்தான் அது.

''இது ஏது?'' அடுத்தபடியாக அவருடைய மனத்தைத் துளைத்தது ஒரு கேள்வி. தன்னை விட இரண்டே வயது குறைவான பாமாவின் காரியமாக இருக்கலாமோ? எதற்கும் கேட்டுவிடலாம் என்ற தீர்மானத்துக்கு வந்த கோவிந்தராவ்,



புகைப்படம்

கதிர்



''பாமா! ஒரு நிமிஷம் இங்கே வந்துவிட்டுப் போ!'' என்றார். பூஜை அறையில் கிருஷ்ணர் படத்துக்கு எதிரில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்த பாமா அம்மாள் பாதியில் பாட்டை நிறுத்தி விட்டு வந்தாள்.

''ஏது இந்த முகப் பவுடர் டின்? நீ இந்த வயதில்....!'' கோவிந்த ராவ் முடிக்கவில்லை.

''இந்த வயதில் எனக்கு வேண்டியதுதான்! தலை வளவள வென்று வெள்ளிக் கவசம் பூண்டிருக்கிறது. முகமும் கொஞ்சம் வெள்ளை பூசிக் கொண்டது போல் இருக்கட்டுமே என்று வாங்கிக் கொண்டேன்!'' பாமா அம்மாள் எப்போதும் இடக்காகவே பதில் சொல்வது வழக்கம். கோவிந்தராவுக்கும் தெரியாததல்ல. இருந்தும், ஏதாவது வேறு காரணம் இருக்கலாம் என்பதற்காகவே அவளைக் கேட்டு வைத்தார்.

''பின்னே எப்படி இங்கே வந்தது? ஆகாசத்திலிருந்து வந்து குதித்ததா? போயும் போயும் இதுதானா வந்து குதித்திருக்க வேண்டும்.''

''ஒன்றும் குதித்துவிட வில்லை. எங்கே, அதை இப்படிக் கொடுங்கள்!'' என்று கூறி, கோவிந்தராவ் கையிலிருந்து 'மனோகர் முகப் பவுடர்' டின்னைப் பாமா அம்மாள் வாங்கிக்கொண்டாள். தெருப் பக்கம் கொண்டு போய் வெளிச்சத்தில் அதை நன்றாக உற்றுப் பார்த்து விட்டுத் திரும்பினாள், வெள்ளெழுத்துப் பார்வையின் விளைவாக.

''பார்த்தாகி விட்டதா? கொஞ்சம் திறந்து வாசனையையும் பார்த்து விடு. நான் அதன் மூடியைத் திறந்தேன். 'குபீர்' என்று தலை சுற்றுகிற ஒரு வாடை! நல்லவேளை, இதற்கு முகப் பவுடர் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். மூக்குப் பவுடராக இருந்தால் போட்டுக் கொள்கிறவர்கள் எல்லாரும் இதன் வாடை தாளாமல் விழ வேண்டியதுதான்!''

இதுவரை யோசனை செய்து கொண்டிருந்த பாமா, ''தெரிகிறது! இது ஏது என்று!'' என்று ஆரம்பித்து, கல்கத்தாவிலிருந்து வந்து தங்கி விட்டு இரண்டு தினங்களுக்கு முன்னால் திரும்பச் சென்ற அவளுடைய உறவினர்களைப் பற்றிக் கணவனுக்கு நினைவூட்டினாள்.



''ஏன் அப்பா, உனக்குத்தான் ஒரு அநுபவமும் இல்லை என்கிறாய்! ஆனால் சம்பளம் மட்டும் அதிகமாகக் கேட்கிறாயே!''

''வேலை தெரிந்தவனுக்குக் கஷ்டமில்லை. வேலை தெரியாதவனுக்குத்தானே கஷ்டம்? கஷ்டத்துக்குத் தகுந்த கூலி வேண்டாமா?''

''காசைப் பிடித்த கேடு!'' என்று வருத்தம் தெரிவித்தார் கோவிந்தராவ்.

''கல்கத்தாவில் கிடைக்காது என்று இங்கே சென்னையில் நல்ல பவுடர் டின் வாங்கி வந்திருப்பதாகச் சொன்னானே, ரயிலுக்குப் போகும் அவசரத்தில் இதை விட்டு விட்டுப் போய் விட்டான்.''

''உனக்கு முகத்தில் பூசிக்கொள்ள இந்தப் பவுடர் டின்! என் வழுக்கைத் தலைக்கு ஒரு ஜாப்பு சீப்பும் விட்டுப் போயிருக்கிறார்கள்! சீப்பு ஒன்றும் கீழே கிடந்தது. மேஜைக்கும் சுவருக்கும் இடையில்....!'' என்றார், கோவிந்தராவ்.

''இந்தப் பவுடர் டின்னை அப்படியே வைத்திருங்கள். பக்கத்து வீட்டுப் பெண்கள் யாராவது வந்தால் அவர்களுக்குக் கொடுத்து விடுவோம்'' என்றாள் பாமா அம்மாள்.

''ஜாப்புச் சீப்புக்கு யாராவது ஒரு பையனைத் தேடிப் பாரு!'' என்று கூறாமல் இல்லை கோவிந்த ராவ்.

* * *

இரண்டு நாட்கள் சென்றன. ''பாமா! எங்கே, அந்தப் பவுடர் டின்? கொண்டா, இப்படி! அது இருக்கிறதா, யாருக்காவது கொடுத்து விட்டாயா? எடு, எடு!'' என்று பரபரப்புடன் துள்ளினார் கோவிந்தராவ்.

''உங்களுக்கு இப்போது எதற்கு அது? இன்னும் ஒரு பத்து வயது போனால் தரலாமென்று பார்த்தேன்!''

''இப்போது நையாண்டிக்கெல்லாம் நேரமில்லை. சீக்கிரம் அதை எடு!''

ஒரு பெட்டியைத் திறந்து அதில் பத்திரப்படுத்தி வைத்திருந்த பவுடர் டின்னை எடுத்துக் கொடுத்தாள் பாமா அம்மாள். கொடுத்து விட்டு, ''எதற்கு இவ்வளவு அவசரம் இந்த டின்னுக்கு?'' என்பதைப் பார்க்க விரும்பி, அங்கேயே நின்று கொண்டாள்.

பவுடர் டின்னை வாங்கிக் கொண்ட கோவிந்தராவ் தமது கோட்டுப் பையில் மடித்து வைத்திருந்த அன்றையத் தினப் பத்திரிகை ஒன்றை வெளியே எடுத்து, ''இதில் என்ன போட்டிருக்கிறது. படிக்கிறேன் கேள், பாமா! நமக்கு அதிர்ஷ்டம் ரூபாய் இரண்டாயிரம்!...... ஆமாம்......!'' என்றார்.

''யாருக்கு நமக்கா?'' வியப்புடன் எழுந்தது கேள்வி, பாமாவிடமிருந்து.

''நமக்கு என்றுதான் கூற வேண்டும். ஆனால் அதிர்ஷ்டமும் நமக்கு அமைந்து விட்டால். கேளு, படிக்கிறேன். ஒரு விளம்பரம் : ''மனோகர் பேஸ் பவுடர்'' அளிக்கும் முதல் பரிசு ரூ. 2000. அல்லது கன்யாகுமரி முதல் காஷ்மீர் வரை விமானத்தில் சுற்றுப் பிரயாணமும் தவிர ரொக்கம் ரூ. 1000. இரண்டாவது பரிசு ரூ. 1000 அல்லது ஒரு 'பிரிஜிடேர்' பெட்டி. மூன்றாவது பரிசு ரூ. 500 அல்லது ஒரு ரேடியோ! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான். மனோகர் டின் மேல் மூடியைப் பத்திரமாகக் கழற்றி எடுத்துக் கொண்டு பின்வரும் கேள்விக்குப் பொருத்தமான விடையை ஒரே வார்த்தையில் பதில் எழுதி அதை நிர்வாக மேல் மூடியுடன் சேர்த்து அனுப்பி வைத்து விட வேண்டும். பரிசு விவரத்துடன், பரிசு பெற்றவர்களின் புகைப்படத்துடன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். கேள்வி: மனோகர் முகப் பவுடர், இளமையின் வனப்பைத் தூண்டக் காரணமாக இருப்பது அதன் மணமா, அல்லது அதன் குணமா?''

''எப்படி?'' என்று கேட்டார் கோவிந்தராவ்.

'''பிரிஜிடேர்' என்பது என்ன? அது நமக்கு விழுந்து விடப் போகிறது!'' என்று பயந்தாள் பாமா அம்மாள்.

''அது ஒரு பெட்டி. இந்தக் காய்கறி, பழம் இவை வெல்லாம் கெட்டுப் போகாமல் அதற்குள் வைத்து விட்டால், நான்கு நாளானாலும் அப்படியே இருக்கும்.''

''சரிதான்! அதுவா? பார்த்திருக்கிறேன் எக்ஸிபிஷனிலே. நமக்கு அது வேண்டியதேயில்லை. காய்கறி பழங்கள் கிடைக்காமலா போகிறது. சென்னையில் இடறி விழுந்தால் அந்தக் கடைதான். அவ்வப்போது புதிது புதிதாகத் தெருவிலேயே கொண்டு வந்து காய்கறி விற்கிறான். ரேடியோவும் நமக்குத் தேவையில்லை. பக்கத்து வீட்டு ரேடியோதான் ஓயாமல் அலறிக் கொண்டிருக்கிறதே!''

''அப்படியானால் நான் முதல் பரிசுக்கே முயற்சி செய்கிறேன். உன் பெயராலேயே போட்டு விடுகிறேன். நிம்மதியாகத் தில்லி, காஷ்மீர் எல்லாம் விமானத்தில் போய்ப் பார்த்து விட்டு வா!''

''ஏன்? நான் போகப் போவதில்லை. நீங்கள்தானே கூறினீர்கள், இப்போதெல்லாம் விமான விபத்து கொஞ்சம் அதிகமாயிருக்கிறதென்று. நானும் போகப் போவதில்லை; நீங்களும் அதில் போக வேண்டாம்!''

''விமானத்தில் போய்த்தான் ஆகவேண்டும் என்று கட்டாயமில்லை. பவுடர் கம்பெனிக்காரனே, விமான விபத்துக்களை மனத்தில் வைத்துக் கொண்டு, மிகவும் புத்திசாலித்தனமாக, விரும்பினால் விமானத்திலும் போய்

போர்ஹான்ஸ் பற்பசையின் மூலம் ஈறு உபாதைகள் பற்சிதைவு போன்ற கோளாறுகளிலிருந்து வியக்கத்தக்க பலன்கள் கிடைக்கும்



தாமாகவே விரும்பி எழுதப்பட்ட கடிதங்கள் *
இவற்றை நிரூபிக்கின்றன.

* இத் நற்சாட்சிக் கடிதங்களை ஜாப்ரே மானேர்ஸ் & கோ. லிட்., கம்பெனியாரின் எந்த ஆபீஸிலும் காணலாம்.

எனக்கு விபரம் தெரிந்தகாலிலிருந்தே போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகித்து வருகிறேன். உண்மையாகவே, இதன் சுத்பலனே - மன்னிக்கவும், இதன் மிகச் சிறந்த தரத்தைப்பற்றி இதைத் தவறாமல் உபயோகித்து வந்த என் பெற்றோர்களிடமிருந்து அறிந்துகொண்டேன். என்னுடைய பற்களின் ஒளியைக் காண்பிப்பதற்குப் பெருமைப்படுகிறேன். ஏனெனில், கிரமமாகவும், வழக்கமாகவும், தொடர்ந்தும் போர்ஹான்ஸ் உபயோகிப்பதால்தான் அவை அவ்வாறிருக்கின்றன என்று நிச்சயமாகக் கூறுவேன்.

ஜே. எம். கல்கத்தா.

உங்களுடைய போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகித்ததால் எனக்கிருந்த கடுமையான ஈறு உபாதையிலிருந்து ஏற்பட்ட குணத்தைப்பற்றி உங்களுக்குத் தெரிவிப்பதை என் கடமையெனக் கருதுகிறேன். இப்பொழுது நான் தங்களுடைய போர்ஹான்ஸைத் தவறாமல் உபயோகித்து வருகிறேன். ஈறுகளில் வேதனை, வீக்கமடைந்த ஈறுப் புண்கள், வாய்நாற்றம் முதலியவைகளிலிருந்து முன்பு மிகவும் அவதிப்பட்டது போலில்லாமல் நல்ல குணமாகியிருக்கிறேன். ஆண்டவன் போர்ஹான்ஸை என்றும் ஆசீர்வதிப்பாராக எனக் கூற விரும்புகிறேன்.

ஹெச். ஆர். எஸ். பம்பாய்.

பலரகமான பற்பசைகளை உபயோகித்த பின்னர் எனது 50-வது வயதில் போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகிக்கத் தொடங்கினேன். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அதை உபயோகித்து நல்ல பலனடைந்துள்ளேன். ஒருவேளை, என் 72-வது வயதில் என்னுடைய பற்கள் இயற்கையானபடி வலுவாகவும், சீராகவும் இருப்பதற்குக் காரணம் போர்ஹான்ஸின் மாய வித்தையாகவும் இருக்கலாம்.

ஜி. என். மதுரை.

போர்ஹான்ஸ்

ஒரு பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை.



இதற்கு உகந்த, சிறந்த சேர்க்கைக்கு,

போர்ஹான்ஸ்
டபிள் ஆக்ஷன்
டூத்பிரஷ்
உபயோகியுங்கள்.



T-33 A. TAM

வரலாம்? விரும்ப வில்லையானால் ரொக்க மாகவே இரண்டாயிரம் ரூபாயை முதல் பரிசாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவித்திருக்கிறான். ஆகையால், முதலில் ரொக்கம் பெற்றுக் கொள்வதற்கு வழியைப் பார்ப்போம். பணம் வந்து விட்டால், முதல் பரிசு கிடைத்து விட்டால், ரயில் வண்டியில் நெடுகிலும் இரண்டு பேருமாக யாத்திரை போய் விட்டு வருவோம். காசி, கயா, ரிஷிகேசம் இப்படி யெல்லாம் போய் விட்டு வருவோம். கவலைப்படாதே!'' என்றார் கோவிந்தராவ்.

''சரி. முதலில் பரிசு பெறுகிற வழியைப் பாருங்கள், போங்கள்!'' என்று உற்சாக மூட்டினுள் பாமா அம்மாள்.

இளமையின் வனப்பைத் தூண்டக் காரண மாக இருப்பது அதன் மணமா அல்லது குணமா? — இந்தக் கேள்வியைக் கோவிந்த ராவ் நூற்றுக்கணக்கான தடவை தமக்குத் தாமே கேட்டுக் கொண்டு விடை தேடிப் பார்த்தார். ''இளமையின் வனப்பைத் தூண்டக் காரணமாக இருப்பது எப்படி மண மாக இருக்க முடியும்? இருக்கவே இருக்காது. மணம் சாம்பிராணிப் புகைக்குக் கூடத்தான் உண்டு. ஓர் ஊதுவத்தியை ஏற்றி வைத்தால் அதிலிருந்து கூடத்தான் மணம் வீசுகிறது. அது எப்படி வனப்பைத் தூண்டும்? எனவே, குணமாகத்தான் இருக்க வேண்டும். இங்கே யும் ஒரு சந்தேகம்..... குணம் எதற்குத்தான் கிடையாது? தெருப் புழுதிக்குக் கூட ஏதோ ஒருவித குணம் இருக்கத்தான் இருக்கிறது? அது இந்தப் பவுடருக்கும் இருப்பதில் ஓர் ஆச்சரியமும் இல்லை. மணமும் குணமும் இல்லையானால் இந்தப் பவுடர் பற்பொடிக்குக் கூடப் பயன்படப்போவதில்லை. ஆகையால்... ''ஆகையால் என்ன?''—ஒரு முடிவும் தோன்ற வில்லை கோவிந்தராவுக்கு.


தமக்குத் தெரியாத விஷயங்களைப் பிற ரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஒருவித தவறும் கிடையாது என்பது அவருக்குத் தெரி யும். ஆனால் இந்தப் பவுடர் விஷயத்தைப் பற்றி யாரிடமாவது கேட்டால் அவர்கள் நகைக்க மாட்டார்களா? ''உங்களுக்கு இந் தப் பவுடர், சென்டு இவை பற்றி யெல் லாம் வீண் கவலை ஏன்?'' என்று கேட்க மாட் டார்களா? தலை வழுக்கையாகி, நரையேறிப் பழுத்த நிலைமையில் முகப் பவுடரைப் பற்றி ஒன்றிரண்டு சிறு சந்தேகங்களைக் கேட்க விரும் பினால்கூடக் காதில் போட்டுக் கொள்ள மறுக் கும் உலகம்!

''கடைசியில் நான் சொன்னதுதான் பரிசு அடிக்கப் போகிறது. குணம் என்றே முடிவு பண்ணி நாலு வார்த்தை எழுதிப்போட்டு விடுங்கள். நம்முடைய நல்ல குணத்துக்கு ஒருநாளும் பரிசு இல்லாமல் போய்விடாது!'' என்று கூறினுள் பாமா அம்மாள்.

இதற்கு மேல் கோவிந்தராவ் தாமதிக்க வில்லை. இளமையின் வனப்பைத் தூண்டுவது குணம்தான் என்று திட்டம் செய்து அதற் கான காரணத்தையும் நான்கு வார்த்தை

மன்னர் மகேந்திரா

இன்றைக்கு உலகிலுள்ள ஒரே ஹிந்து அரசரான மகேந்திரா தமது வாழ் நாளில் முப்பது வருஷங்களை ராணுக்களின் ஆட்சியின் கீழ் அரண்மனைக்குள்ளேயே கைதி போல் அடைந்து கிடந்து கழித்தவர். ஆகவே மக்கள் சுதந்திரத்திலும் ஜன நாயகத்திலும் அவருக்கு அசைக்க முடியாத பற்றுதல் இருப்பதில் ஆச்சரியமில்லை. அதைக் காட்டிலும் அதிகமாக அவர் தமது மனைவியிடம் பற்றுதல் வைத்திருந்தார்!



ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தளித்த ராஜ்யலக்ஷ்மி துரதிர்ஷ்டவசமாக இவரை விட்டுப் பிரிந்து இறைவனின் திருவடிகளைச் சேர்ந்து விட்டார். அருந்துயரில் ஆழ்ந்த மகேந்திரா தம் மனைவியின் நினைவாகப் பல பாடல்களை இயற்றினர். ராஜ்ய லக்ஷ்மியின் தங்கை ரத்னவை (படத்திலுள்ளவர்) மறு மணம் புரிந்துகொண்டு ஆறுதல் பெற்றுர்.

சென்ற மாத இறுதியில் நம் நாட்டுக்கு வந்து சேர்ந்த மகேந்திரா காஷ்மீரத்தில் ஓய் வெடுத்துக் கொள்ளச் சென்று முன்னர் பாரதத் தலைவர்கள் பலருடன் வடக்கெல்லை யில் சீனப்படை குவிப்பு பற்றி முக்கியமான பேச்சு வார்த்தைகள் நடத்தினர். இதன் பயனுக நமது ராஷ்டிரபதி கூறியது போல் இரு சாராரும் நாரதர் வேலைகளில் ஈடுபடுவோரின் செயல்களுக்குச் செவிமடுக்காமல் நட்புறவை வளர்த்துக் கொள்வது சாத்தியமாக வேண்டும். இந்திய ராணுவ பொறி இயல் நிபுணர்களின் உதவியுடன் இரு நாடுகளையும் இணைக்கும் வகையில் அமைக்கப் பட்டுள்ளதும் உலகிலேயே மிக அழகிய மலைப் பாதையுமான திரிபுவன ராஜபாட்டை யைப் போல் இந்திய—நேபாள நட்புறவும் நிலையானதாக இருக்க வேண்டும்.



"ஏன் ஐயா, நீர் அந்தச் செட்டியாருக்குக் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுத்துத் தொலைக்கிறது தானே?"

"உமக்கு ஏன் அவ்வளவு அக்கறை?"

"உம்மிடம் வரும்போதெல்லாம் அவர் என்னிடமும் வந்து நான் அவருக்குக் கொடுக்க வேண்டிய கடனைக் கேட்டுக் கழுத்தை அறுக்கிறார்!"

களில் எழுதி முடித்தார். பாமா அம்மாள் பிடிவாதமாக, இந்தப் பணம் காசு விஷயங்களில் தன் பெயரைப் போட வேண்டாம் என்று சொல்லி, கோவிந்தராவின் பெயரையே போட்டுவிடும்படி தெரிவித்து விட்டாள்.

விடையைப் பூர்த்தி செய்து உறையில் போடும் போது ஏதோ ஓர் எண்ணம் பளிச்சிட்டு, சுவரில் மாட்டியிருந்த தம் புகைப்படத்தின் மீது பார்வையைத் திருப்பினார். அந்தப் படம் சமீபத்தில் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் அவருடைய மருமகன் வந்த போது தன்னுடைய சொந்தக் காமிராவினாலேயே படம் பிடித்துக் கொடுத்து விட்டுப் போனதுதான். கண்ணாடியையும், சட்டங்களையும் ஒரு நொடியில் கழற்றிவிட்டுப் படத்தை மட்டும் வெளியே எடுத்தார் கோவிந்தராவ். படத்தின் அடியில் 'கோவிந்தராவ்' என்று பெயரை எழுதி விடைத்தாளுடன் உறையில் போட்டு ஒட்டி, மவுண்ட் ரோடிலிருந்த அந்தப் பவுடர் கம்பெனியில் நேரிலேயே கொடுத்து விட்டு வந்தார். "பரிசு பெற்றவரின் விலாசம் புகைப்படத்துடன் வெளியிடப்படும்" என்று விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்த வாசகங்களை அவர் மறக்கவில்லை! அன்றுமுதல் ஒரு மாதம் வரை, 'ஸார்! போஸ்ட்!' என்று தபால்காரரின் குரலை எதிர்பார்ப்பதில் அவர் பொழுது போய்க் கொண்டிருந்தது. இந்தப் பொழுதுபோக்குக்கும் இடமில்லாமல் நடந்தது ஒரு சம்பவம்.

வாசலில் பெரிதாக ஒரு கார் வந்து நின்று, அதன் கதவுகள் 'படார்' என்று அடித்துக் கொள்ளும் சத்தம் கேட்டு, கோவிந்தராவ் வெளியே எட்டிப் பார்த்தார். மேனாட்டு முறையில் உடையணிந்த இருவர், வாசற் படியருகே தயங்கி நின்று கொண்டிருந்தனர். கோவிந்தராவைப் பார்த்ததும், அவர்களில் ஒருவர், "மன்னிக்க வேண்டும், கோவிந்தராவ்...... என்று.... இங்கே....!" என்றார்.

"இவரேதான். போட்டோவில் உள்ளபடியே இருக்கிறார்!" என்றார் அவருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த மற்றொருவர். அவருடைய கையில் நீண்ட, பெரிய காகித உறை ஒன்றும் காணப்பட்டது.

"நான்தான்.... வாருங்கள், உள்ளே!" என்று அழைத்தார் கோவிந்தராவ்.

"நான்தான்... வேறொன்றுமில்லை..... மனோகர் பவுடர் கம்பெனியின் மானேஜர்.... இவர் என் காரியதரிசி....!" என்று வந்தவர்களில் ஒருவர் மற்றொருவரை அறிமுகம் செய்து வைத்துத் தம்மையும் அறிமுகப் படுத்திக் கொண்டார்.

"என்ன! மனோகர் பவுடர் கம்பெனி.....! பாமா! பாமா! சீக்கிரம் வா! நல்ல சேதி!" என்று முழங்கினார் கோவிந்தராவ்.

"பொறுங்கள். மன்னிக்கணும்!"—பவுடர் கம்பெனியின் மானேஜருக்கு ஒன்றும் ஓடவில்லை; எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது என்று தத்தளித்தார்.

"ஏன்... மன்னிப்பானேன்....!" என்று வினவினார் கோவிந்தராவ், ஆச்சரியம் மேலிட்டவாறு.

"வேறொன்றுமில்லை. உங்களுடைய விடையோடு புகைப்படத்தையும் பார்த்தோம். உங்களுடைய விடையை ஒரு வேளை இந்தப் போட்டிக்கு நாங்கள் நியமிக்கும் நீதிபதிகள் தேர்ந்தெடுத்து விட்டால், எங்கள் நிலைமை மிகவும் ஆபத்தாகப் போய் விடும். உங்களுடைய புகைப்படத்தைப் பிரசுரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அப்போது எங்கள் மனோகர் பவுடரின் மதிப்பு எப்படி யாகும் என்பதை நீங்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, தயவுசெய்து நீங்கள் எழுதிய விடையையும் போட்டோவையும் திரும்பப் பெற்றுக் கொண்டு எங்களைக் கொஞ்சம் விட்டு விட வேண்டும். கம்பெனியை நாங்கள் மூடக் கூடாது, பாருங்கள்!" என்று பணிந்து கொண்டார்.

"அதெப்படி..... நான் திரும்பப் பெற்றுக் கொள்வது?" — என்று கோவிந்தராவ் சற்றுக் கடுமையாகவே கேட்டார்.

சமாதானப்படுத்தும் குரலில் மானேஜர் "இதனால் நீங்களும் நஷ்டப்படப் போவதில்லை. ஏதோ இதை வைத்துக் கொண்டு எங்களை அனுப்பி வையுங்கள்!" என்று சொல்லி, புகைப்பட உறை மீது நூறு ரூபாய் நோட்டு ஒன்றை வைத்து அவரிடம் நீட்டினார்.

"இதை நீங்கள்.... மிஸ்டர் கோவிந்தராவ், வேறு யாரிடமும் சொல்லவேண்டாம்' என்றார் பின்னால் நின்று கொண்டிருந்த காரியதரிசி. சிறிது சிந்திப்பது போல் நின்று விட்டுக் கோவிந்தராவ், ரூபாய் நோட்டுடன் உறையை வாங்கிக் கொண்டு, பாமா அம்மாவின் பக்கம் திரும்பி, "நல்ல குணம்.... இவர்களுக்கு!" என்று கூறினார்.

அத்தியாயம் ஐந்து

பகை வித்து

இன்பப் புழுக்கமிட்டுச் சோர்ந்திருந்த உடலும் உள்ளமும் தண்மைக் குளிரேறி, விறு பெற நீராடி எழுந்த பரமேசுவர வர்மன் அந்தச் சிற்றாற்றின் கரை மேட்டில் அநங்க சொரூபனாக வந்து கொண்டிருந்தான். அவனைப் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பது போல் அப்போதுதான் அடிவானச் செஞ் சதுக்கத்திலிருந்து பொன்னொளிக் குழம்பு பொங்கும் புதுப் பாளையாக ஆரோகணமாகியது காலை இளஞ் சூரியன். அதன் மாசுபடாக் கனக ஒளி படர்ந்த அந்தப் பிரதேசம் ஒரு கந்தர்வ காவியத்தை அரங்கேற்றினாற்போல் காட்சியளிக்க ஆரம்பித்தது.

அந்நிய ஆதிக்கத்தை அழித்தொழிக்க வாளேந்திப் போர்க்களம் புகுந்து வீரம் விளைத்து வெற்றியை அறுவடையாக்கித் தந்துவிட்டுத் திரும்பியிருந்த உழவர் பெருமக்கள் இப்போது உள்நாட்டில் உலவிவரும் வற்கட அரக்கனை விரட்டியடிக்கும் பொருட்டுக் கலப்பையும் கையுமாகக் காளை மாடுகளை ஓட்டிக்கொண்டு தத்தமது நிலங்களை நோக்கி உற்சாகத்துடன் சென்று கொண்டிருந்தனர். மற்றும் சில குடியானவர்கள் இராஜப் பிளவை நோய் கண்டாற்போல் வெடிப்புற்றுக் கரம்பாகிக் கிடந்த விளை நிலங்களைப் பண்படுத்திச் செப்பனிடும் வேலையில் வெகு மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இன்னும் சிலர் ஆற்று நீர்ப் பாய்ச்சலால் வெல்லப் பாகென இளகித் தளதளத்திருந்த சதுப்பு நிலங்களில் தமது ஏர் முனைகளைக் கொண்டு ஜீவ கோலம் போட்டுப் பூமாதேவியின் கர்ப்பப் பிராந்தியத்தில் ரசவாதம் நிகழ்த்திக் காட்டுவதிலே தீவிரமாக முனைந்திருந்தனர். இவை தவிர, சளுக்கிய ஆட்சியின் கொடுமைகளைத் தாள மாட்டாமல் குடிபெயர்ந்து சிதறி யோடிய கிராம மக்கள் சுதந்திரப் பொலிவு பெற்றவர்களாய்த் தத்தம் இல்லங்களை நோக்கிச் சாலைகளிலும் சிறு வழிகளிலும் கும்பல் கும்பலாகத் திரும்பி வந்து கொண்டிருப்பதும் தெரிந்தது. இந்த நெஞ்சினிக்கும் காட்சிகளையெல்லாம் மகிழ்ச்சிப் பெருமிதத்துடன் பார்த்துக்கொண்டே மெள்ள நடந்து வந்த பரமேசுவரவர்மன் சட்டென்று நின்றான். இவ்வளவு நேரம் அவனது நெஞ்சில் நிறைந்து முகத்தில் வழிந்து கொண்டிருந்த மகிழ்ச்சி யொளி மறைந்து துயரப் புகை சூழ்ந்தது. சோர்வுடன் பார்வையை நிமிர்த்தி அந்தச் சிற்றாற்றின் மறு கரைக்கு அப்பால் செலுத்தினான்.

அங்கே, சேதியக் கலைஞர் பரவாதி மல்லரின் இல்லமும், அதனைச் சார்ந்த அழகிய பூந்தோட்டமும், தென்னஞ் சோலையும் இடிந்து தகர்ந்து அழிந்த நிலையில் பார்க்கவே மிகவும் பரிதாபமாகத் தோற்றமளித்தது. கண்களைக் கசப்பாக்கும் அந்தக் காட்சிகளைக் காணச் சகியாமல் தன் பார்வையை வேறு பக்கம் திருப்பினான் பரமேசுவரவர்மன். அங்கேயும் முதலில் அப்புதர்க் குடிலே கண்ணில் பட்டு அவனது வருத்தத்தை மேலும் வளர்த்தது.


'எல்லாவற்றுக்கும் உரிமையானவனை உலக நாயகனுக்கு எத்தனை எத்தனையோ அழகுக் கோயில்களைச் சமைத்துக் கொடுத்த சேதியக் கலைஞர், இப்போது தமக்குரிய ஒரே சிறு இல்லத்தைப் பறி கொடுத்துவிட்டுத் தலைசாய்த்துப் படுக்கவும் இடமின்றி இந்தச் செடி கொடிப் புதரடியில் வந்து தங்கியிருக்கிறார் என்றால் இதைவிடப் பரிதாபமான விஷயம் வேறொன்று இருக்க முடியுமோ?' — வேதனையால் நெஞ்சம் விம்ம விடப் பெருமூச்சு விட்டான் பரமேசுவர வர்மன்.

'உங்களையும் என்னையும் ஒன்று சேர்த்து, உங்களுக்கும் எனக்கும் புகலிடமாக விளங்கி, உங்கள் உயிரையும் என் உயிரையும் காப்பாற்றிக் கொள்ள உதவிய அந்த அழகிய இல்லம் அழிக்கப்பட்டதை எண்ணும் போதெல்லாம், என் மனம் சொல்லொணா வேதனையடைகிறது. அரசே! அவ்வற்புதக் கலை இல்லம் இடிக்கப்பட்டதற்கு நாம்தான் காரணம்! நமக்காகவே தமது ஒரே சொத்தான அந்த இல்லத்தையும் தியாகம் செய்து விட்டு இப்போது காட்டி

லும் மேட்டிலுமாகக் கிடந்து தவிக்கின்றார் சேதியக் கலைஞர்! அதனாலேயே, அவருக்கென ஒரு வாசஸ் தலம் அமையும் வரையில், அவருடனே இந்தச் சிறு புதர்க் குடிலில் தங்கி, அவர் அநுபவிக்கும் இன்னல்களை நானும் அநுபவிப்பது என்ற முடிவுடன் இங்கே இருந்து வருகிறேன்!' – நேற்றிரவு ஆந்திர இளவரசி உத்தமசீலி மனம் உருகிச் சொன்ன இந்தச் சொற்களும் இப்போது நினைவில் வந்து மோதவே, அவனுடைய நெஞ்சத் துயரம் பன்மடங்காகப் பெருகியது. தெற்றி மேட்டை வருடியவாறு ஆழ்ந்த சிந்தனையில் வேரூன்றி நின்ற அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய் அந்தப் புதர்க் குடிலை நோக்கி விரைந்து நடக்கலானான்.

அவன் எதிர்பார்த்தது போலவே உத்தமசீலி அங்கு இல்லை. விடிந்தது முதல் அவனுடைய கண்ணில் படாமல் எங்கோ அவள் மறைந்திருந்தாள். அவன் எதிரே வந்து அவன் முகத்தைக் காண அவளுக்கு ஏனோ அத்தனை வெட்கமாகி விட்டிருந்தது அன்று!

தனக்குள் மெல்லச் சிரித்தவாறு புதர்க் குடிலினுள் பிரவேசித்து அங்குமிங்குமாகத் தன் பார்வையை ஓட்டினான். நேற்றைக் காட்டிலும் இன்று அதன் உட்புறத் தோற்றம் மிகுந்த வனப்புடன் விளங்கியது. புத்தம் புதிய பூக்களாலும் பசிய இலைக் கொடிகளாலும் பாங்குடன் அது அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவன் உண்பதற்காக ஒரு மரத் தட்டில் கனிகளும் கிழங்கு வகைகளும் வைக்கப் பெற்றிருந்தன. மற்றோர் இடத்தில் அவனுடைய ஆத்மாவுக்கு உணவு அளிக்கும் வகையில் சைவ சித்தாந்த நூற் சுவடிகள் சில அழகிய பட்டுத் துணியால் பொதிந்து வைக்கப் பெற்றிருந்தன. அருகில் பரமேசுவர வர்மன்



அவற்றிலெல்லாம் தன் கவனத்தைச் செலுத்தாமல் வேறேதோ ஒன்றைத் தேடிச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

குடிலின் கூரைப் பகுதியில் கட்டப் பெற்ற ஒரு சிறு பரண்மீது சேதியக் கலை சம்பந்தமான நூற் சுவடிகள் சிலவும், கோயில் அமைப்புக்களுக்கான சித்திரக் குறிப்புச் சீலைகள் சிலவும் அடுக்கி வைக்கப் பெற்றிருந்தன. அவற்றுடன், எழுதப்பெறாத ஏட்டோலைகள், எழுத்தாணிகள், வண்ணக் கிண்ணங்கள், தூரிகைகள் முதலானவையும் இருந்தன.

அவற்றைப் பார்த்து முகம் மலர்ந்த பரமேசுவரவர்மன், ஓர் ஏட்டோலையையும் எழுத்தாணியையும் எடுத்துக் கொண்டு வந்து இருக்கையில் அமர்ந்தான். ஒரு கண நேர சிந்தனை. அவன் முகத்தில் மகிழ்ச்சியொளி பரவியது; கையிலிருந்த எழுத்தாணி ஏட்டோலை மீது மிகவும் நிதானமாக ஊர்ந்து செல்ல ஆரம்பித்தது.

"வளமார் பல்லவ பூபதி அவர்களுக்கு எங்கள் வணக்கமும் வாழ்த்தும் உரித்தாகும்!"

சிந்தனை வயப்பட்டவனாய்த் தனிமையில் அமர்ந்து எழுதிக் கொண்டிருந்த பரமேசுவரவர்மன் சட்டென்று நிமிர்ந்தான். சேதியக் கலைஞர் பரவாதி மல்லரும், சந்திரலேகைச் சிற்றரசர் பெரும்பிடுகு முத்தரையரும் அந்தக் குடிலின் வாயிலில் மகிழ்ச்சி பொங்க வந்து நின்று கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னால், சிவிகைதூக்கி நாகோதரனும் உள்ளார்ந்த குதூகலத்துடன் தலை வணங்கி நின்று கொண்டிருந்தான்.

நீண்ட நாட்களுக்குப் பின், தனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சேதியக் கலைஞரைச் சந்தித்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் துள்ளி எழுந்து விரைந்து போய் அவரை அப்படியே ஆரத் தழுவி அணைத்துக் கொண்டான் பரமேசுவரவர்மன். உணர்ச்சிக் கொந்தளிப்பால் ஒருசில விநாடிகள் வரை ஊமையாகி நின்ற அவன், "நலம் தானே, கலைஞரே?" என்று அடைத்த குரலில் வினவினான்.

"பரம ஈசுவரரின் அன்பால் நன்னலமே!" என இரு பொருள்படக் கூறிப் புன்னகை புரிந்தார் பரவாதிமல்லர். "மன்னரவர்களைச் சந்திக்கத்தான் நேற்றுக் காலை இங்கிருந்து காஞ்சிக்குப் புறப்பட்டுப் போனேன். நடு வழியில் முத்தரையரைப் பார்க்க நேர்ந்தது. மன்னர்பிரான் இன்னமும் காஞ்சி நகருக்குச் செல்லவில்லை என்ற விவரமும் தெரிந்தது. எனவே...."

"வெண்முகில் நிலவைத்தான் நாடிச் சென்றிருக்கும் என்ற முடிவோடு நேரே இங்கு வந்து சேர்ந்தோம்!" என்று சேதியக் கலைஞரின் பேச்சை முடித்த முத்தரையர் கலகலவெனச் சிரித்தார்.

நாணக் குதூகலத்தால் முகம் சிவந்த பரமேசுவரவர்மன், சில விநாடிகளை மௌனத்தில் தோய்த்துக் கரைத்து விட்டு நிமிர்ந்து, "சரி; நாம் புறப்பட வேண்டியதுதானே?" என்றவாறு முத்தரையரைப் பார்த்தான்.

"ஆம், அரசே! தங்கள் வருகையை எதிர்நோக்கிக் காஞ்சிமாநகர் அலை மோதிக் கொண்டிருக்கிறது!" என்று உற்சாகத்துடன் பதிலிறுத்தார் முத்தரையர்.

"என் அருமை அன்னையார் பல்லவபுரம் அரண்மனையிலிருந்து காஞ்சிக்கு வந்து விட்டார்கள் அல்லவா?"

"நேற்று மாலையே மகாராணியாரைப் பல்லவபுரத்திலிருந்து சகல மரியாதைகளுடனும் அழைத்துப் போய்க் காஞ்சி அரண்மனையில் சேர்ப்பித்து விட்டேன். ஆனால்.... நமது மதிப்புக்குரிய பழையாறைச் சோழரும், அவரது குமாரி இளங்கோப்பிச்சியும், நம்முடைய இளவல் கோவிந்தவர்மரும்தான் இன்னமும் வந்து சேரவில்லை."

உள்ளார்ந்த வியப்புடன் அவரை உற்று நோக்கிய பரமேசுவரவர்மன், "ஏன் அவர்கள் வரவில்லை? பல்லவபுரத்திலிருந்து பழையாறைக்குப் போய் விட்டார்களா என்ன?" என்று அவசரமாக வினவினான்.

"ஆலம்பாக்கம் இளங்காரிக்குடையானின் இல்லத்தில் அவர்கள் தங்கியிருக்கிறார்களாம்....". என்று கவலை தோய்ந்த குரலில் கரகரத்தார் முத்தரையர்.

"தாங்கள் அவர்களைக் காஞ்சிக்கு வரும்படி அழைப்பு விடுத்தீர்கள் அல்லவா ?"

"இரத கஜ துரகங்களுடன் நமது விசேஷப் படை வீரர்களையும் அனுப்பி அவர்களைச் சகல மரியாதைகளோடு அழைத்து வருமாறு பணித்தேன். அத்துடன் நானே எதிர்சென்று வரவேற்கக் காஞ்சி நகர் எல்லையிலும் காத்திருந்தேன். ஆனால் அவர்கள் என் அழைப்பை ஏற்காமல் நமது பரிவாரங்களைத் திருப்பி அனுப்பி விட்டார்கள்."

பரமேசுவரவர்மன் இதைக் கேட்டுக் கலகலவெனச் சிரித்தான். "சமய சந்தர்ப்பம் பாராமல் எப்போதும் எல்லாவற்றிலும் குறும்பு செய்து குதூகலிப்பவர் பழையாறைச் சோழர்! இதுவும் அந்த வகையைச் சேர்ந்த ஒரு விளையாட்டுப் பதிலாகத்தான் இருக்கும். நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்; நமக்கு முன் அவர் காஞ்சிக்குப் போய் நம்மை வரவேற்கக் காத்திருப்பார்."

"நான் அப்படி நினைக்கவில்லை, அரசே! உண்மையாகவே பழையாறைச் சோழரின் மனம் ஏதோ ஒரு வகையில் இருண்டு விட்டிருக்கிறதென்றே எனக்குத் தோன்றுகிறது." — முகத்தைச் சுளித்துமுணுமுணுத்த முத்தரையர் மேலும் சொன்னார்: "ஆம், அரசே! பெருவளநல்லூர்ப் போரில் நமக்கு உதவியாகப் பழையாறைச் சோழரோ, கோவிந்தவர்மரோ வந்து சேரவில்லை அல்லவா? அதனால்தான் அவர்கள் நாம் பெற்ற வெற்றியில் பங்கு கொண்டு தங்களின் வீராபிஷேக முடிசூட்டு விழா வைபவத்தில் கலந்து கொள்ள மறுக்கிறார்கள் என்று நினைக்கிறேன்."

"வேடிக்கையான காரணம்! பெருவளநல்லூர்ப் போரில் நான் சளுக்கிய விக்கிரமாதித்தனை வென்று வாகை சூடுவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர்களே அவர்கள்தாமே? விக்கிரமாதித்தனைப் பாண்டியருடன் போர் தொடுக்கத் தூண்டியது பழையாறைச் சோழர் செய்த முதல் தரமான இராஜதந்திரம் அல்லவா? பிறகு அவர் தம்முடைய சோழியப் படைகளை என் இளவல் கோவிந்தவர்மனிடம் ஒப்படைத்து அவனை நெல்வேலிப் போரில் ஈடுபடுத்தியது அதைவிடப் பெரிய யுத்த தந்திரமாகும். எவ்வாறென்றால், விக்கிரமாதித்தன் நெல்வேலிப் போரில் தனது படை பலத்தில் பாதியை இழந்து பின்வாங்கி வந்த சமயம் நான் அவனைப் பெருவளநல்லூரில் இழுத்துப் போட்டதாலேயே என்னிடம் அவன் தோற்றோட வேண்டிய நிலைக்கு ஆளானான். அதுவும் தவிர, மாவீரனான சளுக்கியத் தளபதி வில்வேலியைப் பழையாறைச்சோழர் மறைந்திருந்து தாக்கி அவனை ஊனப்படுத்திப் போர்முனையில் உபயோகமற்றவனாக்கச் செய்து விட்டார். அத்துடன், ஏரான

போடு! போடாதே!



மான போர்க் கருவிகளைச் சேதியக் கலைஞரின் இல்லத்து நிலவறையில் சேமித்து வைத்து நமக்கு உரிய தருணத்தில் உதவும்படி செய்தார். இப்படி என்னுடைய வெற்றியின் ஒவ்வொரு முனையிலும் அவருடைய உதவிகளே மூல பலமாக நின்றிருக்கின்றன. உண்மை இவ்வாறிருக்க, அவர் பெருவளநல்லூர்ப் போரில் நேரிடையாக வந்து கலந்து கொள்ளாதது பற்றி யார்தாம் என்ன நினைக்க முடியும்?"— கண்களில் நன்றியுணர்ச்சி பளபளக்க இவ்வாறு சொன்ன பரமேசுவரவர்மன், அடைத்த குரலில் மேலும் கூறினான்: "இவற்றையெல்லாம்விட அந்தச் சின்னஞ் சிறு பெண் இளங்கோப்பிச்சி எனக்காகவும் என் நாட்டுக்காகவும் செய்த மாபெரும் உதவிகளை எண்ணும் போது அவள் இருக்கும் திசை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட வேண்டும்போல் தோன்றுகிறது அன்பரே! அவள் மட்டும் அந்தக் கடைசி நேரத்தில் அத்தனை விரைந்த சாதுரியத்துடன் எனது அன்னையை மீட்க முயன்றிராவிட்டால், இப்போது பல்லவ நாடு தன் மகாராணியைச் சளுக்கிய இளவரசன் விநயாதித்தனின் கத்திக்குப் பலி கொடுத்த நிலையில் பரிதவித்து நிற்க வேண்டி நேரிட்டிருக்கும்!"

திகைத்துத் திணறிவிட்ட முத்தரையர் தம்மைச் சமாளித்துக்கொண்டு தணிந்த குரலில் கரகரத்தார்: "மன்னரவர்களின் கூற்று முற்றிலும் சரியே! ஆனால், நமக்காகப் பல வகையிலும் உதவி செய்த பழையாறைச் சோழர், பெருவளநல்லூரில் போர் தொடங்கியதும் அதில் நேரிடையாகக் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்து விட்ட காரணம் என்ன? அவர் ஒதுங்கி நின்றது மல்லாமல், நமது இளவரசர் கோவிந்த வர்மரையும் அல்லவா நம்முடன் சேர விடாமல் தடுத்து விட்டார்?"

"அப்படி அவர்கள் ஒதுங்கியிருந்ததற்கு, நமது நன்மையை உத்தேசித்த ஏதேனும் ஓர் இராஜ தந்திர — யுத்த தந்திரக் காரணமாக இருக்கலாம். அதை நேரில் கேட்டு அறியாமல் அவர்களைப் பற்றி நாம் எவ்வித அவசர முடிவுக்கும் வரக் கூடாது. சரி; நானே நேரில் சென்று அவர்களை அழைத்து வருகிறேன். நீங்கள் காஞ்சிக்குப் போய் மற்றக் காரியங்களைக் கவனியுங்கள்."

இதைக் கேட்டுப் பரபரப்படைந்த முத்தரையர், "வேண்டாம் அரசே! நான் அந்தப் பணியை ஏற்று இப்போதே ஆலம்பாக்கத்துக்குப் புறப்படுகிறேன். தாங்கள் போர்க்களத்திலிருந்து நேரே தலைநகருக்குத்தான் போக வேண்டும். அதுதான் வெற்றி பெற்ற மன்னர்க்குரிய சம்பிரதாயம்" என்று படபடத்தார்.

பரமேசுவரவர்மன் அவரைக் குறும்பாக ஏறிட்டுப் பார்த்து அழகாகச் சிரித்தான். "ஓ...., இப்போது நான் சம்பிரதாயச் சிறையில் சிக்கிக் கொண்டிருப்பவன் அல்லவா? சரி; தங்கள் யோசனைப் படியே ஆகட்டும்!"

பல்லவ மன்னனிடமும், பரவாதி மல்லரிடமும் விடைபெற்றுக் கொண்ட முத்தரையர், ஆலம்பாக்கத்தை நோக்கிப் புறப்பட்டார்.

அத்தியாயம் ஆறு

மங்கலக் கனவு

"சீலனாரே! தாங்கள் எனக்குச் செய்த பேருதவிகளையும், பெரும் தியாகங்களையும் நான் என்றென்றும் மறக்க மாட்டேன். தங்களை விரைவில் காஞ்சியிலே சந்திப்பேன் என்ற நம்பிக்கையுடன் இப்போதைக்குத் தங்களிடமிருந்து விடைபெற விரும்புகிறேன்" என்று அன்பின் ஆழ்ந்த உணர்ச்சியோடு கூறியவாறு தன் இரு கரங்களையும் அவரெதிரே நீட்டினான் பரமேசுவரவர்மன்.

பரவாதிமல்லரின் கண்கள் மகிழ்ச்சியால் பனித்துப் பளபளத்தன. பாசப் பரிவுடன் அவனுடைய கரங்களைப் பற்றித் தம் கண்களில் ஒற்றிக்கொண்டு, "பல்லவப் பேரரசர் அவர்களுக்குச் சகல மங்களமும் உண்டாக வாழ்த்துகிறேன்!" என்று குரல் தழுதழுக்கக் கூறிக் கரம் கூப்பினார்.

அவரது அன்பு மொழியில் ஒரு கணம் மெய்ம்மறந்திருந்த பரமேசுவரவர்மன் மெல்லத் தலை நிமிர்ந்து தன்னை மீறிய ஓர் ஆவலுடன் அங்குமிங்குமாகப் பார்வையை ஓட்டினான். சிற்றாற்றங் கரையின் சரிவிலிருந்த ஒரு தாழம்புதருக்குப் பின்னாலிருந்து அவனுடைய புரவியான 'அதிசயம்' கனைக்கும் ஒலி கேட்டது. அவன் அவ்விடத்தை நோக்கித் தயங்கித் தயங்கி நடந்து சென்றான்.

அங்கே, சேணக் கலைகள் பூட்டிப் பயணத்துக்குத் தயாரான நிலையில் கம்பீரமாக நின்றிருந்தது அந்த வெண்ணி

பிராஸோவினுல் மெருகிடுங்கள்



மங்கலான பித்தளைச் சாமான் உங்கள் அறையின் சோபையைக் கெடுத்துவிடும். தவறாமல் பிராஸோவைக் கொண்டு தேய்த்துவந்தால், பித்தளைச் சாமான் பளபளப்புடனிருக்கும். உபயோகிக்க சுலபமான பிராஸோ சிக்கனமானதும் கூட.

உங்கள் பித்தளைச் சாமான்களை

பிராஸோவினுல்

வாரத்திற்கு ஒரு முறை
ஒவ்வொரு வாரமும் மெருகிடுங்கள்



அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWT/BR 3649

BR. 3

றப் புரவி. அதன் அருகில் நாணம், மகிழ்ச்சி, சோகம் ஆகிய மூன்று உணர்ச்சிகளையும் திரையாகப்போர்த்திக் கொண்டு ஒண்பொற் சிலையெனத் தலை குனிந்து நின்றிருந்தாள் உத்தமசீலி.

“இளவரசி! நான் சென்று வரலாமா?”

பூந்தென்றலில் அசைந்தாடும் இளம் பசலைக் கொடிபோல் உள்ளார்ந்த நடுக்கத்துடன் நின்ற உத்தமசீலி, மிரட்சியால் சுழலும் கண்களை மேலுயர்த்தி அவனைப் பட்டும் படாததுமாகப் பார்த்தாள்.

இளநகை புரிந்த பரமேசுவரவர்மன் அவளது தளிர்க் கரங்களை இதமாகப் பற்றித் தன் பரந்த மார்பில் புதைத்துக் கொண்டு, இளநுங்கு போன்ற அவளின் மோவாயைத் தனது முகத்துக்கு நேரே நிமிர்த்தித் தூக்கிக் கவிதை யெழில் வழியும் அவளுடைய கருநீலக் கண்களை இமைக்காமல் நோக்கினான். அவற்றில் எதையோ இழந்த துயரமும், எதையோ அடைந்த மகிழ்ச்சியும் இரண்டறக் கலந்து மிதப்பதைத் தன் இதயத்தின் இதயத்தால் ஸ்பரிசித்து உணர்ந்து கொண்ட அவன் மெய் சிலிர்த்து நெட்டுயிர்த்தான்.

“கண்ணே! கடுகளவு கவலைக்கும் உன் மனத்தில் இனி இடம் தரலாகாது. இன்னும் சில தினங்களில் உன்னைக் காஞ்சிக்கு அழைத்துப் போக எனது பரிவாரங்கள் இங்கு வரும். அதுவரையில் அந்த நன்னாளை எதிர்பார்த்து உனது நேரங்களை மகிழ்ச்சியுடன் கழிப்பாய் என்று நம்புகிறேன்.”

அவள் முகம் அன்றலர்ந்த செங்கமலமாக மலர்ந்தது. அவனது அணைப்பிலிருந்து நழுவிப் போய் ‘அதிசயத்தின்’ மேல் ஒய்யார ஒயிலுடன் சாய்ந்தவாறு அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள். அவனுடைய திண்மையான கழுத்தில் அந்தச் சவுக்கைக்காய் மாலை தவழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டதும் அவளுக்குச் சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்து விட்டது. “இன்னும் சில நாட்களில் விலைமதிப்பற்ற பல நவரத்தின மாலைகளை அணியப் போகும் தங்கள் கழுத்தில் இந்த எளிய சவுக்கைக்காய் மாலை ஏன் பிரபு?” என்று இனித்த குரலில் வினவினாள் அவள்.

பரமேசுவரவர்மனின் முகத்தில் ஓர் அபூர்வ அழகொளி படர்ந்தது. சுகானந்தக் கனவில் லயித்தவனாய் மெல்லக் கண் மூடிய அவன் அமைதியாகச் சொன்னான்: “எத்தனை எத்தனை விலையுயர்ந்த நவரத்தின மாலைகளை நான் அணிந்து கொண்டாலும் அவற்றைவிட அதிகம் மதிப்பு வாய்ந்த மாலையாக இது எப்போதும் என் கழுத்திலேயே இருந்து வரும், கண்ணே! ஏனென்றால், இதிலே என் ஆத்மாவின் ஆத்மா உறைந்திருக்கிறது! அத்துடன் நான் நம்பிப் போற்றிக் கடைப் பிடித்துவரும் எனது சமயத்தின் ஒரு புனித சின்னமாகவும் இது விளங்குகிறது!”

அவள் அவனை ஆர்வம் பொங்க அதிசயப் பரவசத்தோடு பார்த்தாள். அந்தப் போதைக் கிறக்கத்திலே, அவளது அதரக் கனியிதழ்களை அவன் கொத்திச் சுவைத்ததையும் அறியாமல் நின்றாள்.

பரமேசுவரவர்மன் தன் இதயத்தை அவளிடம் இறக்கி வைத்து விட்டு, வெறும் உடலை மட்டும் புரவிமேல் ஏற்றிப் போட்டுக்கொண்டு அங்கிருந்து காஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்றான்.

“இளவரசி! இளவரசி! இதோ, இந்த ஏட்டோலையைப் பார்த்தீர்களா, இளவரசி?” என்று மகிழ்ச்சி துள்ளும் குரலில் கேட்டுக்கொண்டே ஓடி வந்தார் பரவாதிமல்லர்.

பிரிவின் துயரால் வாடித் துவண்ட பூமாலையாக நின்றுகொண்டிருந்த உத்தமசீலி திடுக்குற்று நிமிர்ந்தாள்.

“இதோ, இந்த ஓலையைப் படித்துப் பாருங்கள், இளவரசி!” என்றவாறு தம் கையில் இருந்த ஓர் ஏட்டோலையைப் பரபரப்புடன் அவளிடம் நீட்டினார் பரவாதிமல்லர். அவள் அதை வாங்கிப் படித்தாள்:

> “காஞ்சிமா நகருக்கு அண்மையிலுள்ள கூரம் என்னும் நகரில், ஐந்து காணி நிலத்தைச் சேதியக் கலைஞர் பரவாதிமல்லருக்கு முற்றூட்டாகச் சாஸனம் செய்து, அந்த நிலத்திலே அவர் பிரியப்படி ஒரு மாளிகையும் அமைத்துக் கொள்ள எல்லாப் பொருளுதவிகளும் அநுமதி வழங்கப்படுமாக! — இது ஸ்ரீநிதி அத்தியந்தகாம பல்லவ பரமேசுவரவர்மனின் ஆணை.”

ஆந்திர இளவரசியின் மனம் ஆனந்தத்தால் பூரித்து மலர்ந்தது. அந்தக் கணமே ஏதோ ஒரு மகத்தான கலைச் சிருஷ்டிக் கனவிலே ஆழ்ந்தவராய், மெய்ம்மறந்து நின்றார் சேதியக் கலைஞர் பரவாதிமல்லர். (தொடரும்)

ரங்கன்: ஏன் சங்கரா! உன் மகனைக் கண் டாக்டருக்குப் படிக்க வைக்கப் போறேன்னு சொன்னியே! பல் டாக்டருக்குன்னு படிக்க வைச்சிருக்காப் போலிருக்கிறது!

சங்கரன்: ஆமாம், மனுஷனுக்கு இருக்கிற கண்களோ இரண்டுதான். வைத்தியம் செய்யிறேன் பேர்வழின்னு கெடுத்து வைச்சான்னு.... பல்லோ முப்பத்திரண்டு இருக்கு. இரண்டொன்று கெட்டுப் போனாலும் பரவாயில்லை, பாரு!

''சார், போஸ்ட்!'' 'கிணிங் கிணிங்' என்ற சைக்கிள் மணி ஒலியுடன் தபால்காரரின் குரல் கணீரென்று கேட்டது.

தெருவை ஒட்டிய முன் அறையில் ஏதோ ஒரு புத்தகத்தில் ஆழ்ந்திருந்த கீதா, சட்டென்று புத்தகத்தை அடையாளம் வைத்து மூடிவிட்டு எழுந்து வெளியே வந்தாள்.

தபாலை அவளிடம் கொடுத்துவிட்டுப் போனார் தபால்காரர்.

அது ஒரு கவர். கீதாவின் பார்வை அனுப்புபவர் முகவரி மீது ஓடியது. விழிகள் வியப்பில் விரிந்தன.

''மறுபடியும் கடிதம்!''

முகவரியை மௌனமாகப் படித்தது மனம்; இதழ் திறந்து வாய் முணுமுணுத்தது.

'பிரித்துப் படிக்கலாமா?'

ஏதோ ஓர் ஆசையில் ஒரு கணம் தயங்கினாள் கீதா. 'இல்லை. அப்பாவே பிரித்துப் படிக்கட்டும்!' ஆசையை அடக்கிவிட்டு, ''அப்பா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே உள் கட்டுக்குள் சென்றாள் கீதா.

''என்ன கீதா?'' என்று கேட்டபடி ராமசாமி வந்தார்.

''லெட்டர் வந்திருக்கப்பா!''. கவரை நீட்டினாள் கீதா.

''எங்கிருந்தம்மா கடிதம்?'' கேட்டுக்கொண்டே கையை நீட்டினார் ராமசாமி.

அவர் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை கீதா. அதற்குள் அவரே தெரிந்து கொண்டு 'ஓகோ!' என்று சொல்லிய படி கவரை உடைத்துக் கடிதத்தை எடுத்துப் படித்தார்.

''நமஸ்காரம். முன் கடிதத்துக்கு இதுவரை தாங்கள் பதில் எழுதவில்லை. மீனுவைக் கொடுப்பது குறித்துத் தாங்கள் காட்டும் மௌனத்தை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. என்றாலும் எங்கள் பிள்ளைக்குக் கட்டாயம் மீனுவைத் தாங்கள் கொடுக்க வேண்டும். சாதகமான தங்கள் பதிலைக் கண்டு மேற்கொண்டு ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்க இருக்கிறோம்.

ரங்கநாதம்''

படித்துவிட்டு மௌனமாகக் கடிதத்தை மடித்து மடியில் வைத்துக் கொண்டார் ராமசாமி. கீதாவை ஏறிட்டுப் பார்த்தார். அவள் முகத்தில் எந்த விதமான சலனமுமில்லை.

''என்ன மறுபடியும் எழுதிட்டாங்களா?''

திடீரென்று கூடம் அதிர்ந்தது. கூர்மைக்குரிய காமாட்சி உருட்டிய விழிகளும், வியர்த்த மூக்குமாக ராமசாமி எதிரே வந்து நின்றாள்.

தாயைக் கண்டு கீதா சிரித்து விட்டாள்.

''சிரிக்காதேடி பெண்ணே! வயிறு எரியுது!' என்றவள், ''ஆமாம், என்ன எழுதியிருக்காங்க?'' என்றாள். குரலில் படபடப்பும் ஆத்திரமும் அளவுக்கு மீறி இருந்தன.

''மீனுவைக் கொடுக்கச் சொல்லி மறுபடியும் கேட்டிருக்காங்க!'' எந்த விதப் பரபரப்பும் காட்டாமல் அமைதியாகச் சொன்னார் ராமசாமி.

''கேப்பாங்க, கேப்பாங்க. பாத்துட்டுப் போறது ஒரு பெண்ணை, கொடுக்கச் சொல்லிக் கேக்கறது இன்னொரு பெண்ணை. இதை ஊர், உலகம் ஒப்புமா? அடுக்குமா இது?''



இடம்

கே. ஏ. என்

பொரிந்து தள்ளினாள் காமாட்சி. ஊது உலைபோல் அவளுக்கு மூச்சு இரைத்தது:

''ஏன் இப்படிக் கூச்சல் போடறே? சும்மா இரு. இப்ப என்ன நடந்து போச்சு?'' என்று மனைவியை அதட்டினார் ராமசாமி.

''எல்லாம் நடந்த பிறகுதானே நீங்கள் விழிப்பீங்க. இன்னிக்கு நேத்தா உங்களைப் பாக்கறேன்!'' என்று நொடித்தாள் காமாக்ஷி.

''சரி, சரி. சும்மாயிரு!'' என்று சொல்லி விட்டு வெளியே போய்விட்டார் ராமசாமி. இன்னும் வீட்டிலிருந்தால் தம் மனைவி தம்மைச் சல்லடைக் கண்களாகத் துளைத்துவிடுவாள் என்று அவருக்குத் தெரியும். பேசாமல் நடையைக் கட்டிவிட்டார்.

எல்லாவற்றுக்கும் காரணமான மீனு, மருண்டு போய், பின்கட்டு வாசற்படியருகே நின்று கொண்டிருந்தாள்.

'கடவுளே! பட்ட காலில்தான் படும் என்றால், சோதித்த மனத்தையே சோதிக்கிறாயே. இது நியாயமா? என்னால் எப்படித் தாங்கமுடியும்?' மனம் கிடந்து தவித்தது. மருண்டு, பயந்து கிடந்த விழிகள் நீர் தேங்கி, வழிய இடம் பார்த்தது. மேனி நடுங்கிச் செத்தது.



காமாட்சி எதிரே வந்தாள்.

சர்வாங்கமும் ஒடுங்கி, புலியின் முன் ஆடாக நின்றாள் மீனு.

''மூதேவி! எல்லாம் உன்னால் வந்த வினை. சுமையாய் வந்தவளை அன்னிக்கே ஒழிச்சிக் கட்டியிருக்கணும். மடியில் நெருப்பைக் கட்-



''கலா! வாழ்க்கையில் சந்தோஷம் என்பது புத்தகத்தில்தான் இருக்கிறது. என்ன சொல்றே!''

''ஆமாம்! பாங்கு 'பாஸ்' புத்தகத்தைப் பொறுத்துத்தானிருக்கிறது!''

டிக்கிட்டுப் புடவை பத்திக்கிட்டதேன்னு என்ன பிரயோசனம்?'' நிஷ்டூரமாகப் பேசி விட்டு, மீனாவின் தலையில் நறுக்கென்று குட்டி விட்டுப் போனாள் காமாட்சி.

பொங்கித் ததும்பிய கண்ணீர் கன்னத்தில் அருவியிட்டது.

கீதா தன் உடன் பிறவாத் தமக்கைக்காக நெஞ்சுருகினாள்.

''வா, அக்கா என் அறைக்குப் போய்ப் பேசலாம்!'' என்று மீனாவைக் கைப்பிடித்து அழைத்துச் சென்றாள் தன் அறைக்கு.

''அக்கா! ஏன் இவ்வளவு விரக்தியோடு இருக்கே? உன் கஷ்டத்தைப் பார்த்துத்தான் ஆண்டவன் இப்படி ஓர் இடத்தை உனக்குக் கொடுத்திருக்கான். நீ....'' கீதா பேச்சை முடிக்கவில்லை. மீனா தொடர்ந்தாள்.

''வேண்டாம் கீதா, அதைப் பற்றிப் பேசாதே! ஓரளவுக்காவது நிம்மதியாயிருந்த என்னை இப்படி நிலைகுலைய வைச்சது அந்த முதல் கடிதம். குற்றுயிரையும் போக்கடிக்க இன்னிக்கு இன்னொரு கடிதம். வேண்டாம் கீதா. அதைப் பற்றிப் பேசாதே. அது கடிதம் அல்ல. என் கழுத்தைக் கவ்விய கருநாகம். பேசாதே கீதா, பேசாதே!''

'ஓ'வென்று அலறினாள் மீனா.

''அக்கா! இப்படிப் பிடிவாதம் பிடிச்சா எப்படி? என்னைப் பார்க்க வந்த மாப்பிள்ளைக்கு உன்னைப் பிடிச்சது. பார்க்க வந்தது என்னவோ என்னைத்தான். ஆனால் அவர் மனசுக்கு நீதான் பிடித்தவளாயிருக்கே. தடை சொல்லாமே இந்த இடத்தை ஒத்துக்கோ அக்கா!'' மீனாவைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள் கீதா.

''முடியாது. முடியவே முடியாது. என்னை வற்புறுத்தாதே கீதா. நீ சீரும் சிறப்புமா வாழ வேண்டிய இடம் அது.''

''அக்கா! மறந்தும் அதைச் சொல்லாதே. திருமணம் என்பது உன் கையிலோ அல்லது என் கையிலோ இல்லே. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று எழுதின எழுத்தை அழித்து எழுத ஆண்டவனே ஒப்ப மாட்டான். தெரிஞ்சுக்கோ!'' என்று உறுதியுடன் பேசினாள் கீதா.

''உண்மைதான் கீதா. நான் உணர்ந்திருக்கிறேன். திருமணங்களை ஆண்டவன் தான் கருணையுடன் முடிக்கிறான். ஆனால் இந்தத் திருமணத்தை ஆண்டவன் ஒரு போதும் இப்படி முடித்திருக்கவே மாட்டான். தங்கையின் வாழ்வில் தமக்கையைப் புகுத்தி, நல்ல குடும்பத்தில் ஒரு நாகத்தை உண்டாக்கும் வகையில் இப்படி ஒரு திருமணத்தை ஆண்டவன் நிச்சயம் முடித்திருக்க மாட்டான்.'' அமைதியுடன் பேசினாள் மீனா.

''இப்படி இடக்கு வாதம் பண்ணினால் எப்படி அக்கா? காலம் எல்லாம் அம்மா செய்த கொடுமைக்கு ஆண்டவன் இப்படித் தண்டனை அளித்திருக்கான். உனக்குப் புரிய வில்லையோ?'' கீதா தவிப்புடன் கேட்டாள்.

விரக்தியுடன் சிரித்தாள் மீனா.

''நீதான் தப்பாப் புரிஞ்சுக்கிட்டே கீதா. ஆண்டவனின் நீதி ஒருபோதும் தவறாது. அம்மா தப்பு செய்தால் — அப்படி நான் நினைக்கலே — அம்மாவைத்தான் ஆண்டவன் தண்டிப்பான். அம்மா செய்த தப்புக்காக உன் வாழ்வை அவன் கெடுக்க மாட்டான்!''

''ஐயோ அக்கா. எதைச் சொன்னாலும் எதையாவது சொல்லி என்னை அடக்கப் பாக்கிறியே.''

''நீ என்னடி அவளை மிரட்டறே? அவள் ஒத்துக்கிட்டால் மட்டும் இந்தக் கல்யாணம் நடந்திடுமா? ஒத்துக்கல்லாட்டம் நான் ஒருத்தி இருக்கேனே? என்னை மீறி இந்தக் கல்யாணம் நடந்துடுமோ?''

இடிபோல் இறங்கியது காமாட்சியின் குரல். எல்லாவற்றையும் அவள் கேட்டுக்கொண்டு தான் இருந்தாள்.

''அடி துப்புக்கெட்ட பெண்ணே! நீ போய் வாழ வேண்டிய இடத்திலே ஒரு உதவாக்கரையைப் போய் வாழச் சொல்றியே புத்தி யிருக்கா?'' ஆத்திரத்துடன் கீதாவின் மீது பாய்ந்தாள் காமாட்சி.

''போதும் நிறுத்தும்மா. பேச வந்துட்டே. உலகம் இந்த வீட்டுக்குள்ளேயா இருக்கு? நான் வாழ்ந்தால் என்ன? அக்கா வாழ்ந்தால் என்ன? அக்காவும் இந்த வீட்டுப் பெண் தானே? உன் உடன் பிறப்புப் பெற்ற பெண் தானே? கொஞ்சமாவது எண்ணிப் பார்த்தியா? பேச வந்திட்டியே?''

ஆத்திரம் தாளாமல் பேசினாள் கீதா.

''அடிப் பாவி! அடிப் பாவி! என் வயித்திலே பொறந்தவளா நீ? இரணியன் வயித்திலே பிரகலாதன் பிறந்த மாதிரி பொறந்திருக்கியே? அடி கீதா! இவ என் பெண்ணா? என் பொண்ணோட வாழ்க்கையைப் பறிக்க வந்த பேய்'' என்று ஆத்திரத்துடன் கொட்டி முழக்கினாள் காமாட்சி.

'ஓ' வென்று அழுதுகொண்டே ஓடினாள் மீனா. தாயை ஒரு முறை முறைத்து விட்டு வெளியே போனாள் கீதா.

நடந்தது இதுதான்:

பத்து நாட்களுக்கு முன் —

கீதாவைப் பெண் பார்க்கச் சென்னையிலிருந்து வந்தார்கள். வீட்டு வேலைகள் அனைத்தையும் மீனாவிடமிருந்து பிரிய வாங்கிய காமாட்சி, ''அடி மீனா, அவங்க வர்றப்பவும் சரி, போறப்பவும் சரி, உன் தலையைக் காட்டினே, தொலைச்சிடுவேன். தோட்

உங்கள் கூந்தலின் உண்மை அழகை வெளிப்படுத்த

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் உபயோகியுங்கள்



உங்களுக்குப் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும், கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத் தவறாமல் தேய்த்து வருவது கூந்தல் அடர்த்தியாக அழகுடன் வளர்வதற்கு இன்றியமையாதது!

தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்கால்களிலும், கேசத்திலும் தேய்த்துக் கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகிவிட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.

எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் உங்கள் கூந்தலின் உண்மையழகை வெளிப்படுத்த கால்கேட் உதவுகிறது.





மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்

[illegible]

டத்துப் பக்கமே இருக்கணும்; தெரியுதா? ஜாக்கிரதை!'' என்று எச்சரித்து வைத்தாள்.

உடன் பிறந்த தமக்கை பெண்தானே என்று காமாட்சி எண்ணவில்லை. வேண்டாது வந்து சேர்ந்த வினையாகவே எண்ணினாள்.

வந்தவர்கள் திருப்தியுடன் மீனாவைப் பார்த்தார்கள். பெண் பார்க்கும் படலம் முடிந்ததும் ''இப்படியே வீட்டைச் சுற்றிப் பார்க்கலாமே!'' என்று பிள்ளை வீட்டாரை அழைத்தார் ராமசாமி.

வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் தோட்டத்துப் பக்கம் நுழைந்தபோது கிணற்றடியில் துவை கல்லின் மீது உட்கார்ந்து கொண்டிருந்த மீனு தவித்துப் போய்விட்டாள். இப்படி எதிர்பாராமல் அவர்கள் வருவார்கள் என்று அவள் நினைக்கவேயில்லை. சட்டென்று உள்ளேயும் போக முடியவில்லை. மறைந்து நிற்க இடமும் இல்லை. நெருப்பின் மேல் நிற்பவள் போல் துடித்தாள் மீனு.

''பெண் யாரோ?'' மாப்பிள்ளை ராமநாதனின் தந்தை ரங்கநாதம் கேட்டார்.

''எல்லாம் நம்ம வீட்டுப் பெண்தான். மீனாவோட பெரியம்மா பெண். அப்பா அம்மா போன பிறகு இங்கேயே வந்து வளர்ந்து வர்ரு. ஏதோ படிச்சிருக்கா. தங்கமான குணம். பேரு மீனு!'' ராமசாமி தம்மை மறந்து வர்ணிக்க ஆரம்பித்தார்.

பல்லை நறநறவென்று கடித்தாள் காமாக்ஷி.

''பாருங்கோ. அவ அழகுக்கு ராஜா மாதிரி மாப்பிள்ளை வருவார். பகவான் நிச்சயம் கருணை காட்டுவான்!'' மனம் கசிந்து பேசினார் ராமசாமி.

மாப்பிள்ளை ராமநாதனின் பார்வை அவனையும் அறியாமல் மீனுவின் மீது பதிந்தது.

தெய்வச் சிலை போல் தலை தாழ்ந்து, நிற்கும் கோலம் அவன் நெஞ்சை வெகுவாகக் கவர்ந்தது.

எளிய உடை, எந்த விதப் பூச்சுமில்லாத முகம், தங்கம் போல் மின்னும் மேனி, அடங்கி, ஒடுங்கி நிற்கும் நிலையிலும் பெண்மையின் பேரெழில் குத்து விளக்குச் சுடராக ஒளிர்ந்தது.

ராமநாதன் வியந்தான்.

''அடுத்த வாரம் எழுதுகிறோம்!'' என்று வந்தவர்கள் விடை பெற்றுக் கொண்டார்கள்.

வந்தவர்கள் வீட்டை விட்டுத் தாண்டியதும் ராமசாமியைப் 'பிலுபிலு'வென்று பிடித்துக் கொண்டாள் காமாட்சி.

''வந்தவங்க முன்னாலே பெத்தவளைப் பத்திப் பேசாமே, ஊரார் பெண்ணைப் பத்தி அளக்க ஆரம்பிச்சிட்டீங்களே!''

அவள் போட்ட கூச்சலைக் கேட்டுக் கொஞ்சம் அதிர்ந்துவிட்டார் ராமசாமி.

ஒரு வாரம் கழித்து எழுதுவதாகச் சொன்னவர்களிடமிருந்து மூன்றாம் நாளே கடிதம் வந்துவிட்டது. ''பிள்ளைக்கு மீனுவைக் கொடுத்தால் தேவலாம்!'' என்று மாப்பிள்ளையின் தந்தை எழுதியிருந்தார்.

'லபோ திபோ' என்று அடித்துக்கொண்டாள் காமாட்சி. மீனாவைத் திட்டித் தீர்த்தாள்; ராமசாமியை ஒரு பாட்டம் பாடினாள், மீனுவை அடித்தே விட்டாள்.

மீனாவுக்குத் தாயின் போக்கு வியப்பைத் தந்தது. கூடவே ஆத்திரமும் பொங்கியது.

''அம்மா! எதுக்கு அக்காவை அடிக்கறே?'' என்று ஆத்திரம் தாளாமல் கத்தினாள்.

''அக்காவா, அக்கா! உன் வாழ்வுக்கே எமனாக வந்தவளா உன் அக்கா? இன்னிக்கே அவளை வீட்டை விட்டு ஓட்டறேன்.'' வயிற்றெரிச்சலில் கத்தினாள் காமாட்சி.

''அம்மா! உலகத்திலே இது ஒரு இடம் தான் இடமா? வேறே இல்லவே இல்லையா? பேசாமல் அக்காவை அவருக்கே கட்டி வை. அதுதான் நல்லது.'' படித்தவள் அவள்; நிலையறிந்து பேசினாள்.

''கட்டி வைக்கணுமா? கட்டி வைச்சு உரிக்கிறேன் தோலே!'' என்று பல்லைக் கடித்தாள் காமாட்சி.

இப்படி ஒரு கடிதம் வரும் என்று ராமசாமி கூட எதிர்பார்க்கவில்லை. என்றாலும் அவருக்கு ஒரு நிறைவு. ஆண்டவனாகப் பார்த்து இதை முடித்திருக்கிறான் என்றே நம்பினார்; ஆனால் காமாட்சியின் மிரட்டலைத்தான் எப்படிச் சமாளிப்பதென்று புரியாமல் திணறினார். வந்த கடிதத்துக்குப் பதில் போடாமல் நாளைத் தள்ளிப் போட்டார்.

மறுபடியும் மீனுவைக் கேட்டு இரண்டாவது கடிதம் வந்து விட்டது.

வெளியில் போயிருந்த ராமசாமி வீட்டினுள் நுழைந்தார்.

''என்ன முடிவு செஞ்சீங்க? ஒண்ணு சொல்றேன். என் பொண்ணு வாழவேண்டிய இடத்திலே இன்னொருத்தின்னு அதை என்னாலே சகிக்க முடியாது. நம்ப வீட்டுக் கிணத்திலே நிறையத் தண்ணீர் இருக்கு, கரண்ட் இருக்கு, உத்தரம் இருக்கு. இதென்

ஒவ்வொரு புராணத்துக்கும் கருவாக ஒரு சரித்திர உண்மை அமைந்துள்ளது. மேன்மையான உண்மைகளைப் பலவித வடிவங்களில் மனித குலத்துக்குக் கற்பிப்பதே புராணங்களின் நோக்கமாகும். அவற்றில் சரித்திர உண்மை எதுவும் பொதிந்திராமற் போனாலும், அவை நம் மனத்தில் பதிப்பிக்கிற மிக உயர்ந்த உண்மைக்கு மகத்தான பிரமாண நூலாக அமைகின்றன. – ஸ்வாமி விவேகானந்தர்

லாம் உங்களுக்குத் தெரியும். நீதாவைத்தான் தர முடியுமென்று எழுதுங்க!" கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித்துவிட்டாள் காமாட்சி.

ராமசாமி பயந்து விட்டார். மனைவி தற்கொலைக்குத் தயாராகி விட்டாள் என்பது அவரால் தாங்க முடியாததாக இருந்தது.

'இதுவும் ஆண்டவன் சித்தம்' என்று நினைத்துக் காமாக்ஷி சொன்னபடியே எழுதிவிட்டார்.

குடும்பமே வியப்படையும்வண்ணம், "சரி, நீதாவைத்தான் தாருங்கள்!" என்று பதில் வந்தது. காமாட்சி குளிர்ந்து போனாள்.

திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

திருமணச் சந்தடிகள் அடங்கின. மாப்பிள்ளையும், நீதாவும் முன் அறையில் பேசிக்கொண்டிருப்பதை அறியாத மீனு எதையோ எடுக்க உள்ளே நுழைந்தாள். நிலைமையை அறிந்து அதே வேகத்தில் திரும்பினாள்.

"நில் மீனு!" மாப்பிள்ளை ராமநாதனின் குரல் கம்பீரமாகக் கேட்டது.

அப்படியே நின்றாள் மீனு. நீதா வியப்புடன் கணவனைப் பார்த்தாள்.

"மீனு இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்!" என்று தன் பாக்கெட்டிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் நீட்டினான் ராமநாதன்.

மீனு அதை வாங்கவில்லை.

ஆனால் நீதா வாங்கிப் படித்தாள்.

"இந்தக் கடிதம் எழுதும் நான் யாரென்று உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. என்றாலும் உங்களின் நன்மையைக் கருதியே இதை உங்களுக்கு எழுதுகிறேன். நீங்கள் எங்களூரில் ராமசாமி அவர்களின் பெண்ணைப் பார்த்துவிட்டு, பிறகு அவர்கள் வீட்டில் வளரும் மீனுவைக் கேட்பதாக எழுதியிருக்கிறீர்கள். அந்த மீனுவைப் பற்றி உங்களுக்கு ஏதும் தெரியாது. அவள் பரம ஏழை. அதோடு அநாதை. அதிகம் படிக்காதவள். இதற்கெல்லாம் மேலாக அவளுக்கு ஒரு காதலன் உண்டு. இதை எழுதும் நானே கூட அந்தக் காதலனாக இருக்கலாம். எனவே உங்களுக்கு அந்த மீனு வேண்டாம். நன்கு படித்த பெண்ணான நீதாவையே மணந்து கொள்ளுங்கள்."

தலைப்புமின்றி, வாலுமின்றி மொட்டையாக இருந்த அந்தக் கடிதத்தைப் படித்த நீதா "இது அபாண்டம். அநியாயம். இதை எழுதினவங்க நல்லா இருப்பாங்களா?" என்று பதறினாள்.

மீனு கண்ணீர் வடித்தாள்.

"நீதா, பொறுமையாயிரு. இதை எழுதினவங்க யார் தெரியுமா?" என்றான் ராமநாதன்.

"யார்? என் அம்மாவா? சொல்லுங்க!" துடித்தாள் நீதா.

"மீனுதான். ஆமாம். இதை எழுதினது மீனுதான்." அமைதியுடன் பதில் சொன்னான் ராமநாதன்.

"ஆ!"

நீதா வாயடைத்துப் போய்விட்டாள்.

"கேள் நீதா. இதை எழுதியது மீனுவே தான். ஓர் ஆணின் கையெழுத்துக்கும், ஒரு பெண்ணின் கையெழுத்துக்கும் உள்ள வித்தியாசத்தையும், ஓர் ஆண் எழுதினால் அதில் இருக்கும் பாணியையும், ஒரு பெண் எழுதினால் அதிலிருக்கும் பாணியையும் என்னால் புரிந்துகொள்ள முடியாது என்று நினைத்து இதை எழுதிவிட்டாள் மீனு.

"மீனுவை மணக்க ஆசைப்பட்டது உண்மை. ஆனால் மீனு ஏன் இந்தக் கடிதத்தை எழுதினாள், எப்படிப்பட்ட சூழ்நிலை இதை எழுத வைத்தது என்பதை என்னால் உணர முடிந்தது. அன்று புறக்கடையில் மீனுவைப் பார்த்தபோதே அவள் இந்த வீட்டில் எந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டேன். அவளுக்கு வாழ்வு தர எண்ணியே அவளைக் கேட்டு எழுதச் சொன்னேன். ஆனால் மறுப்பு வந்துவிட்டது. அதை நான் பொருட்படுத்தியிருக்க மாட்டேன். ஆனால் மீனுவின் கடிதம் என்னை நெகிழச் செய்துவிட்டது. பவித்திரம் நிரம்பிய ஒரு பெண், தன் மீது தானே மண்ணைப் போட்டுக்கொண்டு நெருக்கிக்கு வாழ்வு தர முன் வருகிறாளே என்று வியந்தேன். ஒரு வேளை நான் அவளை மணந்திருந்தால், தன் முழு மனதை அவள் எனக்குத் தந்திருக்க மாட்டாள். காரணம், வழியே போய்க் கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாக மடியில் விழுந்த மாம்பழத்தைச் சட்டென்று சாப்பிட்டுவிட முடியாது. முன்னும் பின்னும் பார்த்து, பயந்து பயந்துதான் சாப்பிட முடியும். அதுபோல் வேறொருத்திக்குக் கிடைக்க வேண்டிய வாழ்வு இது. எதிர்பாராமல் நமக்குக் கிடைத்தது. அநுபவிக்கிறோம் என்ற தவிப்பு அவள் மனத்தில் முள் முனை மாதிரி உறுத்திக் கொண்டே இருக்கும். அதனால் அவள் வாழ்வும் பாழாகும். அவளை விரும்பி மணந்த என் வாழ்வு பாழாகும். அதைத் தவிர்க்கவே உன்னை மணந்தேன் நீதா. என்றாலும் மீனுவை நல்ல இடத்தில் வாழ வைக்க வேண்டிய பொறுப்பு இனி என்னுடையது. காரணம் அவள் என் மைத்துனி அல்ல... தங்கை!"

உணர்ச்சியுடன் பேசினான் ராமநாதன்.

"அக்கா!" பாய்ந்து சென்று மீனுவைக் கட்டிக் கொண்டாள் நீதா.

"அக்கா! எனக்காகவா இப்படி ஓர் அபாண்டத்தை உன் தலையில் ஏற்றிக் கொண்டாய்?" என்று நீதா கதறினாள்.

"நீதா! அவரவர் இருக்க வேண்டிய இடம் இருக்கிறது. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன!"

மீனு சிரித்தாள். அடக்கம் சுடர் விட்டது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

மக்ளீன்ஸ் பற்களை வெண்மையாக்குகிறது என்பதற்கான ஆதாரம்

1 அதை உணருங்கள்

பற்களில் கறை படிந்திருக்கிறதா? அது இயற்கையான வெண்மையை மறைக்கிறது. இப்போது மக்ளீன்ஸ் கொண்டு பல்துலக்கி அது கறையை எவ்வாறு அகற்றுகிறது என்று உணருங்கள்.

2 அதை ருசியுங்கள்

நீங்கள் அனுபவிக்கும் அந்த குளுமையான ருசிக்குக் காரணம் மக்ளீன்ஸில் இருக்கும் 3 கலவைப் பொருள்களும் திறம்பட வேலை செய்வதால்தான். அவை பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கி பாதுகாக்கின்றன.

3 அதைப் பாருங்கள்

உங்கள் புன்முறுவலில் காணும் வெண்மையைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள். உங்கள் பற்களை முன்பிருந்ததைவிட மக்ளீன்ஸ் பற்பசை இன்னமும் வெண்மையாக்குகிறது. . நீங்களே இதைப் பரீட்சித்துப் பாருங்கள்.

வெண்மை
யான
பற்களுக்கு
மக்ளீன்ஸ்



MTP/1/P/1/63 TM A

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Ceylon

